


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2047*

*மலர் - 8 இதழ் - 7 அக்டோபர் - 2016*

கௌரவ ஆசிரியர்
முனைவர் **அ.அ.மணவாளன்**

ஆசிரியர்
**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்
**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு
*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு
*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.com
இணைய தள முகவரி: **www.keetru.com**

**நன்கொடை ₹ 20.00, ஓர் ஆண்டு ₹ 240.00**
**வெளிநாட்டுச் சந்தா - *25 டாலர்***

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**




## பொருளடக்கம்


1. படித்துப் பாருங்களேன்... — ஆ.சிவசுப்பிரமணியன் - 4
2. மேலை மருத்துவ எழுச்சியும் தமிழ் மருத்துவ வீழ்ச்சியும் — டாக்டர் சு.நரேந்திரன் - 12
3. அறிவார்ந்த சமூகம் — சுப்ரபாரதிமணியன் - 20
4. சிங்காரவேலரின் கவலை — பா.வீரமணி - 24
5. தமிழ்ச் சமூக வரலாற்றில் வண்ணார் — க.காமராசன் - 30
6. ஓய்ந்துவிட்ட விரல்களின் உரையாடல் — ஜி.சரவணன் - 36
7. மூன்று கவிதைத் தொகுதிகள் — பாவண்ணன் - 40
8. காரைக்குடியில் ஜீவா — சேதுபதி - 49
9. வீழ்ச்சி கல்விச்சூழல், ஆசிரியர் இயக்கம் குறித்தான வரலாற்று புதினம் — இசைக்கும்மணி - 58
10. பண்டைக் கவிஞர்களின் அமைதியாக்கச் சிந்தனைகள் — முனைவர் இரா.வெங்கடேசன் - 61



படித்துப் பாருங்களேன்...

# தமிழர்களின் நீர் மேலாண்மை: 2

ஆ.சிவசுப்பிரமணியன்

**இயற்கையாகத் தன்போக்கில் ஓடும் ஆறுகளின்** நீரைப் பயன்படுத்தி வேளாண்மை செய்ததன் அடுத்த கட்டமாக, ஏரிகள், குளங்களை உருவாக்கி அவற்றில் ஆற்று நீரையும், மழை நீரையும் தேக்கி வைத்துப் பயன்படுத்தும் முறையைப் பண்டைத் தமிழர்கள் மேற்கொண்டிருந்தனர்.

இது தொடர்பான செய்திகளை, பேராசிரியர்கள் கி.இரா.சங்கரன் (2011,) க.ராஜன் (2008) ஆகியோர் கள ஆய்வின் அடிப்படையிலும், கல்வெட்டுகளின் துணையுடனும் வெளிக்கொணர்ந்துள்ளனர். எஸ்.எம்.ரத்னவேலுவும், பழ.கோமதிநாயகமும் இணைந்து (2006) ஆங்கிலத்தில் நூலொன்றை எழுதியுள்ளனர்.

இவர்களுள் கி.இரா.சங்கரன் புதுக்கோட்டை மாவட்டக் கல்வெட்டுக்களை மட்டுமின்றி, பல அரிய தரவுகளைத் திரட்டி ஆய்வு செய்துள்ளார். மயிலாடுதுறையில் உள்ள கல்லூரி ஒன்றில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணிபுரிகிறார். இவர் 'தமிழக வரலாற்றில் நீர்ப்பாசனம்:

புதுக்கோட்டை வட்டாரத்தை முன்வைத்து' (கி.பி.800 முதல் 1800 வரை) என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றுள்ளார். தமிழரின் நீர்மேலாண்மை தொடர்பான இவரது ஆய்வுக் கட்டுரைகள், 'ஆவணம்', 'சமூக விஞ்ஞானம்' ஆகிய ஆய்விதழ்களில் வெளிவந்துள்ளன. ஆர்.எஸ்.சர்மா, ரொமிலா தாப்பர் ஆகிய சிறந்த வரலாற்றிஞர்களின் நூல்களைத் தமிழாக்கம் செய்துள்ளார்.

பாசனக் குளங்கள் குறித்த ஆங்கில நூலை எழுதியுள்ள ரத்னவேல் பொதுப்பணித்துறையில் முதன்மைப் பொறியாளராகப் பணியாற்றி நீர் மேலாண்மையில் முப்பத்தாறு ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். அண்ணா பல்கலைக் கழகத்தில் திட்ட ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றி உள்ளனர். பாரம்பரிய நீர் மேலாண்மை தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளை, தேசிய அளவிலான கருத்தரங்கங்களில் வழங்கி உள்ளார்.

இந்நூலின் இணையாசிரியரான கோமதி நாயகம் குறித்த அறிமுகம் சென்ற இதழில் வெளியாகியுள்ளது.

•••

இங்கு அறிமுகமாகும் நூல்கள் ஒவ்வொன்றும் கூறும் செய்திகளைத் தனித்தனியாகக் கூறாமல் இவை கூறும் செய்திகள் பொருள் அடிப்படையில் இக்கட்டுரையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**குளங்கள்**

மனித சமூக வளர்ச்சியில் வேளாண்மைக்கு முக்கிய இடமுண்டு. தொடக்ககால வேளாண்மை மழையை எதிர்நோக்கிய வேளாண்மையாகவே இருந்தது. இதையே புன்புல வேளாண்மை என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. உரியபருவத்தில் மழை பெய்யாவிடில் வேளாண்மை அழிவுக்காளானது.

இதனால் மழைபெய்யும் காலங்களில் மழை நீரைச் சேமிக்கும் எண்ணம் தோன்றியது. இச்சிந்தனையில் இருந்தே குளங்கள் உருவாயின. குளங்களில் இருந்து விளைநிலங்களுக்கு நேரடியாக நீர் பாய்ச்சி மேற்கொண்ட வேளாண்மையானது நான்கு வகையான பயன்பாடுகளைக் கொண்டிருந்தது. அவை

(i) தண்ணீரைப் பாதுகாத்தல்

(ii) வறட்சித் தடுப்பு

(iii) வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல்

(iv) சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல்

இப்பயன்பாடுகள் கொண்ட குளங்கள், நீரைச் சேகரித்தல், தேக்கிவைத்தல், உபரிநீரை வெளியேற்றல், நீரை வழங்குதல் என்ற நான்கு செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றுள் நீரை வழங்குதல் பொருட்டு அமைப்பு ஒன்றை உருவாக்குதலும் அவசியமானதாகும்.






### குளங்களின் வகை

நீரைத் தேக்கிவைக்கப் பயன்படும் குளங்கள், தண்ணீரை எவ்வாறு பெறுகின்றன என்பதன் அடிப் படையில் மழைநீர்க் குளங்கள், ஆற்றுநீர் வரத்துக் குளங்கள் என இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளன.

ஆற்றில் இருந்து கால்வாய்கள் அல்லது வாய்க் கால்கள் வாயிலாகத் தண்ணீரைப் பெறும் குளங்களே ஆற்றுநீர் வரத்துக் குளங்களாகும்.

மழைநீரைப் பெற்று நிரம்பும் குளங்கள் மழைநீர்க் குளங்களாகும். மானாவாரிக் குளங்கள் என்றும் இதைக் குறிப்பிடுவதுண்டு. நேரடியாகக் குளத்தின் மேற்பரப்பில் பெய்யும் மழையினால் மட்டுமின்றி, குளத்தின் நீர்ப் பிடிப்புப் பகுதிக்குத் தொலைவில் பெய்யும் மழையின் துணையாலும் இக்குளங்கள் தண்ணீரைப் பெற்றுக் கொள்ளும்.

எம்முறையில் தண்ணீரைப் பெற்றுக் கொள்ளு கின்றன என்பதன் அடிப்படையில் இவ்வாறு குளங்கள் இரு வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. இஃதன்றி பயன் பாட்டின் அடிப்படையிலும் குளங்கள் வேறுபடுகின்றன. வேளாண்மைக்கான பாசனப் பயன்பாடு, குடிநீர்த் தேவை, கோவில் பயன்பாடு என்பன, இப்பயன்பாடு களுள் முக்கியமானவை.

### குளத்தின் உறுப்புகள்

நீளம், ஆழம் நீர் தேங்கும் பரப்பளவு நீரைப் பெறும் முறை, வெளியேற்றும் முறை என்பனவற்றில் குளங்களுக்கு இடையில் வேறுபாடு உண்டு.

ஆயினும் தமிழகக் குளங்களின் பொதுவான உறுப்புகளாக அவற்றின் கரை, நீர் வெளியேறப் பயன்படும் மடை, தூம்பு, மிகுதியான நீரை வெளியேற்ற உதவும் கலிங்கு என்பன அமைகின்றன. இன்று வரை இவை நிலைத்து நின்று நம் நீர் மேலாண்மை அறிவுக்குச் சான்று பகர்கின்றன.

### கரை

ஒரு குளத்தின் நீர்கொள்ளளவானது அதன் கரையின் வடிவமைப்பையும் உயரத்தையும் சார்ந்தே அமையும். அதோடு அதன் பாதுகாப்பும் கரையின் வலிமையைச் சார்ந்தே அமையும். இவ்வுண்மையை வள்ளுவர் உவமையாகப் பயன்படுத்தி உள்ளார் (குறள்: *523*). தன் கிளைஞரை தன்னை விட்டு நீங்காது பார்த்துக் கொள்வதன் அவசியம் குறித்து 'சுற்றந்தழால்' என்ற அதிகாரத்தில் (எண் 53) வள்ளுவர் வலியுத்துகிறார். இவ் அதிகாரத்தில் இடம்பெறும் ஒரு குறட்பா

> அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளக்
> கோடின்றி நீர்நிறைந் தற்று

என்பதாகும். தன் கிளைஞரோடு உள்ளம் கலந்து வாழாத மன்னனின் வாழ்க்கையானது கரையின்றி நீர் நிறைந்த குளத்தைப்போன்றது என்பதே இக்குறளின் பொருளாகும்.

வள்ளுவருக்கு முந்தைய காலத்தவரான கபிலர் பாரியின் பறம்பு நாட்டில், எட்டாம் பிறைச் நிலவின் வடிவில் குளங்கள் அமைக்கப்பட்டதாகக் குறிப்பிடு கிறார் (புறம் *118*). இம்முறையால் 'கரையின் நீளம் குறைவாகவும் கொள் அளவு அதிகமாகவும் அமையும் இது ஒரு சிக்கனமான வடிவமைப்பாகும் (இரத்னவேல், கள்ளபிரான்:*33*). இம்முறையில் அமைந்த குளங்கள் புதுக்கோட்டை வட்டாரத்தில் இன்றும் காணப்படும் என்று கூறுவதுடன் பாரியின் பறம்பு நாடு அடங்கிய புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருப்புன்னைவாசல் குளத்தின் வரைபடத்தையும் இவ்விருவரும் தந்துள்ளனர்.




இவ்வாறு கரை அமைப்பதின் பயன்பாடு குறித்து

> 'ஏரியின் மூன்று திசைகளிலும் பல மடைகள் அமைத்து பாசனப் பரப்பின் நிலவாட்டத்திற் கேற்ப ஏரியின் நீரைக் குறைந்த நீளமுள்ள வாயக்கால்கள் மூலம் பாசனத்திற்கு எடுத்துச் செல்ல இயலும். இதனால் நீர் விநியோகத்தின் சேதாரம் குறையும், நீர் மேலாண்மையும் ஏற்படும்'.

என்று குறிப்பிட்டுள்ளனர் (மேலது:*33*). இவ்வடிவில் கரை அமைப்பில் செலவு குறையும் என்பது ரத்தனவேல், கோமதி நாயகம் (*2006: 20*) ஆகிய இருவரது கருத்தாகும்.

குளத்தில் தேங்கும் நீரைப் பாதுகாக்க அமைக்கப் படும் கரையும் பாதுகாக்கப்பட வேண்டியதாகும். குளத்தில் தேங்கும் நீர் அலையாகத் தொடர்ந்து அடிப்பதால் குளத்தின் உட்பகுதியில் கரை பலம் குன்றும். இதைத் தடுக்கும் வழிமுறையாக இப்பகுதியில் கற்களைப் பதித்துள்ளார்கள்

இக்கற்கள் அலைத்தடுப்பானாக அமைந்து நீர் அரிப்பில் இருந்து கரையைப் பாதுகாத்துள்ளன. இக்கற்களுக்கு 'அலைகற்கள்' எனப் பெயரிட்டுள்ளனர்.

குளங்கள் அல்லது ஏரிகள் அமைப்பதில் பழந் தமிழர்கள் பின்பற்றிய தொழில்நுட்பம் குறித்து

இரத்னவேலுவும் கோமதி நாயகமும் பின்வருமாறு தொகுத்துள்ளனர்.

1) ஏரிக்கரையின் நீளம் குறைவாகவும் ஆனால் அதன் கொள்ளளவு அதிகமாகவும் இருக்கும் படியும் அமைக்கப்பட்டுள்ளன.

2) ராஜசிங்க மங்கலம் ஏரிக்கரையைப் போல் (பாம்பு போல்) அதிக நீளமாக அமைக்கும் வழக்கம் இருந்தது. அவ்விடங்களில் அதிக மடைகள் அமைத்ததின் மூலம் ஏரியிலிருந்து நிலங்களுக்கு நீரைப் பகிர்ந்தளிக்க முடிந்தது.

3) ஏரிக்கரைகளின் அடிமட்ட அகலம், சரிவு, (Slope) மேல் மட்டம் கரையின் மேல் அகலம், ஏரியின் நீர் கரையின் வழியாக நீர்க் கசிவை தடுப்பதாகவும், பெரும் வெள்ளம் வரும் பொழுது உடையாமல் இருக்கும் வண்ணம் அமைக்கப்பட்டன.

4) ஏரிக்கரையின் மேல்மட்ட அகலம் மனிதர்கள் செல்லுவதற்கும், ஆடு, மாடுகள் செல்லு வதற்கும் ஏற்றவாறு மட்டுமே அமைக்கப் பட்டிருந்தன. சாலையாகப் பயன்படுத்தப்பட வில்லை.

5) ஏரிக்கரைகள் நீரைத் தேக்குவதுடன் ஓடை களின் நீர் மட்டத்தை உயர்த்துவதால், நீர் மேட்டு நிலங்களிலும் பாசனம் செய்ய முடிந்தது.

6) பள்ளமான இடத்தில், இரண்டு மேட்டு நிலங்களை அல்லது குன்றுகளை இணைத்துக் கரை அமைக்கும் பொழுது ஏரி உருவாகிறது. கரையில்லையெனில் ஏரி இல்லை. அவ்விடம் வெறும் நீர் வழித் தடம் அல்லது ஓடை. ஏரியின் கரைகளில்தான், ஏரி நீரை விவசாயத்திற்கு வழங்கும் கட்டுமானமான மடைகளும், ஏரிக்கரையினைப் பாதுகாப்ப தற்காக அமைக்கப்பட்ட உபரிநீரை வெளி யேற்றும் கலிங்கலும் அமைக்கப்பட்டுள்ளதால் கரை ஏரியின் சிறப்பு அம்சமாகக் கருதப் படுகிறது.

### மடை

கரையின் துணையால் குளத்தில் தேக்கி வைக்கப் படும் தண்ணீர், பயன்பாட்டிற்காக வெளியேறும் வகையில் அமைக்கப்படுவதே மடை ஆகும். இதில் கதவு ஒன்று இருக்கும். இதைத் திறந்தால் தண்ணீர் வெளி யேறும். ஆனால் விருப்பம் போல், தண்ணீரின் அளவைக் கூட்டவோ குறைக்கவோ முடியாது. தேங்கி நின்ற தண்ணீர் கட்டுப்பாடின்றி வெளியேறும். இதன் அடிப்படையிலேயே 'மடை திறந்த வெள்ளம் போல' என்ற உவமை பேச்சுவழக்கில் இடம்பெற்றுள்ளது.

குளங்களில் மட்டுமின்றி, ஆற்றுக் கால்வாய்களிலும் மடை இடம் பெற்றிருக்கும்.

### மதகு

இதுவும் மடை அமைப்பில்தான் இருக்கும். ஆனால் தண்ணீர் வெளியேறும் பகுதியில் உள்ள கதவு போன்ற அடைப்பானை வேண்டிய அளவுக்கு மட்டும் திறந்து கொள்ளலாம். இதனால் வெளியேறும் நீரின் அளவைக் கூட்டவோ குறைக்கவோ முடியும்.

### குமிழி

கல்லினால் பெட்டிபோன்ற அமைப்பு உருவாக்கப் பட்டு, அதில் துளையிடப்பட்டிருக்கும். இத்துளையின் வழியாக தண்ணீர் பெட்டி போன்ற அமைப்பில் நுழைந்து வெளியேறும். தேவைப்படின் குமிழியின் வாயை மரத்தால் ஆன சக்கையால் அடைந்து, தண்ணீர் வெளியேறுவதை நிறுத்தி விடலாம்.

### தூம்பு

இது நீண்ட குழாய் போன்ற அமைப்புடையது. தூம்பு என்ற சொல் சிறிய துவாரத்தைக் குறிக்கும். தூம்பு கை என்பதே மருவி தும்பிக்கை ஆயிற்று என்பர். யானையின் தும்பிக்கை சிறிய துவாரத்துடன் கூடியது என்பது நாம் அறிந்ததே. குளத்தில் உள்ளநீர், கரையின் அடிப்பகுதி வழியாக வெளியே செல்ல தூம்பு உதவுகிறது. சங்க இலக்கியங்கள் 'சுருங்கை' என்ற சொல்லால் தூம்பைக் குறிக்கின்றன.

மூங்கில், பனை, ஆகிய மரங்களால் உருவாக்கப் பட்ட தூம்புகள் உண்டு. இவற்றை சில ஆண்டுகளுக்கு ஒரு முறை அகற்றிவிட்டு புதிய தூம்புகளைப் பயன் படுத்துவர்.

### கலிங்கு

மேலே குறிப்பிட்டனவெல்லாம் குளத்தில் தேக்கி வைத்த நீரை, பாசனத்தேவைக்காக வெளிக்கொணர உதவும் வகையில் உருவாக்கப்பட்டவை. அதிக நீர்ப் பெருக்கினால் குளம் விரைவாக நிரம்பும் போது தேவைக்கு அதிக அளவில் நீரைத் தேக்கிவைக்க முடியாது. அதிக அளவில் சேரும் நீரை வெளியேற்றா விடில் குளம் உடைந்துபோகும் ஆபத்தும் உண்டு. இதைத் தவிர்க்கும் வகையில், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் குளத்தில் நிரம்பும் நீரை வெளியேற்றும் வகையில் அமைக்கப்படுவதே கலிங்கு ஆகும். இதன் அடிப்படையில் குளத்தின் பாதுகாப்பு அரணாக கலிங்கு அமைகிறது.

கலிங்கின் வழியாக வெளியேறும் உபரி நீர், வாய்க்கால் வழியாகச் சென்று வேறு குளங்களை நிரப்புவதும் உண்டு. இவ்வாறு தண்ணீர் பெறும் குளங்களை மறுகால் குளங்கள் என்பர். இரண்டு வகையான, பயன்பாடுகளை இம்முறை கொண்டு உள்ளது. முதலாவது பயன்பாடு, கலிங்கின் வழியாக

உபரிநீர் வெளியேறுவதன் வாயிலாக, மிகு நீரினால் குளத்தின் கரை உடைவது தவிர்க்கப்படுகிறது. இரண்டாவதாக, கலிங்கின் வழியாக வெளியேறும் உபரிநீர் மற்றொரு குளத்தை நிரப்புவதால் நீர் வீணாகாது தடுக்கப்படுகிறது. இப்படித் தொடர்ச்சியாக ஒரு குளத்தின் உபரி நீரால் நிரம்பும் குளங்கள் அடுத் தடுத்து உண்டு. சங்கிலித் தொடர்போன்று அமைந்த இக்குளங்கள் தமிழர்களின் நீர் மேலாண்மைக்குச் சான்று பகரும் வகையில் இன்றும் உள்ளன.

### நீர் மேலாண்மை

இவ்வாறு தொழில்நுட்ப அறிவுடன் உருவாக்கப் பட்ட குளங்களின் முக்கிய நோக்கம் வேளாண்மைக்கான தண்ணீரை வழங்குவதுதான். இவ்வாறு வழங்குவதற்கு குளங்களை நிர்வகித்துப் பராமரிக்கும் அமைப்பு தேவையான ஒன்று. இதன் பொருட்டுப் பணியாளர் களை நியமித்து அவர்களுக்கு ஊதியம் வழங்குவதும் அவசியம். இவற்றின் பொருட்டு நிதி ஆதாரங்களை உருவாக்க வேண்டும்.

இப்பணிகள் தொடர்பான செய்திகளைக் கல்வெட்டுகள், செப்பேடுகள் வாயிலாக அறியமுடிகிறது.

நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் கி.பி.750 வாக்கி லேயே நன்கு வேரூன்றி விட்டதாக கி.இரா.சங்கரன் கூறுகிறார். இத்தொழில் நுட்பத்திற்குச் சான்று பகர்வதாக இன்றும் சில குளங்களில் குமிழி மடைகள் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இடைக் காலத்துக் கல்வெட்டுக்களில் பயின்று வரும் 'மடை', 'வாய்த்தலை', 'தூம்பு' போன்ற சொற்கள் சங்க இலக்கியங்களிலும் காணப்படுவதை அவர் சுட்டிக் காட்டுகிறார்.

குளத்து நீர்ப்பாசனம் தொடர்பான செய்திகள் அடங்கிய கல்வெட்டுகள் கி.பி.ஆறாம் நூற்றாண்டின்





கி.ரா.சங்கரன்

பின்பகுதியில் இருந்து பாண்டி மண்டலத்தில் கிடைப் பதாக அவர் கூறுகிறார். கி.மு. இரண்டாம் நூற்றாண்டை சேர்ந்த முதலைக்குளம் பிராமிக் கல்வெட்டில் இடம் பெறும் 'செய்தவர்' என்ற சொல்லின் அடிப்படையில் அப்போதே குளம் வெட்டும் முறை உருவாகிவிட்டதாக பழ.கோமதிநாயகமும், இரத்தினவேலுவும் குறிப்பிடு கின்றனர்.

மதகின் வாயிலாக ஆற்றுநீரை ஓடைக்குத் திருப்பியமை, மரத்தினால் ஆன மடைக்கு மாறாக, கல்லினால் ஆன மடை அமைந்தமை தொடர்பான கல்வெட்டுச் செய்திகளையும் அவர் வெளிக்கொணர்ந் துள்ளார்.

இவ்வாறு அமைக்கப்பட்ட குளங்களைப் பராமரிக்கவும் பயன்படுத்தவும் 'கிராம அவைகளில், சில அமைப்புகளை உருவாக்கியிருந்தனர். குளங்களையும், அதன் நீரைப் பயன்படுத்தலையும் முறைப்படுத்த 'ஏரிவாரியம்' என்ற அமைப்பு இருந்துள்ளது. பராமரித்து வெளியேறும் உபரி நீரை முறைப்படுத்த "கலிங்கு வாரியம்" என்ற அமைப்பு இருந்துள்ளது.

நம் பாரம்பரிய நீர் மேலாண்மை குறித்து, தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் செய்திகளையும், இச்செய்திகள் அடங்கிய கல்வெட்டுக்களையும். க.ராஜன் தமது நூலில் தொகுத்துத் தந்துள்ளார். இவற்றை ஒரு சேரத் தொகுத்து நம் பாரம்பரியம் எவ்வளவு தொன்மையானது, நுட்பமானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

### நீர் உரிமை

நீர் மேலாண்மையுடன் தொடர்புடைய ஒரு முக்கிய கூறு நீர் உரிமையாகும். தண்ணீரைத் தேக்கி வைத்துக் குமிழி அல்லது மடைகள் வழியாக வெளி யேற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியானது. தண்ணீரைக்







கட்டுப்படுத்தவும், சமூகத்தைக் கட்டுப்படுத்தவும் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் பயன்பட்டிருக்க வேண்டும் என்பது கி.இரா.சங்கரனின் கருதுகோளாக உள்ளது.

இதை நிறுவும் வகையில் அவர் ஆய்வை மேற் கொண்டுள்ளார். இது வேறுபாடான ஓர் ஆழமான ஆய்வாகும். தம் ஆய்வுக்கான களமாக, புதுக்கோட்டை வட்டாரத்தை அவர் தேர்வுசெய்துள்ளார். கல்வெட்டு களும், இன்றும் இப்பகுதியில் காணப்படும் குளங்களும் இவரது ஆய்வுக்கான தரவுகளாக அமைந்துள்ளன. இவரது ஆய்வின் வாயிலாக வெளிப்பட்ட சில முக்கிய செய்திகள் வருமாறு:

- குளங்களில் உள்ள நீரின் மேலான பகிரும் உரிமை, நிலப்பரிமாற்றத்தின் போது குளங் களையும் சேர்த்தளிப்பது என நில உரிமை இருவகையில் இருந்துள்ளது.
- ஒவ்வொரு விளைநிலமும் அதனதன் தேவைக் கேற்ப நீர்பெறும் உரிமையைக் கொண்டிருந்தது.
- இப்பகுதியில் ஆட்சியாளர்கள் மட்டுமின்றி தனியார்களும் நீர்நிலைகளை உருவாக்கி உள்ளனர், என்பதற்கான கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன.
- இப்பணிகளின் விளைவால் பயிர் விளைச்சல் பெருகியதுடன் அரசு வருவாயும் பெருகியது. ஏன் எனில் குளங்களில் இருந்து நீரைப் பெறும் நிலங்கள் அதிக வரிவிதிப்பிற்கு ஆளாயின. இவ்வரி ‘முழுக்கடமை’ எனப்பட்டது.
- நீர் நிலைகளின் எண்ணிக்கைப் பெருக்கம் வேளாண் விரிவாக்கத்தை உருவாக்கியது.
- நீரை வெளியேற்றும் மதகுகளுக்கு மாற்றாக மடைகள் குமிழிகளின் அறிமுகத்தால் விருப்பம் போல் நீரைவிடவும் நிறுத்தவும் முடியும். இதனால் நீர்வழங்குதல் முறைப் படுத்தப்பட்டது.
- நீரை முறைப்படுத்தி வெளியேற்றியும், புதிய குளங்களை வெட்டியும் பணியாற்றியவர்கள் சமூகத்தின் முதல் தளத்தில் இடம்பெற்றதுடன் அரையன் என்ற பட்டத்தையும் பெற்றனர்.
- ‘நாழிகை’ என்னும் நேர அளவின்படி நீர் விடப்பட்டுள்ளது. இந்நாழிகை நேரங்கள் ஊருக்கு ஊர் வேறுபட்டிருந்தன.

### நூல்கள் உணர்த்தும் செய்தி

ஆறு, குளம், ஏரி, கிணறு என்பனவற்றின் நீரைப் பயன்படுத்தி பண்டைத் தமிழர்கள் வேளாண்மை செய்து வந்துள்ளனர். இந்நீர்நிலைகளின் உருவாக்கம், நீரை வெளியேற்றவும், நீரை இறைக்கவும் பயன்படுத்திய கருவிகள் என ஒவ்வொன்றிலும் தொழில் நுட்ப அறிவு இடம்பெற்றுள்ளது. இவ்வுண்மையை இலக்கியம், கல்வெட்டுகள் மட்டுமின்றி தொல்லியல் சான்றுகளும் வெளிப்படுத்துகின்றன.

இக்கட்டுரையில் சுட்டப்படும் நூல்கள் அனைத்திலும் இடம்பெற்றுள்ள செய்திகள் இங்கு அறிமுகம் செய்யப் படவில்லை. தமிழர்களின் நீர்மேலாண்மை தொடர்பான ஒரு சிறிய அறிமுகம் மட்டுமே இங்கு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இந்நூல்களைத் தனித்தனியாக அன்றி ஒரு சேர வாசிப்பின் நம் நீர் மேலாண்மை அறிவின் தொன்மையும், நுட்பமும் குறித்த வரலாற்றுச் செய்திகளை நாம் அறியமுடியும்.

இவ்அறிதல், நம் காலத்தில் நிகழும் நீர்நிலை அழிப்பு அவலத்தை தடுத்த நிறுத்தவேண்டியதை நாம் உணரும்படிச் செய்யும். கடந்த காலத்தைக் குறித்த புரிதலை மட்டுமின்றி நிகழ்காலத்தில் நாம் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளைச் சுட்டிக்காட்டுவதும்தான் வரலாற்று வாசிப்பின் பயனாக இருக்க வேண்டும். ●

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடு

# ஜிப்ஸியின் துயர நடனம்

## யமுனா ராஜேந்திரன்

விலை
₹ 325/-




இந்நூல் இதுவரை தமிழில் பேசப்படாத ஐரோப்பிய தென்அமெரிக்க மார்க்சியர்கள் பற்றியது. மார்க்சியத்தினால் உந்துதல் பெற்ற கலைஞர்கள் மற்றும் தத்துவவாதிகளின் சுயவிசாரணைகளையும் ஆன்ம தரிசனத்தையும் முன்வைக்கிறது. ஐரோப்பாவினுள் வாழும் தமிழ் மார்க்சியரின் மேற்குலக பண்பாட்டுத் தரிசனமாகவும் விரிகிறது.

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

போன்: 044-26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.com

# தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

## இணைந்து நடத்திய இலக்கியப் போட்டி - 2016 விருதுகள் அறிவிப்பு

**வாழ்நாள் சாதனையாளர்: சிற்பி சக்தி விருது – திரு. இளசை மணியன்**

**அறிவியல் / மருத்துவ நூல்கள் – எம். கௌதம் நினைவு விருது**

கவிஞர் பிரியசகி &
ஜோசப் ஜெயராஜ், ச.ச - கசக்கும் கல்வியும் கற்கண்டாகும்
முனைவர் உ. கருப்பணன் - மனித உடல் அதிசய செயல்பாடுகள்

**ஆய்வு நூல்கள் – பேராசிரியர் நா.வானமாமலை நினைவு விருது**

கலாநிதி என்.சண்முகலிங்கன் &
முனைவர் பக்தவத்சல பாரதி - இலங்கை - இந்திய மானிடவியல்
ஆர்.பாலகிருஷ்ணன் - சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்

**கட்டுரை நூல்கள் – என்.சி.பி.எச். இராதாகிருஷ்ணமூர்த்தி நினைவு விருது**

அப்பணசாமி - பேர் சொல்லும் நெல்லைச் சீமை
எம். சிவகுமார் - சினிமாவின் இரண்டாம் நூற்றாண்டு

**கவிதை நூல் – பின்னையூர் மா. சண்முகம் நினைவு விருது**

ராஜன் ஆத்தியப்பன் - கருவிகளின் ஞாயிறு

**கவிதை நூல் – கே.சி.எஸ். அருணாசலம் நினைவு விருது**

இரா.பூபாலன் - ஆதி முகத்தின் காலப்பிரதி

**சிறுகதை நூல் – எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு விருது**

சிவசங்கர் எஸ்.ஜே. - கடந்தை கூடும் கேயாஸ் தியரியும்

**சிறுகதை நூல் – திருமதி. சுந்தரி சாந்திலால் நினைவு விருது**

பி.உஷா தேவி - வீடு பள்ளத்தில் இருக்கிறது

**சிறுவர் நூல்கள் – தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு விருது**

உதயசங்கர் - மாயக்கண்ணாடி
மு.பாலசுப்பிரமணியன் - அன்னப்பறவை

**நாடக நூல் – அறந்தை நாராயணன் நினைவு விருது**

வீ.கே.கார்த்திகேயன் - மேற்கிலும் உதயம்

**நாவல்கள் – அழகியநாயகி அம்மாள் நினைவு விருது**

சம்சுதீன் ஹீரா - மௌனத்தின் சாட்சியங்கள்
கலைச்செல்வி - சக்கை

**மொழிபெயர்ப்பு நூல்கள் – தொ.மு.சி. ரகுநாதன் நினைவு விருது**

இராஜேசுவரி கோதண்டம் - கற்சிலைகள் *(பலிவாட காந்தாராவ்)*
ச.சுப்பாராவ் - இடது திருப்பம் எளிதல்ல *(விஜய் பிரசாத்)*

**குறும்படங்கள் – தோழர் பா. முத்துசாமி நினைவு விருது**

முனைவர் இரா.குறிஞ்சி வேந்தன் - சயாம் - பர்மா மரண ரயில் பாதை
ஆருத்ரா - 93* Not out

**விருது பெற்ற படைப்பாளிகள் அனைவருக்கும் வாழ்த்துகள்**

| | | |
|---|---|---|
| **இரா. காமராசு** | **சி.சொக்கலிங்கம்** | **நா. இராமச்சந்திரன்** |
| மாநிலப் பொதுச் செயலாளர் | மாநிலத் தலைவர் | செயலாளர் – இலக்கியக் குழு |



# மேலை மருத்துவ எழுச்சியும் தமிழ் மருத்துவ வீழ்ச்சியும்

டாக்டர் சு.நரேந்திரன்

**மரபுவழி மருத்துவம்**

தமிழ் மருத்துவம் என்று போற்றப்படும் சித்த மருத்துவம் உள் உபயோக மருந்துகள் 32, வெளி உபயோக மருந்துகள் 32 என மொத்தமாகத் தொகுக்கப்பட்டதோடு, உடலுக்கு 30, உயிருக்கு 30, உணர்ச்சிகளுக்கு 36 என 96 தத்துவங்களை உள்ளடக்கி இருந்து, அகத்தியர் உள்ளிட்ட 18 சித்தர்களால் மேம்படுத்தப்பட்டது. இம்மருத்துவம், வாதம், பித்தம், கபம் என்ற திரிதோஷ அடிப்படையில் மணி, மந்திரம், மருந்து என்ற முறையில் தமிழ்நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற ஒரு சீரான மருத்துவம் ஆகும். மேலும் இது இயற்கையின் பங்களிப்பான செடி, கொடிகள் எனத் தாவரங்களால் பெறப்படும் மருந்துகள், உலோக, அலோகப் பொருட்கள் விலங்கினங்களின் கழிவு, உருப்பு, வர்மக்கலை, வெளிப்பூச்சி மருந்து ஆகியவைகளுடன் தழைந்திருந்தது.

இது போலவே ஆயுர்வேதத்திற்கு அதர்வண வேதமே உயிர் மூச்சு என்றாலும் இம்மருத்துவத்தின் வளர்ச்சி உயர்ந்த நிலைக்குச்சென்ற காலம் சரஹ சம்ஹிதா, சுசுருத சம்ஹிதா எழுதப்பட்ட காலம் (கி.மு 300). பின்னர் ஏழாம் நூற்றாண்டில் வாக்பட்டர் அஷ்டாங்க சங்க்ரஹா, அஷ்டாங்க ஹிருதயா என்னும் சிறந்த நூல்களும் வெளியிடப்பட்டன. சுசுருத சம்ஹிதாவில் 121 வகையான அறுவைச் சிகிச்சைக்கான கருவிகள் விளக்கப்பட்டுள்ளன. இதனுதவியால் தண்டனைக்காக வெட்டப்பட்ட மூக்கிற்குக் கூட ஒட்டறுவை சிகிச்சை (Plastic Surgery) செய்யப்பட்டுள்ளது. இது உலகின் ஒட்டறுவை சிகிச்சைகளின் முன்னோடி என்று சிறப்பாகக் கூறப்படுகிறது. இத்துடன் வீரசோழன் ஆதுலர் சாலை பற்றிய 11ஆம் நூற்றாண்டு திருமுக்கூடல் கல்வெட்டும், கி.பி 1257 ஆம் ஆண்டு திருவரங்க ஆதுலர் சாலை கல்வெட்டும், ஆயுர்வேத மருத்துவம் தமிழகத்தில் தழைத்திருந்ததை எடுத்துக் காட்டுகின்றன.

**ஐரோப்பியர் வருகையும்**
**மேலை மருத்துவத் தொடக்கமும்**

இப்படிப்பட்ட சுதேசி மருத்துவங்கள் நடைமுறையில் இருந்த காலத்தில் போர்ச்சுகீசியரான வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டைக்கு 1497 இல் வந்தடைந்தாலும் கேப்டன் அல்பான்சோ டி அல்டிகுவர்குயூ (1504- 1515) கோவாவைப் பிடித்து போர்ச்சுகீசிய அரசிற்குத் தலைநகராக்கி அவர்கள் சிப்பாய்களுக்காக ஒரு மருத்துவமனையை அமைத்தார். இதுவே முதல் முதலில் இந்தியாவில் ஐரோப்பியர்களால் ஏற்படுத்தப்பட்ட மருத்துவமனை. இது பிறகு ராயல் மருத்துவமனை எனப் பெயர் மாற்றப்பட்டு உலகில் சிறந்த மருத்துவமனையாகத் திகழ்கிறது.

போர்ச்சுகீசியர்களைத் தொடர்ந்து டச்சுக் காரர்களும் பிரெஞ்சுக்காரர்களும் இந்தியாவில் வந்திறங்கி வாணிபம் செய்ததாலும் ஆங்கிலேயர் வணிக ரீதியாக சென்னையில் கால் ஊன்றி வாணிபம் செய்யத் தொடங்கிய பின் தங்கள் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கும், இராணுவ வீரர்களுக்கும் இந்தியாவில் முதன்முதலில் மருத்துவம் புரிய செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் ஒரு மருத்துவ மனையினை 16-11-1664 இல் நிறுவினர். இது தற்போது உள்ள இடத்திற்கு 1772 இல் நிலை கொண்டது. இதைத் தொடர்ந்து குருகுலப் பாரம்பரிய கல்வியே அளித்து வந்த சுதேசி மருத்துவங்களுக்குப் பொது வான பள்ளிகள் அற்ற நிலையில் 1822 இல் கல்கத்தாவில் ஆயுர்வேதப் பள்ளியை அரசு ஆரம் பித்தது. இதன் செயல்பாடுகளில் திருப்தி அடையாத காலனி அரசு 1833 இல் வகுப்புகளை மூடி மேலை மருத்துவப்பள்ளியைத் தொடங்கியது.

இதே போன்று சென்னையில் 1835 பிப்ரவரி 7-ஆம் தேதி மருத்துவப்பள்ளி இராணுவத் தினருக்காக ஆரம்பிக்கப்பட்டது. இப்பள்ளி 1857 இல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து எல் எம் & எஸ் என்ற பட்டம் வழங்கியது. இதில் பட்டம் பெற்றவர்கள் இந்திய அரசர், கிளைத் தொழிற்சாலை, சிறிய தொழிற்சாலை மற்றும் சிப்பாய் ஆகியோர்களுக்கு முறையே மருத்துவம் அளித்தனர்.

### யாழ்ப்பாணத்தில் தமிழ்வழி மேலை மருத்துவம்

இக்காலகட்டத்தில் (1848) உள்நாட்டு மருத்துவ முறைகளுடன் மேலை மருத்துவத்தையும் இணைத்து அமெரிக்க மறைபோதகரான டாக்டர் சாமுவேல் ஃபிஷ் கிறீன் யாழ்ப்பாணத் தமிழர்கள் சாப்மன், டன்வதர், பவுல், நதானியேல் போன்றவர்களின் துணையுடன் 11 நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தார். இவர்களில் யார் நூல் எழுதினாலும் அவை டாக்டர் கிறீனினால் பார்வையிடப்பட்டுத் திருத்தி வெளியிடப்பட்டன. இந்நூல்களின் துணை யுடன் 1864- 1873 வரை 33 இலங்கைத்தமிழர்கள் தமிழ்வழி மேலை மருத்துவம் கற்று மருத்துவர் ஆனார்கள். இதைக் குறித்து டாக்டர் கிறீன் “நான் மேற்கொண்டுள்ள இம் முயற்சியானது தமிழில் மேனாட்டு வைத்தியம் பரவ ஓர் அஸ்திவார மாகவும், ஆரம்பமாகவும் அமைதல் வேண்டுமென விரும்புகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் கற்பிக்க வேண்டும் என்று விரும்பி நிதியுதவி கோரி, டாக்டர் கிறீன் தேசாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினார். இதற்குத் தேசாதிபதி “அமெரிக்க மிஷன் நடைமுறையில் மேற்கொண்டிருக்கும் ஆங்கிலம் தவிர்க்கும் கொள்கை பேராபத்தானதும் தற்கொலைக்கு ஒப்பானமாகும்” என்று கூறித் தமிழில் நூல் வெளியிடுவதற்கு எவ்வித உதவியும் அளிப்பதற்கு மறுத்து விட்டார். இருப்பினும் டாக்டர் கிறீன் மனம் தளராது நூல்களை வெளி யிட்டார். இக்காலக்கட்டம் ஆங்கிலம் அரசு மொழியாக இருந்த காலம், ஆங்கிலம் படித்தால் அரசு வேலை என்ற நிலை, அறிவியலைப்படிக்கக் கூடாது என்று சொல்லாத கட்டுப்பாட்டுடன் இந்துக்கள் வாழ்ந்த காலம். அறிவியல் கிறித்து வத்துடனும் கிறித்துவ மிஷினரிகளுடனும் தொடர்பு கொண்டுள்ளது என்று இப்பழமைவாதிகள் எண்ணிய காலத்தில்தான் டாக்டர் கிறீனின் வழியாகத் தமிழர்களுக்கு மேலை நாட்டு மருத்துவம் தமிழில் போதிக்கப்பட்டது.

> உள்ளூர் மொழிவழி
> மருத்துவ நூல்கள்
> வெளிவந்த பொழுது,
> குருகுலப் பாரம்பரிய
> கல்வி முறையில் போதித்து
> மருந்தளித்து வந்த
> ஆயுர்வேத மருத்துவத்திற்கு
> 1898இல் சென்னையில்
> கல்யாணி பரமேஸ்வரி
> அறக்கட்டளை சார்பில்
> டாக்டர் கோபாலாச்சார்யலுவைக் கொண்டு
> இலவச மருத்துவமனை முதன் முதலில் தொடங்கப்பட்டது.

### மாணவர்கள் தமிழில் படிக்கத் தயக்கம்

இன்றைய நிலையைப் போலவே டாக்டர் கிறீன் மேலை மருத்துவத்தைத் தமிழில் படிக்க மாணவர்களை வேண்டியபோது இக்கல்வி பயின்றால் பயனுண்டா? என நிலைதடுமாறினர். இதுபற்றி டாக்டர் கிறீன் “எனது மாணவர்கள் ஆங்கிலத்திலிருந்து மாறித் தமிழில் கற்பது பற்றிச் சலனமடைந்துள்ளனர். அரசு சேவையில் ஈடுபட்டுச் சம்பளம் பெறும் வாய்ப்பு குன்றுமென அவர்கள் எண்ணுகிறார்கள். அது உண்மை. அல்லது வைத்தியர்களை அவரவர் கிராமத்தில் நிலை பெறச்செய்தலே என் எதிர்கால நோக்கமாகும். எனவே பத்து நாட்கள் ஓய்வு கொடுத்து வைத்தியக் கல்வியைத் தொடர்வார்களா? அன்றேல் வேறு தொழிலை நாடுவார்களா? எனத் தீர்மானிக்க அவர்களுக்கு அவகாசம் கொடுத்துள்ளேன்” என

மனஉறுதியுடன் கூறி, தமிழ் வழிக்கல்வியை நடைமுறைப்படுத்தினார்.

### தமிழ்நாட்டில் தமிழ்வழி மேலை மருத்துவம்

யாழ்ப்பாணத்தில் தமிழ்வழி மருத்துவப் படிப்பு நடைபெற்ற சமயம் தமிழ்நாட்டில் சென்னை மருத்துவக்கல்லூரியில் சுதேசி உதவியாளராகப் பணியாற்றி, திருவனந்தபுரத்தில் மெடிக்கல் கிளாசின் ஆசிரியர் என்று தன்னை அழைத்துக்கொள்ளும் மா.ஜகந்நாத நாயுடு 7 மருத்துவ நூல்களைத் தமிழில் எழுதினார். இதில் “சாரீர வினாவிடை” (1879) என்ற தன் முதல் நூலான உடல்கூறு நூலின் முன்னுரையில் “ஆங்கில மருத்துவம் பரவியதால் சுதேசி மருத்துவர்கள் தங்கள் இஷ்டப்படி செய்யும் மருத்துவங்களைத் தடுக்கவும், அரசு சுதேசி மருத்துவத்தின் மேல் நம்பிக் கையற்று உதவி செய்யாது இருக்கும் நிலையில் சுதேசி மருத்துவம் க்ஷீண திசையை அடைந்து வருவதையும் தவிர்க்க இந்திய நாட்டின் பல திசைகளுக்கும் சென்று சமஸ்கிருதத்தில் உள்ள ஆயுர்வேதச் செய்திகளைத் திரட்டி தமிழில் மொழிபெயர்த்து மேலை மருத்துவத்தை ஆயுர்வேதத்துடன் இணைத்து எழுதியுள்ளேன்” என்று கூறியுள்ளார்.



### ஆயுர்வேத மருத்துவமனை ஆரம்பம்

உள்ளூர் மொழிவழி மருத்துவ நூல்கள் வெளி வந்த பொழுது, குருகுலப் பாரம்பரிய கல்வி முறையில் போதித்து மருந்தளித்து வந்த ஆயுர்வேத மருத்துவத்திற்கு 1898 இல் சென்னையில் கல்யாணி பரமேஸ்வரி அறக்கட்டளை சார்பில் டாக்டர் கோபாலாச்சார்யலுவைக் கொண்டு இலவச மருத்துவமனை முதன் முதலில் தொடங்கப் பட்டது. இது, தொடர்ந்து இயங்க அரசிடம் மானியம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு ரூபாய் 500 சில நிபந்தனைகளுடன் வழங்கியது. அதன்படி மருந்தகம் சர்ஜன் ஜெனரலால் நியமிக்கப் பட்ட அலுவலரால் கண்காணிக்கப்படும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. மருந்தகத்தைத் தொடர்ந்து, சென்னையில் தொடங்கப்பட்ட ஆயுர்வேதப்பள்ளிகளும் உதவித் தொகை கேட்டு விண்ணப்பித்த பொழுது சர்ஜன் ஜெனரல் பானர்மன் ஆயுர்வேதப்பள்ளி அறிக்கைகளைப் பார்வையிட்டபின் இம்முறையில் நோயை உறுதி செய்து, உடற்கூறு அறிந்து மருந்து கொடுக்கப் படவில்லை. ஆகவே எவ்வித உதவியும் இப்பள்ளிகளுக்கு அளிக்கக்கூடாது எனப் பரிந்துரைத்தார்.

இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் முகமாக 1914 நவம்பர் 23 இல் சென்னை சட்டசபையில் ஏ.எஸ். கிருஷ்ணராவ் என்ற உறுப்பினர் ஆயுர்வேதத்தை ஊக்குவிக்க அதன் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டும், எனவும் இப்பள்ளிகளுக்கும் இங்கு நடைபெறும் ஆய்வுகளுக்கும் உதவிப் பணம் கொடுத்து ஊக்குவித்து ஒரு சிறப்பு அலுவலரையும் நியமிக்க வேண்டும் எனவும் ஓர் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இதனை ஆய்ந்த அரசு ஆயுர்வேத மருந்துகளைச் சோதித்து மேலை மருத்துவ நூல்களில் இணைக்க அனுமதியளித்தது. இதன் காரணமாக சுதேசிப்பள்ளிகள் எப்படிச் செயல்படுகிறது? என்று ஆய்வு நடத்தி முடிவாக சென்னை மாகாண அரசு தன் அறிக்கையை மைய அரசிற்கு அளிக்கும் போது “பாரம்பரிய மருத்துவப் பயிற்சி உள்நாட்டில் முறையற்று அறிவுபூர்வமாக இல்லாததாகவே நடைபெற்று வருகின்றது” என்று தன் கருத்தைத் தெரிவித்தது. இக்கருத்தை ஏற்றுக் கொள்ளாத இந்துநேசன், திராவிடன், கேரள மஞ்சரி போன்ற உள்நாட்டு இதழ்கள் உள்நாட்டு மருத்துவத்தை வளர்த்தெடுக்காதது தவறு எனத் தொடர்ந்து எழுதின. இதற்கு இந்திய சுதந்திர ஆதரவாளர்கள் பெரும் பங்கு வகித்தனர். இச் சமயத்தில் மக்களுக்கு மருத்துவம் அளிக்கப் போதுமான ஆங்கில மருத்துவர்களும் கிடைக்க வில்லை. சட்டசபையிலும் பல சமயங்கள் சுதேசி மருத்துவ மேம்பாடு குறித்துப் பேசப்பட்டது.

### சுதேசி மருத்துவத்தை ஆராய டாக்டர் கோமேன்

டாக்டர் கோமேனை 1918 ஜூலை 12-ஆம் தேதி சுதேசி மருத்துவ முறையை ஆய்வு செய்து அறிக்கை அளிக்க காலனி அரசு கேட்டுக் கொண்டது. இக்காலகட்டத்தில் சுதேசி மருத்துவங்களுக்கு உதவித்தொகை வழங்க கவர்னரிடம் அனுமதி

கேட்கப்பட்டது. இதற்கு அரசு சுதேசி மருத்துவம் ஒரு முறையான மருத்துவம் அல்ல, மேலும் அது ஒரு தனிப்பட்ட மருத்துவத்துறை போன்றதாக இல்லை, ஒவ்வொரு மருத்துவரும் ஒவ்வொரு விதமாக எவ்விதிகளுக்கும் உட்படாது, எவ்வித பட்டப்படிப்பும் இன்றி மருத்துவம் அளிப்பதாகக் கூறி உதவிப்பணம் வழங்க மறுத்தது. இச்சமயம் டாக்டர் கோமேன் தன் அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்தார். இதில் "உள்நாட்டு மருந்துகளை மேலை மருந்துகள் பட்டியலில் சேர்ப்பது சிறிதளவே பயன்படுமெனவும், இம் மருந்துகளைப் பல ஆய்வுகளைச் செய்து, சீர்மையடையச் செய்த பின்னரே உலகளவிற்குக் கொண்டு செல்ல முடியும்" என்றும் கூறப்பட்டிருந்தது.

இதற்கு "ஆயுர்வேதத்தைக் கற்றறியாத, சமஸ்கிருத மொழியை அறியாத, ஓர் ஆங்கில மருத்துவரின் அறிக்கை முற்றிலும் தவறானது" என்று சுதேசமித்திரன் இதழ் உட்பட பல இதழ்கள் கண்டனக்குரல்கள் எழுப்பின. இதுபோலவே வைத்திய மண்டலும் ஆயுர்வேத சபாவும் தம் எதிர்ப்பைத் தெரிவித்தன. இதனை அறிந்த கவர்னர் ஜெனரல் டாக்டர் கோமேன் அறிக்கையை நிராகரித்தார். தொடர்ந்து சுதேச மருத்துவத்தை ஆதரித்து தேவையான சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என 1920 மார்ச் 21 ஆம் தேதி மீண்டும் ஒரு புதிய தீர்மானம் நிறைவேறியது.

### உஸ்மான் கமிட்டி

யுனானி மருத்துவம் மற்றும் உருது அறிந்த முகமது உஸ்மான் தலைமையில், சமஸ்கிருதம் தெரிந்த, சட்டப்படிப்பைப் படித்த, மேலை மருத்துவம் கற்ற டாக்டர் ஜி.சீனிவாச மூர்த்தியைச் செயலாளராகக் கொண்டு ஒரு கமிட்டியை 1921 இல் அரசு அமைத்தது. இக்கமிட்டி நாடெங்கும் சென்று ஆயுர்வேதம், சித்தா, யுனானி மருத்துவர்கள், மருந்தகங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து செய்திகளைத் திரட்டி (The Science and the art of Indian System) 150 பக்க அறிக்கையை அரசிற்கு அளித்தது. இது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அறிக்கைகளில் மிகச்சிறந்ததில் ஒன்று என்று பாராட்டப்பட்டது. இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் தர்க்க ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் சிறப்பாக இருந்தது. இவ்வறிக்கை சுதேசி மருத்துவத்தில் அறுவைச் சிகிச்சை முறை சிறப்பாக இல்லாவிடினும் மருந்து கொடுத்து குணமளிக்கும் மருத்துவம் சிறப்பானதாக உள்ளது, அது சிக்கனமானது, நமக்குப் போதுமானது என்று கூறியது. சுதேசி மருத்துவத்தை ஊக்கப்படுத்தினால் கிராமப்புற மக்களின் மருத்துவத் தேவைகளைச் சுலபமாகத் தீர்க்க முடியும், ஆகவே அரசு முழு வீச்சில் சுதேசி மருத்துவத்தை ஊக்குவித்து அத்துடன் அறுவை சிகிச்சையையும் மேம்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது. இத்துடன் இந்திய மருத்துவக் கல்லூரியையும், அதற்கான மருத்துவமனையையும் சென்னையில் நிறுவக் கோரியதுடன், நடைபெற்றுக் கொண்டிருக்கும் மருத்துவக் கல்லூரிகளிலும் சுதேச மருத்துவ இருக்கைகளை உண்டாக்கி அதில் பயிலும் மேலை மருத்துவம் கற்கும் மாணவர்களுக்கும் சுதேசி மருத்துவங்களைக் கற்பிக்க வேண்டும் எனவும் கூறியது. சுதேசி மருத்துவத்தை மேலை மருத்துவத்துடன் படிக்கும் மாணவர்களுக்கு உதவித்தொகை அளித்து, படிக்கச் செய்வதுடன் அவர்கட்கு வேலைவாய்ப்பையும் உத்திரவாதப்படுத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டது. மேலும் இம்மாணவர்கள் இந்நாட்டிற்கான பெரும் சொத்து எனக் கருதப்படுவார்கள் என்றும் அந்தந்த மருத்துவ முறைகளைச் சார்ந்தவர்கள் தங்கள் முறையே சிறந்தது என்று எண்ணாது ஒருவருக்கொருவர் உதவி செய்து உடன் பிறந்தவர்கள் போன்று பாவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது.

### சுதேசி மருத்துவம் மேலை மருத்துவம் இணைப்புக்கு எதிர்ப்பு

உள்நாட்டு, மேலை நாட்டு மருத்துவங்களை இணைத்துப் படிப்பது கூடாது என்று ஆயுர்வேத மகாமண்டலத் துணைச்செயலாளர் கே.ஜி. நடேச சாஸ்திரி, ஆயுர்வேதம் தனித்து இயங்க வேண்டுமே ஒழிய மற்ற எந்த மருத்துவமுறையையும் இதில் கலக்கக்கூடாது அப்படிக் கலந்தால் அலோபதி மருத்துவம் சுதேச மருத்துவத்தை விழுங்கிவிடும் எனக் கூறினார். இரண்டு முறைகளும் வெவ்வேறு அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டது என்றும் ஆகவே மொழி, இனம், நாடு இவைகளைக் கடந்து மேற்கையும், கிழக்கையும் இணைப்பது என்பது இவ்விரண்டு மருத்துவமுறைகளைப் பலப்படுத்தாது சிதைவுறவே செய்யும் என வாதாடினார். இது போன்றே பல மருத்துவர்களும் ஹக்கிம்களும் 3000 ஆண்டுகள் பழைமை வாய்ந்த சுதேச மருத்துவம் மேலைமருத்துவத்தின் கலப்பால் தனித்தத்துவத்தை இழந்துவிடும் என்று கூறினர். இதேபோல அலோபதி மருத்துவர்களும் சுதேச மருத்துவம் பழமையானதாக இருப்பினும் அறிவியல் ரீதியானதல்ல. ஆகவே நவீன மேலை மருத்துவத்துடன் உள்நாட்டு மருத்துவத்தை இணைப்பது கூடாது என்று வாதிட்டனர்.

இவ்வறிக்கைகளை ஆய்வு செய்த காலனி அரசு முடிவாக அறிக்கையின் பரிந்துரைப்படி சென்னையில் 1925 இல் ஆயுர்வேதம், சித்தா, யுனானி முறைகளோடு தேவையான மேலை மருத்துவத்தையும் இணைத்துக் கற்பிக்க, சென்னை மாகாண முதல்வராகப் பணியாற்றிய (1921-1926), டாக்டர் சீனிவாச மூர்த்தியை மருத்து வராகக் கொண்ட பனகல் அரசரால் விலையற்று கொடுக்கப்பட்ட இடத்தில் "இந்திய மருத்துவப் பள்ளி" என்ற பெயரில் தமிழக மருத்துவ வரலாற்றில் முதன்முறையாக உள்நாட்டு மருத்துவத்துடன் மேலை மருத்துவமும் கற்க ஓர் புதிய சகாப்தம் தொடங்கியது. இதில் ஆயுர்வேதம், சித்தா, யுனானி ஆகிய மருத்துவ முறைகளுக்குத் தனித்தனியே வகுப்பு நடத்தப்பட்டன. அத்துடன் நவீன மருத்துவ மான உடல்கூறு, உடல் இயங்கியல், அறுவை சிகிச்சை, கண் மருத்துவம், மகளிர் மருத்துவம் ஆகியவையும் உள்நாட்டு மருத்துவத்துடன் கற்பிக்கப்பட்டன. இம்மாணவர்களுக்கு உள்நோயாளிகளையும் வெளிநோயாளிகளையும் பார்த்து மருத்துவம் பயில வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. ஆரம்ப காலத்தில் எல்.ஐ.எம் படிப்பு நான்கு ஆண்டுகள் படிப்பு. 1931 ஆம் ஆண்டிற்குப் பிறகு 5 ஆண்டு படிப்படியாக மாற்றியமைக்கப்பட்டது.

ஆயுர்வேதப்படிப்பு தமிழ், தெலுங்கு, சமஸ் கிருதம் ஆகிய மொழிகளிலும் சித்தாவும், யுனானியும் முறையே தமிழிலும் உருது மொழியிலும் கற்பிக்கப் பட்டன. இப்படிப்பில் சேர எஸ்.எஸ்.எல் சி தேறி யிருக்கவேண்டும். இத்துடன் மேலைமருத்துவம் படித்தவர்களுக்கு இந்திய மருத்துவம் உயர்படிப்பு (Fellow of Indian Medicine) போதிக்கப்பட்டது. இதில் 1925 முதல் எல்.ஐ.எம். (Diploma of Licentiate of Indian Medicine) என்ற பட்டப்படிப்பு ஆரம்பமானது.

### மருத்துவப்பள்ளி கல்லூரி ஆனது

இப்பள்ளி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது கல்லூரியாக (1947 College of in degenous Medicine) மலர்ந்தது. இக்கல்லூரியை சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்க நடந்த ஆய்வில் பல்கலைக்கழகம் பட்டம் வழங்க மறுத்தால் அரசே டிப்ளமோ படிப்பைத் தொடங்கி ஜி.சி.ஐ.எம் (Graduate of the college of Integrated Medicine) என்ற பட்டத்தை வழங்கியது. பின்னர் இக்கல்லூரி College of Integreated Medicine என (1955) பெயர் மாற்றப்பட்டது. இவர்கட்கு மேலை மருத்துவம் பட்டம் பெற்ற மருத்துவர்கள் பாடம் போதித்தனர். இதில் சித்தா பிரிவில் தமிழ் அறிந்த தமிழ் நாட்டினரும், ஆயுர்வேதப்பிரிவில் சமஸ்கிருதம் அறிந்த தமிழ்நாடு, கேரளம் கன்னடம், ஆந்திரா போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களும், யுனானியை உருது தெரிந்த இஸ்லாமியர்களும் படித்துப் பட்டம் பெற்றனர். கல்லூரியில் சேர பௌதீகம், வேதியியலைப் பாடமாக எடுத்துப் படித்து இண்டர்மீடியேட் தேறியிருக்க வேண்டும். இக் கல்லூரியில் "பாலவாகடம்", "குணபாடம்", "நச்சு நூல்" ஆகிய பாடநூல்கள் வெளியிடப்பட்டன. இதற்காகக் கலைச்சொற்கள் பட்டியலுடன் நூல்கள் உள்நாட்டு மொழியில் எழுதப்பட்டன. மேலும் ஜி.சி.ஐ.எம் மேலைமருத்துவத்தை இராயப் பேட்டை பொது மருத்துவமனைக்குச் சென்று கற்று வந்தனர்.

இவர்கள் படித்துப் பட்டம்பெற்று வெளி யேறிய பிறகு ஆரம்பத்தில் அரசு வேலையில் சேர அனுமதிக்கப்படவில்லை. மேற்படிப்பு படிக்கவும் (MS., M.D.,) வழிசெய்யப்படவில்லை. இதில் படிக்கச் சேர்ந்தவர்கள் பலர் எம்.பி.பி.எஸ் படிக்க விண்ணப்பித்துக் கிடைக்காது ஜி.சி.ஐ.எம் என்ற பட்டவகுப்பில் சேர்ந்தனர் 5% விழு.

இம்மாணவர்களின் போராட்டத்திற்குப் பிறகு அரசு வேலைவாய்ப்பை அளித்த பொழுது மேலை மருத்துவம் படித்தவர்கள் சீனியர் பதவி யிலும், ஜி.சி.ஐ.எம் படித்தவர்கள் ஜூனியர் பதவியிலும் பணிபுரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. சுதேசி மருத்துவம் போதித்த கல்லூரியை அங்கீகரித்து பட்டம் வழங்க டாக்டர் ஏ.எல் முதலியாரைத் துணைவேந்தராகக் கொண்ட சென்னைப் பல்கலைக் கழகம் மறுத்தது. மேலும் மாணவர்கள் தங்களுக்கு மேலை மருத்துவங்களுக்கு ஒத்த ஊதியம் அளித்து அவர்களுக்கு இணையாக நடத்த வேண்டும் எனவும் போராடினர். அரசு ஜி.சி.ஐ.எம் படித்தவர்களை உள்ளூர் மருத்துவத்திலும் மேலை மருத்துவத்திலும் நோயாளிகளுக்கு ஆலோசனை வழங்க இசை வளித்தது என்றாலும் உள்நாட்டு மருந்துடன் மேலை மருத்துவத்தைப் படிக்க மாணவர்கள் ஆர்வம் காட்டவில்லை.

### ஜி.சி.ஐ.எம் கல்லூரி மூடப்பட்டது

மாணவர்களின் ஆர்வமின்மையால் இந்திய மருத்துவக்கல்லூரி 1960இல் மூடப்பட்டது. இதில் எம்.பி.பி.எஸ் என்ற வேலை மருத்துவ இளநிலை மருத்துவப் பட்டப்படிப்பு தொடங்கப்பட்டது. இதுவே கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி ஆகும். இந்நிலையில் இந்திய மருத்துவக் கல்லூரியில் ஜி.சி.ஐ.எம் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் எம்பிபிஎஸ்



படிப்பைத் தொடரவும்; 3, 4, 5 ஆம் ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கு டி.எம். & எஸ் படிப்பு படிக்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. சுருங்கக் கூறின் ஜி.சி.ஐ.எம் மாணவர்கள் அலோபதி மருத்துவர்களாக மடை மாற்றமடைந்தனர்.

ஜி.சி.ஐ.எம் படிப்பு முடித்து வெளியேறியவர்களுக்குக் குறுகிய காலம் டிஎம் & எஸ் ஆறு மாதம் படிக்கவும், அதை முடித்தபின் தேவை யானவர்கள் செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ் குறுகிய காலப் படிப்பு 18 மாதம் படிக்கவும் அரசு வாய்ப்பளித்தது. இதன்படி சுதேச, மேலை மருத்துவம் ஆகிய இரண்டிலும் நோயாளிகளுக்கு ஆலோசனை வழங்க தொடங்கப் பட்ட மருத்துவப் படிப்பு முடிவுற்று மாணவர்கள் மேலை மருத்துவம் மட்டும் படிக்க ஆரம்பித்தனர். இதன்படி உள்நாட்டு மருத்துவமுறையுடன் மேலை மருத்துவத்தை இணைத்துப் படிக்கும் வாய்ப்பைத் தமிழ்நாடு இழந்தது.

சில ஆண்டுகளுக்குப்பிறகு மதுரை சித்த வைத்திய சங்கத்தின் முயற்சியின் காரணமாக தேர்ந்தெடுக்கப் பட்ட அரசு மேத்தா கமிட்டியின் பரிந்துரைப்படி முழுமையான இந்திய மருத்துவம் (சித்தா, ஆயுர் வேதம், யுனானி) படிக்க விரும்புவோருக்குப் பாளையங்கோட்டையில் சென்னைப் பல்கலைக் கழகம் ஒப்புதல் பெற்ற பி.ஐ.எம் என்ற பட்டப் படிப்பு (1964) நவம்பர் 30ஆம் தேதி ஆரம்பிக்கப் பட்டது. இக்கல்லூரியில் மீண்டும் போராட்டம் தலைதூக்கியது. தங்களுக்கு மேலை மருத்துவர் களைப் போன்ற தகுதியைத் தரவேண்டும் என்று கூறி அதுவரை மேலை மருத்துவர்கள் மட்டுமே அணியும் வெள்ளைக் கோட்டு அணியவும், ஸ்டெஸ் தாஸ்கோப் நோயாளியைப் பரிசோதிக்க உப யோகிக்கவும் தகுதி பெற்றனர். இத்துடன் 4-ஆம் ஆண்டு சித்தா மருத்துவத்துடன் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரியில் ஆங்கில மருத்துவம் கற்கவும் வழி வகை செய்யப்பட்டது. பி.ஐ.எம் என்று வழங்கிய இளநிலை பட்டப்படிப்பு பி.எஸ்.எம்.எஸ் எனப் பெயர் மாற்றமடைந்து இன்று வரை நீடிக்கிறது. இதுபோலவே எம்.டி என்ற முதுநிலை மேற் படிப்பும் சித்தா பிரிவில் நடைபெற்று வருகின்றது. அடுத்து பழனியில் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி பின்னர் அது சென்னைக்கு மாற்றப்பட்டு நடை பெற்று வருகின்றது.

### முடிவுரை

மரபுசார் மருத்துவத்தின் வரலாறு நீண்ட நெடியதாயினும், இம்மருத்துவத்தை, மேலை மருத்துவத்தோடு இணைக்க முயற்சித்துத் தோல்வி கண்டு மரபுசார் மருத்துவம் தனியான மருத்துவ வழிமுறைகளைக் கண்டது. தொழில்நுட்ப அடிப் படையில் மரபுசார் மருத்துவத்தை மாணவர்கள் விரும்பி ஏற்காதது வருந்தத்தக்கது. மேலை மருத்துவத் துறையோடு மரபுசார் மருத்துவம் இணைந்து தொடர்ந்து இருக்குமாயின் மருத்துவம் ஆய்வு நிலைக்கு உட்பட்டு அறிவியல் தன்மையோடு உள்நாட்டு மருத்துவம் வளர்ந்திருக்கக் கூடும். ●

# வாழ்த்துகள்







2015 ஆம் ஆண்டுக்கான த.மு.இ.க.ச. விருது பெற்றோர்
வாழ்நாள் சாதனையாளர் விருது - மார்க்சிய அறிஞர் **எஸ்.வி.ராஜதுரை**
சிலப்பதிகாரம் மறுவாசிப்பு (கட்டுரை) என்.சி.பி.எச். வெளியீடு - **தி.சு.நடராசன்**
ஆகாயத் தோட்டிகள் (கவிதை) என்.சி.பி.எச். வெளியீடு - **பூர்ணா**

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்தின்
விருது பெறும் படைப்பாளிகளுக்கு
'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.



குவைத்தில் நடைபெற்ற வளைகுடா வானம்பாடி சங்கத்தின்
வெள்ளிவிழாவில் கவிஞர் மு.முருகேசுக்கு
'குறுங்கவிச் செல்வன்' விருதினை இந்திய குவைத் தூதர் சுனில் ஜெயின்
வழங்கிய போது எடுத்த படம்.

அருகில் மலேசியன் குவைத் தூதர் அகமது ரோசியன் அப்துல் கனி
மற்றும் கவிஞர் அ.வெண்ணிலா



KAAVYA TAMIL (QUARTERLY) JULY - SEPTEMBER 2016
Regd No : TN TAM 8012 / 43610
காவ்யாவின் சிறப்பு பதிப்புகள்
பாரதிதாசனின் 6 தொகுதிகள் ரூ.7000/- சலுகை விலை ரூ.5000/-
கவி காமு ஷெரீப் 3 தொகுதிகள்
ரூ. 2600/- சலுகை விலை ரூ. 1800/-
விந்தனின் 3 தொகுதிகள்
ரூ. 3000/- சலுகை விலை ரூ. 2000/-
வ.ரா.வின் 2 தொகுதிகள்
ரூ. 2100/- சலுகை விலை ரூ. 1500/-
ராமாமிர்தம் 2 தொகுதிகள்
ரூ. 2100/- சலுகை விலை ரூ. 1500/-
தொடர்புக்கு : 044 - 23726882 / 98404 80232
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
20 ஐப்பசி
அக்டோபர் - டிசம்பர் 2016
மலர் 5 இதழ் 4
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 100
காவ்யா
தமிழ்
கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்
சுந்தரபாண்டியனின்- அக்னிப்பிரவேசம்
மா.அரங்கநாதனின் சிறுகதை - குடியிருப்பு
நீலபத்மநாபனின் கட்டுரை - ஜெயகாந்தன்
கழனியூரனின் வாய்மொழி - ஆவணங்கள்
சிங்கம்புழை ரமணனின் செவ்வாழை - கவிதை
அ.கா. பெருமாளின்–
தோல்பாவை கூத்து
காவ்யா சண்முக சுந்தரத்தின் –
தேச விடுதலையில் தேவரின் பங்கு
சந்திரசேகரின் – கபாலி விமர்சனம்

# அறிவார்ந்த சமூகம் உருவாக...

## சுப்ரபாரதிமணியன்




ஈரோடு புத்தகக் கண்காட்சி தமிழகத்தில் நடைபெறும் புத்தகக் கண்காட்சிகளில் முக்கியத்துவம் பெற்றதாய் விளங்கி வருகிறது. மறைந்த இந்திய குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்கள் ஈரோடு புத்தகக் கண்காட்சிக்கு இருமுறை வருகை தந்து உரைகள் நிகழ்த்தியுள்ளார். அந்த உரைகளைத் தொகுத்து ஈரோடு புத்தகக் கண்காட்சியின் முக்கியத் தூணாக விளங்கும். ஸ்டாலின் குணசேகரன் இந்நூலை வெளியிட்டுள்ளார். முதல் உரை "ஒவ்வொரு வீட்டிலும் நூலகம்" என்ற தலைப்பில் அமைந்திருந்தது. கற்பனை சக்தி கொண்ட சமுதாயத்தை மூத்த பத்திரிகையாளர்கள் எழுதத் தூண்ட வேண்டும். புதிதாக வருகின்ற புதிய சிந்தனையுடன் இருக்கின்ற சமுதாய விழிப்புணர்வுடைய இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும். எழுத்தாளர்கள் நல்ல எண்ணங்களை உருவாக்கிப் பலப்பல லட்சியக் கனவுகளை எழுத்து மூலம் மக்களிடையே கொண்டு வரவேண்டும். இவர்களுடைய எழுத்துக்கள் இளம் தலைமுறையினருக்கு எதிர்காலச் சிந்தனையை உருவாக்குவதோடு அந்த இளம் மனங்களை நல் வழிப்படுத்த வேண்டும் என்ற கருத்துக்களை அந்த உரையில் வலியுறுத்தியுள்ளார். அவரது வாழ்க்கையில் மூன்று நூல்கள் அவரை வழி நடத்தியதாகக் குறிப்பிட்டார். 1. வில்லியன் வாட்சன் எழுதிய "லைட் ப்ரம் மெனி லேம்ப்ஸ்" 2. திருக்குறள் 3. டெனிஸ் வைட்லி எழுதிய "எம்பயர்ஸ் ஆப் தி மைண்ட்." இம்மூன்று நூல்களும் அவரின் வாழ்க்கையின் பல முக்கியக் கட்டங்களில் வழிநடத்தியிருப்பதை அவர் விரிவாக அதில் குறிப்பிட்டிருக்கிறார். புத்தகம் எப்படி




**அப்துல் கலாம் உரைகள்**
த.ஸ்டாலின் குணசேகரன்
*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்*
*41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,*
*அம்பத்தூர், சென்னை - 600 098*
*ரூ.40.00*

நம்மை அறிவார்ந்த சமுதாயத்திற்கு இட்டுச் செல்லும். அறிவார்ந்த சமுதாயத்தின் ஆரம்பம் என்ன, அறிவின் இலக்கணம் என்ன என்பதையும் விரிவாகச் சொல்லியிருந்தார். இரண்டாம் உரை "புத்துலகை உருவாக்கும் புத்தகங்கள்" என்ற தலைப்பிலானது. அந்த உரையில் மூன்று விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளை முன்னிலைப் படுத்திப் பேசியுள்ளார். அவர்கள் சர் ஹம்ப்ரி டேவி, மைக்கேல் பாரடே, தாமஸ் ஆல்வா எடிசன் ஆகியோர் ஆவர். உலகின் வளர்ச்சியில் அபாரமான சாதனைகளுக்கு அச்சாரங்களாய் புத்தக வாசிப்பு இருக்கிறது. உலகத்திலேயே பெரிய சாதனையாளர்களை, பெரிய மனிதர்களைப் பற்றிப் படித்து வளர்ந்த மாணவர்களின் கற்கும் திறன் மென்மேலும் வளரும். அப்படிப்பட்டப் புத்தகங்களைப் படித்து அகத் தூண்டுதல் ஏற்பட்ட பல அனுபவங் களைப் பற்றி அவ்வுரை எடுத்துரைத் திருக்கிறது. வாசிப்பு மூலமான சமுதாயத்தால் பண்பாடு நிறைந்த, தரமான கல்வி, சமூகப் பொருளாதார வேறுபாட்டை மீறி அனைவருக்கும் கிடைக்கும் நாடாக இந்தியா மாற வேண்டும் என்ற ஆவல் அவரின் உரைகளில் தெளி வாகிறது. மற்றும் புத்தக வாசிப்பு மனித மனங்களை விரிவுபடுத்துவதையும் விளக்கியுள்ளார் ●



அறச்சலூர் நவரசம் கலை அறிவியல் மகளிர் கல்லூரி தமிழ் மொழித்துறை மற்றும் நியூ செஞ்சுரி இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சி 15-09-2016 முதல் 18-09-2016 வரை நடைபெற்றது. தொடக்க விழாவில் கலந்துகொண்டோர்:
கல்லூரி தலைவர் டி.கே.தாமோதரன், முதல்வர் டாக்டர் ப.லோகாம்பாள்,
செயலாளர் டாக்டர் சி.குமாரசாமி, பொருளாளர் சி.பழனிசாமி,
மொழித்துறைத் தலைவர் பேரா.ஐ.செல்வம், நூலகர் N. வளர்மதி மற்றும்
கோவை என்.சி.பி.எச். மேலாளர் R. ரங்கராஜன் ஆகியோர்.

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்




விலை : ₹ 500/-




விலை : ₹ 70/-

விலை : ₹ 120/-







விலை : ₹ 50/-




விலை : ₹ 260/-

விலை : ₹ 115/-







விலை : ₹ 275/-




விலை : ₹ 190/-

விலை : ₹ 330/-




## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

போன்: 044-26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.com

# அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சம்மேளனம்

## தேசியத் தலைவராக பொன்னீலன் தேர்வு



பொதுச்செயலாளர் ராஜேந்திர ராஜன், தலைவர் பொன்னீலன், மாநிலத் துணைத்தலைவர் டி.எஸ். நடராஜன்

இந்திய தேசத்தின் இளைய மாநிலங்களில் ஒன்றான சட்டிஸ்கர் மாநிலத்தின் சிறப்பு வாய்ந்த பிலாஸ்பூர் நகரம், செப்டம்பர் 9,10, 11 தேதிகளில் 'மக்களே எழுத்தின் மையம்' என்பதைத் தம் எழுத்தின் தாரக மந்திரமாக கொண்ட அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சம்மேளன மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் தமிழகத்தின் சார்பில் தேசியத்தலைவர் பொன்னீலன், மாநிலத் துணைத்தலைவர்கள் டி.எஸ்.நடராஜன், செ.ரத்தினவேலு, மாநிலக்குழு உறுப்பினர்கள் எஸ்.கே.கங்கா, கோவில் குணா ஆகியோர் பிரதிநிதிகளாக கலந்துகொண்டனர்.

தேசியத்தலைவர் பொன்னீலன் மாநாட்டில் தலைமையுரை ஆற்றும்போது இன்று நாட்டில் கலாச்சார தேசீயம் என்ற பெயரில் வகுப்புவாத சக்திகள் எவ்வளவு பெரிய ஆபத்தாக மாறி வருகிறது என்பதையும், அதனை எதிரிட வேண்டிய அவசியத்தையும் கோடிட்டுக் காட்டினார்கள். அந்த உரையின்போது கலாச்சார தேசியம் என்னும் பிற்போக்குச் சக்தியை அரசியல், பொருளாதார தளங்களில் சந்தித்தால் மட்டும் போதாது; அதனை பண்பாட்டுத் தளத்திலும் நேரிடையாக நேரிட வேண்டும். அதற்கு கலைஞர்களும் படைப்பாளிகளும் கிளர்ந்தெழ வேண்டும் என்று உரையாற்றினார்

முன்னதாக, சாகித்திய அகாதமி விருதினைப் பெற்ற பொன்னீலனின் 'புதிய தரிசனங்கள்' நாவல் "நியூ தர்சன்ஸ்" என ஆங்கிலப் பதிப்பு மாநாட்டு துவக்கவிழா மேடையில் சிறப்பு அழைப்பாளர் திரு.பி.சாய்நாத் அவர்களால் வெளியிடப் பெற்றது.

மூன்றாம் நாள் இறுதியில் புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. நாவலாசிரியர் பொன்னீலன் மீண்டும் சம்மேளனத்தின் தேசியத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். டாக்டர் அலி ஜாவேது புதிய செயல்தலைவராகவும் அகில இந்திய பொதுச்செயலாளராக பீகார் மாநிலத்தைச் சார்ந்த ராஜேந்திர ராஜனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநிலத் துணைத்தலைவர்ராக டி.எஸ். நடராஜன் மற்றும் நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

மாநாட்டு ஏற்பாடுகளை பிலாஸ்பூர் தோழர்கள் மிகச் சிறப்பாக செய்திருந்தார்கள்.

**தகவல்: எஸ்.கே.கங்கா**

# சிங்காரவேலரின் கவலை

பா.வீரமணி



அறிவியல் பல நிலைகளில் நன்கு வளர்ந்திருந்தும் மனிதன் பெரும் மாற்றத்தையும் போதுமான வளர்ச்சியையும் அடைந்ததாகக் கூறமுடிய வில்லை; மனிதனின் அறிவியலறிவு, சந்திர மண்டலத் தையும், பிறமண்டலங்களையும் அடையும் செல்வாக்குப் பெற்றிருந்த போதும், மனிதன் இன்னும் மந்திர-தந்திரங்களில் பெரும் நம்பிக்கை கொண்ட வனாகவே இருந்து வருகிறான்; அறிவியலைப் போதிக்கும் பெரும்பான்மையான ஆசிரியர்களே அவற்றில் நம்பிக்கை கொண்டிருக்கும்போது, வெகுமக்களை தாம் எப்படிக் கண்டிக்க முடியும்? அறிவியல் ஒரு பக்கம் அமைதியாக வளர்ந்து கொண்டிருக்கிறது. மற்றொரு பக்கம் அதனைச் சற்றும் நோக்காமல், உணராமல், பெரும்பாலோர் பழைய மூடநம்பிக்கையைப் பின்பற்றுபவராகவே இருந்து வருகின்றனர். மூடநம்பிக்கையைப் பின்பற்றுவதால் மனித குலத்திற்கு காலந்தோறும் அவ்வப்போது இழப்புகளும் கேடுகளும் ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும், வெகுமக்கள் பள்ளத்தில் தேங்கியுள்ள நீரைப் போன்று மூடநம்பிக்கையில் ஆழ்ந்துள்ளனர். இந்த மூடநம்பிக்கை, அவர்களுக்கு விஞ்ஞானத்தை ஏற்காத புதியதை ஏற்காத மன நிலையை ஏற்படுத்தி விடுகிறது.

மூடநம்பிக்கைகள் பெருகும் வாய்ப்புள்ள இந்நிலையில் பாடத்திட்டத்தில் விஞ்ஞானத்தை இன்னும் விரிவாக விளக்கும் நிலையை உருவாக்கிட வேண்டும். அதே சமயத்தில் மூடநம்பிக்கைகள் உண்மையில்லாதவை, அவை தவறானவை என்பவற்றை மக்களிடத்தில் ஆதாரத்தோடு அறிவுப் பிரச்சாரம் செய்திடல் வேண்டும். இவ்வாறு இரு முனைகளில் நம் சிந்தனையைச் செயலாக்கிட வேண்டும். நம் சமுதாயத்தில் இப்படி இருமுனைகளில் தம் சிந்தனைகளைச் செயல்படுத்தியவர் தான் சிங்காரவேலர். அதில் அவர் மூத்த முன்னோடி; தந்தை பெரியாரும் அப்படிப்பட்டவரே! மூடநம்பிக்கையால் நம் சமுதாயம் எப்படிக் கேடு அடைந்துள்ளது என்பதைச் சில நிகழ்வுகள் மூலம் அறிந்து கொண்டு மேலே செல்வோம்.

1931-ஆம் ஆண்டில் மத்திய பிரதேசத்தில் ஒரு சிற்றூரில் ஒரு குழந்தை கிணற்றில் விழுந்து விட்டது; கிணற்றைச் சுற்றி வாழ்ந்தவர்கள் தங்களை மேற்சாதியாகக் கருதிக் கொண்டவர்கள். கிணற்றில் விழுந்த குழந்தை தலித் சமூகத்தைச் சேர்ந்த குழந்தை. அந்தக் குழந்தை கிணற்றில் விழுந்ததால் உயர் சாதியினர் தீண்டாமையைக் கருதி, தீட்டெனக் கூறி வாளாயிருந்து விட்டனர். அப்போது அங்குச் சுற்றுப்பயணம் செய்த மேல்நாட்டினர் ஒருவர் மிகவும் வெகுண்டு குழந்தையை ஏன் காப்பாற்றவில்லையென வினவியபோது, உயர்சாதியினர் காப்பாற்றினால் தீட்டு ஏற்பட்டுவிடும் என்று கூறியுள்ளனர். தீண்டாமை, தீட்டு என்பவற்றை நெடுநேரம் அவருக்கு விளக்கியுள்ளனர். ஆனால், அவருக்கு ஒன்றும் புரியவில்லை; பின்னர் தான் அது சாதி மூடநம்பிக்கை என்பதைப் புரிந்துள்ளார்.



கஜினி முகமது குஜராத்திலுள்ள சோமநாதபுரம் கோயிலில் கணக்கிலடங்கா தங்கம், வெள்ளி, வைரம் போன்ற பொருட்கள் உள்ளன என்பதைக் கேள்வியுற்று அக்கோயிலை முற்றுகையிட்டபோது, சோமநாதபுரத்து அரசன் வெளியே வந்து போரிடவோ, சரணடையவோ முயலாமல் கோயிலுக்குள் இருந்துகொண்டே, காவலர் களோடு கடவுளுக்குப் பூசை செய்து "எங்களைக் காப்பாற்றுங்கள்; காப்பாற்றுங்கள்" என்று வேண்டிக் கொண்டே இருந்தானாம். சில நாட்களுக்கு அப்பால் கஜினி முகமது, கோயிலின் வாயிலை உடைத்து உள்ளே சென்று அனைத்துப் பொருள்களையும் கொள்ளையடித்ததோடு எல்லோரையும் கொன்று உள்ளான்; சரண் அடைந்திருந்தால் அவர்களுக்கு உயிராவது மிஞ்சியிருக்கும். ஆனால், கடவுள் காப்பாற்றுவார் என்ற மூடநம்பிக்கையால் உயிரும் போயிற்று; செல்வமும் போயிற்று. இவைபோன்ற நிகழ்ச்சிகள் இந்திய வரலாற்றில் ஏராளம்; ஏராளம்; இவை கணக்கில் அடங்காதவை. இவற்றால் நம் நாட்டிற்கு ஏற்பட்ட இழப்புகளும், நட்டங்களும், பின்னடைவுகளும், சாவுகளும், அவமானங்களும் கணக்கற்றவை. இவற்றையெல்லாம் எண்ணியே சிங்காரவேலர் மக்களிடையே அறிவியல் சிந்தனையை, அறிவியல் மனப்பான்மையை வளர்க்க நாளும் சிந்தித்துவந்தார். குறிப்பாக, மதம் சார்ந்த எண்ணங்கள் மக்களுக்கு எத்தகைய கேடுகளை விளைவித்து உள்ளன என்பவற்றை அவர் கீழுள்ளவாறு விளக்கி யிருப்பது நம் கவனத்திற்கு உரியது.

"நமது நாடு விஞ்ஞான ஆராய்ச்சியைக் கைவிட்டதன் முக்கிய காரணம் என்னவெனில்

கற்பனை உலகத்தின் மேல் மக்கள் வைத்துள்ள நோக்கமேயாகும். நாம் வாழ வேண்டிய உலகமே பொய்யென்றால் அந்தப் பொய்யுலகை ஏன் விசாரித்தறிய வேண்டும்? என்ற மனப்பான்மையை இந்த மருள் வளர்த்தே வந்திருக்கிறது. இந்த மருளால் நமது நாடும் மற்ற உலக நாடுகளும் எவ்வளவு பொருளாதார நாசத்தை உண்டாக்கி வருகின்றன இந்த மருளை ஆதாரமாகக் கொண்ட மதங்களால் எத்தனை கோயில்கள், குருக்கள், மௌலானாக்கள், பிஷப்புகள் வயிறு வளர்க்கின்றனர். எத்தனை சோம்பேறிகள், பிச்சைக்காரர்கள், சன்னியாசிகள் உபயோக வேலை செய்யாமல் பாடுபடுவோருடைய உழைப்பில் ஜீவித்து வாழ்கின்றார்கள்; இவ்வளவு மனக்கிலேசமும், பொருளாதார நஷ்டமும், சோம்பேறித்தனமும், குழப்பமும், சண்டையும் இந்த மருளால் விளைந்ததென்றால் இந்த மருளை நீக்கி உலக ஞானத்தைப் பெருகச் செய்யும் விஞ்ஞானத்தை ஏன் வளர்க்கலாகாது? இந்த மருளின் ஆபாசத்தையும் அதனால் விளையும் தீமைகளையும் மக்களும் அறிஞர்களும் சிந்திக்கும்வரை இந்த மருள் மக்களை வாட்டியே தீரும்.” (சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம் - பக் 1221)

மூடநம்பிக்கைகளை அடியோடு களைய வேண்டுமென்றால் விஞ்ஞான ஒளி மக்களிடம் பரவ வேண்டுமென்பதையே அவர் திரும்ப- திரும்ப வலியுறுத்தி வந்துள்ளார். அவர் எழுதிய எல்லா நூல்களிலும் அந்த உண்மையை வலியுறுத்தியுள்ளார். ஓர் அரசியல் தலைவராக, தொழிற்சங்க இயக்க முன்னோடியாக இருந்த அவர், தாம் எழுதிய மொத்தக் கட்டுரைகளில் செம்பாதிக்கு மேல் அறிவியல் சார்ந்த கட்டுரைகளையே எழுதியுள்ளார். இதனைச் சாதாரணமாகக் கருதிவிட முடியாது. விஞ்ஞானத்தைப் பரப்புவதில் அவர் எத்துணை அக்கறை கொண்டிருந்தார் என்பதை இதன்வழி நன்கு உணரலாம். தமிழ்ச் சமுதாயத்தில் அறிவியலை விளக்கிக் காட்டி, அதனைப் பரப்ப முயன்ற முதல் முன்னோடி அவர்தான். “விஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும்” என்றொரு தனி நூலே வெளிவந்துள்ளது. இந்நூலை முதன் முதலில் தந்தை பெரியார் தான் வெளியிட்டார். அந்நூல் அன்றிலிருந்து திராவிடர் கழகம் இப்போதும் வெளியிட்டுக் கொண்டு வருகிறது.

தமிழ்ச் சமுதாயம் நன்கு முன்னேற வேண்டுமென்றால் அவர்களுக்குப் புத்தக வாசிப்பு மிக இன்றியமையாதது என்பதை அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தார். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழர்கள் வாசிக்க வேண்டுமென்பதில் அதுவும் விஞ்ஞானம் குறித்து அவர்கள் வாசிக்க வேண்டுமென்பதில் அவர் மிகக் கவலை கொண்டிருந்தார். அந்தக் கவலையைக் குடியரசில் 17-9-1933-இல் வெளியிட்டிருந்தார். அது குறித்து அவர் தம் எண்ணத்தைச் சிறு அறிக்கையாக வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையைக் கீழே காணலாம்.

“ஞானமின்றி எந்த இயக்கமும் உலகில் நிலைக்காதென்பது நமது கால அனுபவ மதங்கள் தழைத்தோங்குவதும், மதங்களைக் குறித்து எழுதப்படும் புத்தகங்களாலென அறிய வேண்டும். மூட நம்பிக்கைகள் இன்றும் உலகமெங்கும் பரவியிருத்தலுக்குக் காரணம் பொய் நம்பிக்கைகளை வளர்க்கும் புத்தகங்களேயாகும். மெய்ஞ்ஞானமும் பகுத்தறிவும் உலகில் அதிகமாகப் பரவாததற்கு முக்கிய காரணம் அவைகளைப் பற்றிப் பிரசுரிக்கப்படும் புத்தகங்கள் அதிகமாக விலைபடாமையால் என அறிக. உலகில் போலி தத்துவஞானம் (PSUEDO PHILOSOPHY) தழைத்தோங்குவதும் குப்பை குப்பையாக அதனைப் பற்றி விற்பனையாகும் புத்தகங்களாலெனவும் அறிதல் வேண்டும். இவ்வாறாக நமது வாழ்வின் சுவைக்குதவாத புத்தகங்களைக் கோடானகோடி மக்கள் வாங்கிப் படிப்பதால் மூடநம்பிக்கைகளும், மூடப்பழக்க வழக்கங்களும் அடிமைத்தனமும், அறிவின்மையும் உலகில் நீடித்து வருகின்றன.

மேற்குறிப்பிட்ட விஷயமுகத்தானே நமது தென்னாட்டு நிலையைக் குறிப்பிட வேண்டுமானால், இந்நாட்டு மக்களும் அபாய நிலையில் தான் இருக்கின்றார்கள். சுயமரியாதை இயக்கம் ஒன்றே பகுத்தறிவை வளர்ப்பதற்கும், மூடத்தனத்தை நீக்குவதற்கும் உடன்பட்டுள்ளது. ஆனால், அதன் இலக்கியப் புத்தகங்கள் விலைபடும் விஷயம் அதிகமாகக் கோரிக்கையை வளர்ப்பதாக இல்லை.

நமது சமதர்மப் பிரசுரங்களும், பதினாயிரக் கணக்கான நிலையாக வேண்டியிருக்க, இதுவரை ஆயிரக்கணக்காகக்கூட விலையாகவில்லை. இதுவரை சில தோழர்கள் பொருளுதவியால் சில புத்தகங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. அவைகளை விற்பதற்காகக் கொண்டுபோன தோழர்கள் அவைகளின் விற்பனை குறித்து யாதொரு தகவலும் தெரிவிக்கவில்லை. இந்தக் கஷ்டத்தில் வேறு எந்தப் புத்தகங்களை அச்சிடுவது? இந்தக் கேவல நிலைமையைக் குறித்தே இனி அச்சிடும் புத்தகங்களைப் போதுமானவர்களின் வேண்டுகோள் இல்லாமல் அச்சிடப் போவதில்லை என்று தீர்மானித்தோம். சுயராஜ்யம் யாருக்கு? என்ற இரண்டு பாகப் புத்தகங்கள் 5000- இன்னும் இருப்பில் (STOCK) இருந்து வருகின்றன. அதன் மூன்றாம் பாகம் அச்சுக்குத் தயாராக உள்ளது. மனித உற்பவத்திற்கு இதுவரை 100-க்குக் குறைவாகவே கேட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் என்ன



செய்வதென்று ஒன்றும் தோன்றவில்லை. படிக்கின்ற வர்கள் முன்வந்தால் ஒழிய, நமது சமதர்மம் மழலையில் தான் இருந்துவரும். குடியரசு 17-9-1933

புத்தகங்களைப் படிக்காததனாலும், அவற்றின் கருத்து பரவாவதாலுமே மூடநம்பிக்கை வாழ்ந்து வருகிறது என்கிறார். மற்றும் பகுத்தறிவுக்கு மாறான புத்தகங்கள் மக்களிடையே செல்வாக்குப் பெருகு வதாலும் மூடநம்பிக்கை நிலைத்து வருகிறது என்கிறார். இவ்விரண்டையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று விரும்பியுள்ளார். அவர், முன்னர் எழுதிய "சுயராஜ்யம் யாருக்கு?" என்ற நூலின் படிகள் 5000- வாங்கப்படாமல் உள்ளனவென்றும், புதியதாக வெளியிட இருக்கும் "மனித உற்பவம்" என்ற நூலுக்குப் பலமுறை விளம்பரம் கொடுத்திருந்தும் 100-க்குக் குறை வாகவே பதிவு செய்திருப்பதையும் நமக்கு நினை வூட்டுகிறார். இதனால் கவலையுற்ற அவர் படிக் கின்றவர்கள் பெருக வேண்டும் என்ற அவாவையும் வெளிப்படுத்தி உள்ளார். அவர் தெளிவுறுத்தி ஏறக்குறைய 80 ஆண்டுகள் கடந்தும் நம்நாடு இன்னும் அதே நிலையில்தான் உள்ளது. தமிழகத்தில் பத்து ஆண்டுகளாக நடைபெற்றுவரும் புத்தகக் காட்சிகளில் சமையல் குறிப்பைப் பற்றிய புத்தகங் களும், சோதிடத்தைப் பற்றிய புத்தகங்களுமே அதிகமாக விற்பனையாகியுள்ளதாகக் கூறுகின்றனர். இக்குறிப்பு எதனைக் காட்டுகிறது? இன்னும், சமூக முன்னேற்றம் அறிவியல் உண்மை ஆகியவை குறித்து நம் மக்கள் போதுமான அளவு அக்கறை கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது. இது பெரிதும் வருந்தத்தக்கது; இந்நிலையை நாம் மாற்ற முனைய வேண்டும்; அதுவே நாட்டுக்கு நல்லது. இதனை எண்ணித்தான் அக்காலத்திலேயே சிங்கார வேலர் கவலை கொண்டுள்ளார். ●

**நூல் மதிப்புரைக்கான கட்டுரைகளை அனுப்புவோர் தவறாமல்**
**நூலின் இரண்டு பிரதிகளைச் சேர்த்து அனுப்புமாறு**
**கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**
**நூல் பிரதி இணைக்கப்படாத கட்டுரைகளைப் பிரசுரிக்க இயலாது.**

**- பொறுப்பாசிரியர்**

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடு




இந்தப் பெரிய புத்தகம் இந்திய வரலாறு எவ்வாறு எழுதப்பட்டு வடிவமைக்கப்பட்டு உள்ளது என்பதற்கு அறிமுகமும், இந்தியா இன்றைய நிலையை எவ்வாறு வந்தடைந்துள்ளது என்ற அடிப்படை வரலாற்றுப் புத்தகம் மட்டுமல்ல; சகிப்புத் தன்மையற்றதும் விலக்கும் பண்புடையதுமான இந்து தேசியவாதம் கட்டமைத்திருக்கும் வரலாற்றுப் பொய்மைகளையும் புனைவுகளையும் கட்டுடைத்துக் காட்டும் புத்தகம். இந்நூல் இன்றைய வாசிப்பிற்கு அவசியமான ஒன்று.

**எரிக் ஹாப்ஸ்வாம்**

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

போன்: 044-26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.com

**கிளைகள்**

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-2323990; மதுரை: 0452-2344106, 2350271; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.

# வாழ்த்துகள்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் - நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இணைந்து நடத்திய இலக்கியப் போட்டியில் விருது பெற்ற நியூ செஞ்சுரிப் பதிப்பக வெளியீடுகள்

பேராசிரியர் நா.வானமாமலை நினைவு விருது
**இலங்கை இந்திய மானுடவியல்** - முனைவர் பக்தவச்சல பாரதி & கலாநிதி என்.சண்முகலிங்கன்

எம்.கௌதம் நினைவு விருது
**மனித உடல் அதிசய செயல்பாடுகள்** - முனைவர் உ.கருப்பணன்

என்.சி.பி.எச். இராதாகிருஷ்ணமூர்த்தி நினைவு விருது
**பேர் சொல்லும் நெல்லைச் சீமை** - அப்பணசாமி

எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு விருது
**கடந்தை கூடும் கேயாஸ் திரியும்** - எஸ்.ஜே.சிவசங்கர்

அறந்தை நாராயணன் நினைவு விருது
**மேற்கிலும் உதயம்** - வீ.கே.கார்த்திகேயன்

அழகியநாயகியம்மாள் நினைவு விருது
**சக்கை** - கலைச்செல்வி

விருதுபெற்ற அனைத்துப் படைப்பாளிகளுக்கும்
'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது


## புதிய பொலிவுடன் புதிய ஆராய்ச்சி

இதழ் 5
வெளிவந்துவிட்டது




நா.வானமாமலையின்
மாணவர்களால்
நடத்தப்படும்
ஆய்விதழ்

ச.பிலவேந்திரன் | பா.ஆனந்தகுமார் | ஆ.தனஞ்செயன் | வி.பிரிட்டோ,சே.ச., | ச. கார்மேகம் சி.மகேசுவரன் | ஞா.ஸ்டீபன் | ஆ.சிவசுப்பிரமணியன் | தி.சு.நடராசன் | இரா.காமராசு கெவின் | பி.ஆண்டர்சன் | ஏ.பி.பரதன் | ஆறு.இராமநாதன் | வீ.அரசு | தி.புருஷோத்தமன் எ.சுப்பராயலு | ஈ.சங்கரநாராயணன் | எஸ்.தோதாத்ரி | சாமிக்கண்ணு
ஆகியோர்களின் ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

தொடர்பு முகவரி : நா.இராமச்சந்திரன், பொறுப்பாசிரியர். புதிய ஆராய்ச்சி
55/3, பீட்டர் தெரு, எஸ்.டி.சி. சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி – 627007,
அலைபேசி: +91 9487804805 மின்னஞ்சல்: newresearch.tamil@gmail.com

**புதிய ஆராய்ச்சி இதழ் நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் அனைத்துக் கிளைகளிலும் கிடைக்கும்**



# தமிழ்ச் சமூக வரலாற்றில் வண்ணார்

க.காமராசன்

**சமூக வரலாறும் சாதிகள் வரலாறும்**

தமிழ்ச் சமூக வரலாறு முழுமையாக எழுதப்பட வேண்டும் என்ற நீண்ட நாள் அவா நீடிக்கிறது. ஆனால் சமூக வரலாறு எழுதுவதற்குத் தொடங்கப்படும் முயற்சிகள் தொடக்கத்திலேயே முடங்கி விடுகின்றன. சமூக வரலாறு எழுதப்படுவதற்குப் பல போதாமைகள், தடைகள் உள்ளன. அவற்றில் ஒன்று, சாதிகள் வரலாறு பற்றிப் போதுமான அளவுக்கு சமூக அறிவியல் நோக்கிலான ஆய்வுகள் இல்லாமை ஆகும். சமகால சமூகத்தில் சாதி உணர்வு முக்கியமான மெய்மையாக நிலவுகிற போது, கடந்த காலம் பற்றிய தேடலில் அவ்வுணர்வு இடையீடு செய்து, உணர்நிலையோடோ உணர்நிலையற்றோ பொய்மைத் தோற்றப்பாடுகளை உருவாக்குகிறது. ஆகவே சாதி உணர்வு ஏற்படுத்தும் மனத் தடைகளைக் கடந்து செல்வதற்கு, சாதிகள் வரலாறு பற்றிய அறிவியல் பூர்வான எழுத்துகளைப் பெறுதல் அவசியமானது ஆகும். இந்த வகையிலான ஒரு எழுத்தாக "தமிழக வண்ணார்: வரலாறும் வழக்காறுகளும்" என்ற புத்தகத்தை அண்மையில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்த நூலை நன்கு அறியப்பட்ட நாட்டார் வழக்காற்றியல் புலமையாளர், மார்க்சியக் கருத்துநிலையாளர் ஆ.சிவசுப்பிரமணியன் எழுதியுள்ளார்.

"தமிழக வண்ணார்: வரலாறும் வழக்காறுகளும்" புத்தகம் ஒன்பது பகுதிகளையும் ஏழு பின்னிணைப்புகளையும் கொண்டுள்ளது. பின்னிணைப்பிலும் "தமிழ்ச் சமூகத்தில் கழுதை" என்ற முழுநீளக் கட்டுரை உள்ளது. இவை அனைத்தும் வண்ணார் வரலாறு தமிழ்ச் சமூக வரலாற்றின் பிரிக்க முடியாத பகுதி எனக் காட்டுகின்றன. இந்த நூலின் முறையியல், நோக்கம் பற்றி முன்னுரையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

> குறிப்பிட்ட சாதியொன்றை மையமாகக் கொண்டு நிகழும் ஆய்வு, அச்சாதியின் கடந்த காலம் - நிகழ் காலம் - எதிர்காலம் ஆகியனவற்றை மையமாகக் கொண்டே நிகழுதல் வேண்டும். இதன் அடிப்படையில், வரலாறு, மானிடவியல், சமூகவியல், நாட்டார் வழக்காறு ஆகிய அறிவுத் துறைகளின் துணை அவசியமான ஒன்று. எழுத்தாவணங்களுடன், கள ஆய்வுத் தரவுகளும் இணையும்போதுதான் இவ்வாய்வு சிறப்பாக அமையும். இதை உள்ளத்தில் இருத்தியே வண்ணார் சமூகம் குறித்த நூலை எழுதும் முயற்சியில் ஈடுபட்டேன்.

ஆனால் இந்நூலாசிரியரின் முயற்சி, இடையில் அவருக்கு நேர்ந்த விபத்தால் தடைப்பட்டு, "பெரிய

அளவிலான நூலாக உருவாக வேண்டிய ஒன்று, குடுகுடுப்பைக்காரரின் சட்டை போன்று, கட்டுரைகளின் தொகுப்பாக" வந்துள்ளது என்று முன்னுரை கூறுகிறது. ஆயினும், சாதிகள் வரலாறு பற்றிய ஆய்விற்கான முன்மாதிரியை இந்நூல் வழங்குகிறது. இந்நூல் ஆராய்ந்த செய்திகளை எடுத்துக் கூறுவதனூடே, இப்புத்தகத்தின் முக்கியத்துவத்தை இந்த அறிமுகம் எடுத்துக்காட்ட விரும்புகிறது.

**தமிழ்ச் சமூகத்தில் வண்ணார்**

18ஆம் நூற்றாண்டியின் இறுதியில், தமிழ் நிலப் பகுதியில் காலனிய ஆட்சி வேரூன்றி நிலைத்தது. அப்போது, காலனிய அரசு சமூகக் குழுக்களை வகை தொகைப்படுத்த முயன்றது. அதன் வகைதொகைப் படுத்தலில் சாதிகளின் வருணநிலை, படிநிலைத் தரவரிசை முக்கியமான இடம்பெற்றது. இச்செயல்பாடு, சாதிக்குழுக்கள் வரலாறு பற்றிய உணர்வு கொள்ளலை, அதாவது வருணநிலையில் உயர்ந்த அந்தஸ்தைக் கோரும் உணர்வு, சாதிப் படிநிலைத் தரவரிசையில் உயர்ந்த இடத்தைக் கோரும் உணர்வு என்ற எதிர் விளைவைத் தோற்றுவித்தது. அவ்வுணர்வின் செயல் வடிவமாக சாதிப் புராணங்கள், சாதி வரலாறுகள் தோன்றின. அப்படிப்பட்ட சாதி வரலாறுகள், பொதுவாகப் புராண மூலங்களில் தோற்றுவாய்களைத் தேடிக் கொண்டன; கிடைக்கும் இலக்கிய, கல்வெட்டுத் தரவுகளைக் கொண்டு, புகழ்பூத்த கடந்த காலத்தைக் கட்டமைத்துக் கொண்டன. இந்த வகையிலான சாதி வரலாறை வண்ணார் குழுமம் படைத்துக் கொண்டு உள்ளதா என்று தெரியவில்லை. எவ்வாறாயினும், இந்த நூலில் ஆ.சிவசுப்பிரமணியன், வண்ணார் சமூக வரலாற்றை சமூக அறிவியல் நோக்கில் எழுத முயன்றுள்ளார்.

வண்ணார் வாழ்வும் வரலாறும், துரும்பர், வண்ணார் சமூகத்தின் எதிர்காலம் ஆகிய மூன்று கட்டுரைகளில் தமிழ்ச் சமூகத்தில் வண்ணார் வரலாறு, நிலை பற்றி ஆராயப்படுகின்றது. இந்த ஆய்வின் மூலம் இன்று தமிழகத்தில் உள்ள பிற சாதிகளைப் போலவே, வண்ணார் சாதியும் பல சாதிகளின் தொகுப்பு எனத் தெரிகிறது. கடந்த இரு நூற்றாண்டுகளாக வட்டாரம் கடந்து, ஒரே மாதிரியான சாதிகள் பெருங் குழும அடையாளத்தை உருவாக்கிக் கொள்வது பலவிதமான சமூக நிர்பந்தங்களால் நடைபெற்று வருகிறது. அவ் வகையில் வண்ணார்களும் ஒரே குழுமமாக மாறுவது தொடங்கியுள்ளது. ஆனால் ஊர் வண்ணார், சாதி வண்ணார் என்ற பெரும் வகையினம் வண்ணார் ஒரே குழுமமாக மாறுவதற்குப் பெருந்தடையாக உள்ளது. பள்ளர், பறையர் முதலான குடிகளுக்கு வெளுக்கும் வண்ணார், சாதி வண்ணார்களாக உள்ளனர். வெள்ளாளர் முதலான சாதிகளுக்கு வெளுக்கும் வண்ணார், ஊர் வண்ணார்களாக உள்ளனர். மருத நாட்டு வண்ணார், பாண்டிய வண்ணார் என்பன போல வட்டார அடிப் படையிலும், பணிக்க வண்ணார், புதிரை வண்ணார் என்பன போல தாம் தொழில் செய்யும் குழுமங்களின் அடிப்படையிலும் வண்ணார் பல சாதிப் பிரிவுகளாக உள்ளனர்.

1976இல் சட்டநாதன் அறிக்கை சுமார் ஐந்து லட்சம் மக்கள்தொகை கொண்டதாக வண்ணார் சமூகத்தை மதிப்பிட்டது. தமிழகத்தில் உள்ள சிறுபான்மை சாதிக் குழுமங்களில் ஒன்று வண்ணார் குழுமம். வண்ணார்கள் பெரும் நகரங்களில் மட்டுமே குறிப்பிடத்தக்க எண்ணிக்கை அளவில் வாழ்கின்றனர். கிராமங்களில் இரண்டொரு குடும்பங்களாக மட்டுமே வசிக்கின்றனர். அதனால் ஊரில் உள்ள பெருஞ் சாதிக் குழுமங்களால் பல்வேறு வகையிலான ஒடுக்குமுறை களுக்கு ஆளாகுகின்றனர். துரும்பர் போன்ற சாதி வண்ணார்கள் மீது, பார்த்தாலே தீட்டு என்னும் வகையில் சாதி இந்துக்கள் கடுமையான தீண்டாமையைக் கைகொண்டனர். இதனால் அவர்கள் மீது பகலில் வெளியே வரக்கூடாது என்ற கட்டுப்பாட்டை சாதி இந்துக்கள் விதித்து இருந்தனர். இரவில் மட்டும்தான் அவர்கள் வெளியே நடமாடியுள்ளனர். இந்தக் கட்டுப்பாடு 1932-இல் நீதிக்கட்சியின் ஆட்சியில்தான் நீக்கப்பட்டது. மேலும், சாதி வண்ணார் யாருக்குத் தொழில் செய்கின்றார்களோ, அந்த ஒடுக்கப்பட்ட சாதியினரும்கூட சாதிரீதியான ஒடுக்குமுறைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது சாதிமுறையின் மிக மோசமான தன்மைக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

வண்ணார்கள் பற்றிய செய்திகள் பண்டைக் காலம் முதல் கிடைக்கின்றன. ஆனால் அப்போது வண்ணார்கள் குடி ஊழியக்காரர்களாக இல்லை; ஊதியம் பெறும் தொழிலாளர்களாக இருந்துள்ளனர். இதற்குச் சான்றாக, வண்ணார் காணம், வண்ணார் கற்காசு முதலான தொழில் வரிகள் வண்ணாரிடமிருந்து பெறப்பட்ட கல்வெட்டுச் செய்தியை ஆ.சிவசுப்பிரமணியன் எடுத்துக் காட்டியுள்ளார்.

வண்ணார்கள் துணிக்கு வண்ணம் ஊட்டுபவர் களும், துணிகளில் ஓவியம் தீட்டுபவராகவும் இருந் துள்ளனர். மேலும் வண்ணார்கள் நில உடைமையாளர் களாகவும், கோயிலுக்கு நிலக் கொடை, கோயில் புழங்கு பொருள் கொடை கொடுத்தவர்களாகவும் இருந்துள்ளனர். இப்படி இருந்தவர்கள் எப்போது குடி ஊழியக்காரர் களாக மாறினர் என்று தெரியவில்லை என்று ஆ.சிவசுப்பிரமணியன் கூறுகிறார். ஆயினும் அவர், 14ஆம் நூற்றாண்டில் கரிசூழ்ந்தமங்கலம் பெருமாள் கோயிலுக்குக் கொடைப்பொருளாக வண்ணார்கள்

வழங்கப்பட்ட செய்தியைக் குறிப்பிட்டு, “இது அடிமை முறையின் ஒரு வடிவமாகும்” என்று கூறுகிறார்.

இது முக்கியமான ஒரு குறிப்பு ஆகும். குடி ஊழிய முறைகூட அடிமைமுறையின் பல கூறுகளைக் கொண்டு உள்ளது. அடிமைமுறையையும் சாதிமுறையையும் ஒப்பிட்டு அம்பேத்கர் எழுதிய கட்டுரை இந்த இடத்தில் கூடுதல் வெளிச்சங்களைத் தரக் கூடியது. ஆயினும் தமிழ் நிலத்தில் குடி ஊழிய முறையும் சாதிப்படிநிலை முறையும் மாறாப் பண்புடைய சுயதேவை பூர்த்தியுடைய கிராம சமூக அமைப்பின் அல்லது நிலக்கிழமை சமூக அமைப்பின் நிரந்தர அம்சமாகக் கொள்ளாது, 14ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைமையின் விளைவு என எ.சுப்பராயலு, நொபொரு கரோஷிமா ஆகியோர் வாதத்தின்படி கொண்டால், ஆ.சிவசுப்பிர மணியன் போகிற போக்கில் தரும், வண்ணார் கோயிலுக்குக் கொடைப்பொருளாக வழங்கப்பட்டமை பற்றிய குறிப்பு முக்கியத்துவம் உடையது ஆகிறது.

வண்ணார் சமூகத்தின் மீதான, பொதுவாகக் குடி ஊழிய சமூகத்தின் மீதான பிரதான ஒடுக்குமுறை வடிவங்களில் ஒன்று “ஊர்ச்சோறு எடுத்தல்” ஆகும். ஊர்ச்சோறு எடுத்தலின் மூலம் வண்ணார் சமூகம் அனுபவித்த கொடுமையைத் தத்ரூபமாக ஆ.சிவசுப்பிர மணியன் எடுத்துக்காட்டியுள்ளார். ஆனால் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் தினசரி ஊர்ச்சோறு எடுக்கும் முறை இருந்ததா எனச் சந்தேகம் தோன்றுகிறது. மேட்டுநிலப் பகுதியான கொங்குப் பகுதியில், வண்ணார்கள் “கிராமத் தொழிலாளியாக” கருதப்பட்டு, ஆண்டுக்கொரு முறை குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை அடிப்படையில் மடாக் கணக்கில் நெல் அளக்கும் முறை இருந்தது. பொங்கல், தீபாவளிக் காலத்தில் “ஊர்ச்சோறு” எடுத்தல், அதாவது பலகாரங்கள், கறிக்குழம்பு, மதிப்பு மிக்கதாக இருந்த காலத்தில் நெல்லஞ்சோறு ஆகியவற்றை மட்டும் வாங்கிச் செல்லும் முறை இருந்தது. அது அவர்களின் ஒரு “உரிமை”யாக இருந்தது. கேட்கும்போது மறுக்க முடியாது. மறுத்தால் அது அவமானம். ஆயினும் இந்த “உரிமை”கூட வண்ணார் நோக்கிலிருந்து பார்க்கும் போது மோசமானதுதான்.

பொதுவாக, தொன்மையான சாதிமுறை தோற்றம், நிலைத்த சாதிப் படிநிலை தரவரிசை ஆகியவை பற்றி பொதுமைப்படுத்தப்பட்ட பார்வைகள் கடந்த காலத்தில் சாதி எதிர்ப்புப் போராட்டங்களுக்கு நியாய உணர்வை வழங்கின. ஆயினும், பொதுமைப்படுத்தப்பட்ட பார்வை முழு உண்மையானது இல்லை. ஒவ்வொரு சாதியின் வரலாறும் கால அளவிலும், இட அளவிலும் பல தனித் தன்மைகளைக் கொண்டுள்ளன. மேலே கண்ட செய்திகள் மூலம் வண்ணார் சமூக வரலாறும் இந்த உண்மையை வலியுறுத்துகிறது.

உலகமயமாக்கலுக்குப் பின், வண்ணார் சமூகம் மிக மோசமான அழிவை எதிர்கொண்டுள்ளது. குறிப்பாக, பாலிஸ்டர் துணி வந்த பிறகு வெள்ளாவி வைத்து வெளுக்க வேண்டிய அவசியமில்லாமல் போய்விட்டது. இந்நிலை கிராமப்புறங்களில் வண்ணார் சமூக இருப்பைத் துடைத்து அழித்துள்ளது; சடங்குநிலைத் தேவை மட்டுமே இன்னும் இருப்பிற்கான சிறிய வெளியை வழங்கியுள்ளது. அது இன்னும் சில இழிவுகளைச் சுமத்துவதற்கான, சுமப்பதற்கான வெளியாகவும் உள்ளது. கல்வி வாய்ப்புகளிலும், அரசு வேலைவாய்ப்பு களிலும், நகர வெளிகளிலும் வண்ணார் சமூகம் மிக பின்தள்ளப்பட்டு உள்ளதை, ஆ.சிவசுப்பிரமணியன் பின்னிணைப்பாகத் தந்துள்ள புள்ளி விவரங்களும் சட்டநாதன் அறிக்கையும் காட்டுகின்றன. இன்று சலவைத் தொழில் ஒரு புறம் அயர்னிங்காக மட்டும் சுருங்கிவிட்டது. மற்றொருபுறம் “லாண்டரி” தொழில் வலைப்பின்னலாக மாறியுள்ளது. பெரு மூலதனம் இடப்படும் லாண்டரித் தொழிலில் வண்ணார் சமூகத்தினர் தொழிலாளர்களாக மாற்றப்பட்டு வருகின்றனர். இதனை “பாட்டாளி வர்க்கமயமாதல்” என்று அழைக்க முடியுமா?

### வாழ்க்கை வட்டச் சடங்குகளும் வண்ணாரும்

வாழ்க்கை வட்டச் சடங்குகளும் வண்ணாரும் என்ற கட்டுரையில் மாராயம் சொல்லுதல், பூப்புச் சடங்கு, இறப்புச் சடங்கு ஆகியவற்றில் வண்ணார் வாழ்க்கை வட்டச் சடங்குகளில் இடம்பெறும் விதத்தை ஆ.சிவசுப்பிரமணியன் விளக்குகிறார். ‘பல்வேறு மங்கல சடங்குகளிலும் வண்ணார், நாவிதர் சாதியினர் சடங்கு நடத்துவோராக இருந்த நிலை பார்ப்பனியத்தை நோக்கிய மிக அண்மைக்கால நகர்வினால் மாறி விட்டது. பிராமணர்கள் சடங்கு நடத்துவோராக மாறி விட்டனர். ஆனால் அமங்கலச் சடங்குகளில் மட்டும் வண்ணார், நாவிதர் இருக்கவேண்டும் எனப் பிற்பட்ட சாதியினர் விரும்புகின்றனர்’. இந்நிலை வண்ணார்கள் மீது செலுத்தும் ஒடுக்குமுறைகளில் ஒன்று ஆகிவிடுகிறது.

இக்கட்டுரையில் மாராயம் சொல்லுதல் என்ற சடங்கு நிகழ்வை விவரிப்பதன் வழியாக, தொல் காப்பியத்தில் வரும் ‘மாராயம் பெற்ற நெடுமொழி யானும்’ என்பதற்கு நல்ல செய்தி கூறிப் பரிசு பெறுதல் என்று சரியான பொருளைத் தருவிக்கின்றனர்.

பூப்பு, இறப்பு சடங்குகளில் மூட்டுத்துணி எடுத்தல், மாத்துத் துணி விரித்தல் என்பன போன்ற, தீட்டு என ஒதுக்கும் அல்லது இழிநிலைக்கு ஆளாக்கும் வேலைகளைச் செய்ய வண்ணார்கள் நிர்பந்திக்கப்




படுகின்றனர் என்று ஆ.சிவசுப்பிரமணியன் காட்டு கின்றார். இது சடங்குகளின் மூலம் சாதிகளிடையே உள்ள உறவு கட்டமைக்கப்படுகிறது எனக் காட்டுகிறது. திருமணம் போன்ற மங்கல நிகழ்வுகளில் வண்ணார் பெற்றிருந்த சடங்குநிலை, ஏன் அந்நிலையை இழந்தனர், கொங்கு வட்டாரத்தின் எழுதிங்கள் போன்ற வட்டாரச் சடங்குகளில் வண்ணார் பெற்றிருக்கும் முதன்மைநிலை ஆகியவற்றை விரிவாக ஆராய வேண்டும். அதற்கான தூண்டுதலை இக்கட்டுரை விதைக்கின்றது.

**வண்ணார் குறித்த கதையாடல்**

வண்ணார் குறித்த வாய்மொழிக் கதைகள், அண்ணாமலையாரும் வண்ணாரும், கதைப்பாடல் களில் வண்ணார், தெய்வமாக்கப்பட்ட வண்ணார் ஆகிய நான்கு கட்டுரைகளில் தமிழ்ச் சமூகத்தில் உள்ள வண்ணார் குறித்த கதையாடல்களை விரிவாக ஆ.சிவசுப்பிரமணியன் ஆராய்கின்றார். இதுவும் ஒரு வகையில், வண்ணார் வரலாறு குறித்த ஆய்வாக உள்ளது. மற்றொரு வகையில் வண்ணார் குறித்த கதையாடல் எவ்வாறு தமிழ்ச் சமூகத்தில் மேற்கொள்ளப் பட்டு உள்ளது என்ற ஆய்வாகவும் உள்ளது. இந்தக் கதையாடல் வண்ணார்கள் குறித்து வண்ணார் உருவாக்கியது, பிறர் உருவாக்கியது என இரு வகையானவை.

“துரும்பர்” என்னும் இரண்டாவது கட்டுரை யிலேயே துரும்பர் சாதித் தோற்றம் குறித்த கதைகள் ஆராயப்பட்டு உள்ளன. இதைப் போல ஐந்தாம் கட்டுரையில் ஈரங்கொல்லியார், பாண்டி வண்ணார், ஈரோடு மாவட்டத்தில் உள்ள புரோதி வண்ணார், வடுவ வண்ணார், சாயக்கார வண்ணார், ஆண்டிக்குல வண்ணார் ஆகிய வண்ணார் சாதிகள் குறித்த தோற்றக் கதைகள் ஆராயப்பட்டு உள்ளன.

துரும்பர் குறித்த முதல் தோற்றக் கதை வருமாறு: சிவபெருமான் வெளுக்கக் கொடுத்த துணிகளில், வண்ணார் பரிவட்டத்தை மட்டும் தன் மகனிடம் கொடுத்து யானை மீதும், மீதியைப் பணியாளரிடம் கொடுத்துக் குதிரை மீதும் அனுப்பி வைத்தார். குதிரையில் வேகமாகச் சென்றதால் பணியாள் கோவிலுக்குள் சென்றுவிட்டார். வண்ணார் மகன் யானை மீது மெதுவாகச் சென்றதால் நேரமாகி, கோயில் கதவு பூட்டப்பட்டுவிட, வெளியே நின்றார். அதனால் வண்ணார் மகன் புறத்து வண்ணார் ஆகிவிட்டார். இதே கதை, ஈரங்கொல்லியார், பாண்டி வண்ணார் தோற்றக் கதையாகவும் சற்று மாற்றமடைந்து வருவது கவனிக்கத் தக்கது.

இன்னொரு தோற்றக் கதை பின்வருவது: பறையர் சாதிப் பெண்ணும், பள்ளர் சாதி ஆணும் திருமணம்

செய்துகொண்டர். இதற்குத் தண்டனையாக அந்த இரு சமூகத்தாரும் அவர்கள் அழுக்குத் துணியை வெளுக்கும் பணியை இவர்கள் பரம்பரை மீது சுமத்தி விட்டனர். அவர்களே புரத வண்ணார்.

இக்கதைகளை ஆ.சிவசுப்பிரமணியன் 'சமூக விழிப்புணர்வு இல்லாத காலத்தில் தம் அவல நிலைக்கு அமைதி காணும் வகையில் படைக்கப்பட்டவை' என்று விமர்சனம் செய்கின்றார். மேலும், இக்கதைகள் துரும்பர் போராட்ட உணர்வைத் தடுத்துநிறுத்தும் பணியைச் செய்துள்ளன என்றும் விமர்சனம் செய்துள்ளார். இக்கதைகள் புரத வண்ணார் குறித்து பிறர் உருவாக்கிய கதைகள் என்றும் கூறுகிறார். முதல் கதையில் பிற வண்ணார் பிரிவினர் மேல் இருப்பது தங்களுக்குக் கிடைத்த பரிசு என்றும், புரத வண்ணாருக்குக் கிடைத்த தண்டனை என்றும் கதையாடல் உள்ளது. இரண்டாவது கதையில், சாதி கடந்து திருமணம் செய்த மீறலுக்காகத் தண்டனை என்ற கதையாடல் உள்ளது. "தண்டனை" என்ற கருத்துருவம் இரண்டு கதைகளிலும் வலியுறுத்தப் படுகின்றது. ஆனால் இரண்டாவது கதையில் சகோதர உறவு உள்ளது. சாதி குறித்து வைதீகக் கதையாடல்கள் போன்று அல்லாமல், இவை எதிர்நிலையில் சாதிகளுக்கு இடையிலான சகோதர உறவை வலியுறுத்துவதற்குப் பயன்படும் தன்மை பெற்றுள்ளன என்பது கவனிக்கத் தக்கது.

ஈரங்கொல்லியார் குறித்த முதலிரண்டு தோற்றக் கதைகளும் துரும்பர் குறித்த முதல் தோற்றக் கதையைப் போலவே உள்ளன. அண்ணன் - தம்பி, யானை-குதிரை, கோயிலுக்கு உள் சென்று விடுதல் - வெளியே நிற்றல் என்ற எதிர்வுகள் உள்ளன. இக்கதைகள் இரண்டும் பாண்டி வண்ணாருக்கும் ஈரங்கொல்லியாருக்கும் சகோதர உறவை வலியுறுத்துகின்றன. இவ்விடத்தில் ஈரங்கொல்லியார் கோவிலுடன் தொடர்புடைய வண்ணார் என்பது நினைவில் கொள்ள வேண்டும். பிற வண்ணார்களை விட தங்களை உயர்வானவர்களாகக் கருதிக் கொள்கின்றனர். ஈரங்கொல்லியார் குறித்த பிற இரண்டு கதைகள் திருவரங்கப் பெருமாளுடனும், காஞ்சி வரதராஜப் பெருமாளுடன் தொடர்புப் படுத்துவன ஆகும்.

பாண்டி வண்ணார் குறித்து மூன்று கதைகள் ஆராயப்பட்டு உள்ளன. முதல் இரண்டு கதைகள் சிவன் - பார்வதி ஆகியோருடன் தொடர்புறுத்தியும், மூன்றாவது கதை சீதையுடன் தொடர்புறுத்தியும் கதையாடுகின்றன. முதல் கதையில் இயல்புநிலையில் பார்வதியின் தீட்டுத்துணி துவைக்கும் தேவைக்காக வண்ணார் தோற்றுவிக்கப்படுகிறார். பிறகு வண்ணார் தேவைக்காக வண்ணாத்தியும் அரச மரத்திலிருந்து வருவிக்கப்படுகிறார்.

தெய்வங்களுடன் தொடர்புறுத்திக் கொள்ளும் கதைகள் மூலம், "தாங்கள் இழிவானர்கள் அல்ல என்ற கருத்தை" வண்ணார்கள் வெளிப்படுத்தியுள்ளனர் என்று ஆ.சிவசுப்பிரமணியன் கூறுகிறார். இத்துடன், தமிழ்நாட்டில் சாதி சமத்துவப் போராட்டங்கள் என்ற கட்டுரையில் நா.வானமாமலையின் 'தெய்வங்களுடன் தொழில்களைத் தொடர்புறுத்தல், எல்லாத் தொழில் களும் சமமானவைதான் என்பதை வலியுறுத்துவதற்கு ஆகும்' என்ற கருத்தையும் நினைத்துப் பார்க்கலாம்.

இரண்டாவது, மூன்றாவது கதைகள் தோற்றக் கதைகள் அல்ல, ஆனால் வண்ணார் துன்பம் குறித்த கதையாடல் உள்ளது. அது சிவன் - பார்வதி சாபம் என்றோ, சீதையின் சாபம் என்றோ கதையாடல் செய்கிறது. இதைப் போலவே ஈரோடு மாவட்ட வண்ணார் குறித்த கதைகளும் "சாபம்" என்ற பொருண்மையில் அமைகின்றன. இக்கதைகள் எல்லாம் நிச்சயமாக, பிறர் வண்ணார் குறித்து வழங்கிய கதைகள் என்று சொல்லலாம். இவை அழுக்குப்பேய்கள் என்று ஆ.சிவசுப்பிரமணியன் கூறுகின்றார்.

இந்நூலில் இல்லாத ரிதொரு கதை இங்கு நினைவுகூரத்தக்கது. ஒரு வெள்ளாளக் கவுண்டர் பையனும் ஒரு வண்ணார் பெண்ணும் காதலிக்கின்றனர். அவர்கள் ஒருநாள் திருமணம் செய்துகொண்டு சேர்ந்து வாழ ஊரைவிட்டு செல்கின்றனர். அவர்களைக் கொங்கு வெள்ளாளர் துரத்திக்கொண்டு செல்கின்றனர். அக்காதலர்கள் கரைபுரண்டோடிய பவானி ஆற்றை நீந்திக் கடந்து, வேட்டுவ கவுண்டர்களிடம் திருமணம் செய்து வைக்கக் கோருகின்றனர். அவசரத்திற்கு, வில்லில் இருந்த நாணை அறுத்து, தாலியாகக் கட்டச் சொல்லி வேட்டுவர்கள் திருமணம் செய்து வைக்கின்றனர். இவர்கள் வழிவந்தவர்களே நரம்புக்கட்டி கவுண்டர் அல்லது வடகரை வெள்ளாளர் ஆவர். இது கொங்கு வெள்ளாளரில் ஒரு பிரிவினர் பற்றிய தோற்றக் கதைகளில் ஒன்று ஆகும். வண்ணாரோடு தொடர்புடையது ஆகையால் இக்கதையும் கவனிக்கத்தக்கது.

அண்ணாமலையாரும் வண்ணாரும் என்ற கட்டுரை திருவண்ணாமலையில் வழங்கும் வாய்மொழிக் கதைகள், கோயிலில் நடைபெறும் சடங்குகள் வாயிலாகவும் வண்ணார் சமூகக் கோயிலைச் சைவ சமயம் ஆக்கிர மித்துக் கொண்ட வரலாற்றைக் காட்டுகிறது என ஆ.சிவசுப்பிரமணியன் கூறுகிறார்.

கதைப்பாடல்களில் வண்ணார் என்ற கட்டுரை தடிவீரசாமி கதை, சின்னணைஞ்சான் கதை, புலமாடன் கதை ஆகிய மூன்று கதைப்பாடல்களை ஆராய் கின்றது. இம்மூன்று கதைப்பாடல்களிலும் சாதி மீறிக் காதலித்தமைக்காகக் கொல்லப்பட்ட வண்ணார் இளைஞனின் கதை, ஆதிக்கச் சாதியைச் சேர்ந்தவனின் பாலியல் வேட்கைக்குப் பலியான வண்ணார் பெண்ணின்

கதை, சிறு குற்றத்திற்காகக் கொல்லப்பட்ட வண்ணார் அண்ணன்-தங்கை கதை உள்ளதையும் அவற்றின் சமூகப் பின்புலத்தையும் ஆ.சிவசுப்பிரமணியன் எடுத்துக்காட்டியுள்ளார். இதைப் போலவே தெய்வமாக்கப்பட்ட வண்ணார்கள் என்ற கட்டுரையிலும் சாதி மீறிக் காதலித்தமைக்காகக் கொல்லப்பட்ட மூன்று வண்ணார் இளைஞர்கள் தெய்வம் ஆக்கப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டியுள்ளார்.

### வண்ணார் தொழில்நுட்பம்

வண்ணார் தொழில்நுட்பம் கட்டுரையில் குறி போடுதல், அழுக்கெடுத்தல், துவைத்தல், உவர் முக்குதல், வெள்ளாவி வைத்தல், பசை போடல் ஆகியவை குறித்து ஆ.சிவசுப்பிரமணியன் ஆராய்ந்துள்ளார். மேலும் வண்ணார்கள் துணிகளுக்கு வண்ணமேற்றும் கலைஞர் களாகவும், தையல் கலைஞர்களாகவும் விளங்கியுள்ளனர். இத்தொழில்நுட்பங்கள் அனைத்தும் வேதிவினை மாற்றங்களுடன் நெருக்கமான தொடர்புடையன. நமது சொந்த மரபின் அறிவியல் அறிவைக் காட்ட வல்லன. தமிழ் அறிவியல் வரலாற்றை உருவாக்குவதற்குக் குடித் தொழில்நுட்பங்கள் ஆய்வு அவசியம். அத்துடன் இத்தொழில்நுட்பங்கள் குறித்து மேலும் ஆராய்வதன் மூலம் சுற்றுச்சூழலுக்குக் கேடற்ற வகையில் சில வெளுத்தல், வண்ணமிடல் நுட்பங்களை மீட்டெடுக்க முடியும் எனவும் தோன்றுகிறது.

குறிப்பாக, குறிபோடுதல் குறித்த ஆ.சிவசுப்பிர மணியன் ஆய்வு மிகுந்த முக்கியத்துவம் உடையது. குறி போடுதல் கோடுகளையும் புள்ளிகளையும் கொண்டு, துணிகள் இன்னார் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று அடையாளம் காணும் முறை ஆகும். ஒலிக்குறியீடு களான எழுத்துக் கண்டறிவதற்கு முந்தைய கால பழமை யுடையது இந்த முறை. சங்க காலத்தில் கோடிட்டு எண்ணும் முறை இருந்ததை ஆ.சிவசுப்பிரமணியன் எடுத்துக்காட்டியுள்ளார். மேலும், தமிழகத்தில் அகழ்வாய்வின் மூலம் கண்டெடுக்கப்பட்ட பானை களின் மீது உள்ள குறியீடுகளும் இதுபோன்ற குறி போடுதல் நுட்பமா என்பது ஆராய்வதற்கு உரியது. ஏனென்றால், பண்டம் நிரம்பிய பானைகளை ஓரிடத்தில் வைக்கும்போது உரிமையாளரை அடை யாளம் காணவே இந்தக் கீறல்கள் இடப்பட்டு இருக்கலாம். இதே போன்று, உரிமையாளரை அடை யாளம் காணக் குறிபோடும் முறை, சில வகையான மண்டிகளிலும்கூட உண்டு. இனவரைவியல் தரவு தொல்பொருள்களை அர்த்தப்படுத்திக் கொள்ள அவசியமானது என்று ஏற்கனவே நிரூபிக்கப்பட்டு உள்ளது. அந்த வகையில் இந்த இனவரைவியல் தகவலும் தொல்தமிழக வரலாற்றை விளக்க உதவலாம்.




**தமிழக வண்ணார் வரலாறும் வழக்காறுகளும்**
ஆ.சிவசுப்பிரமணியன்
**வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்**
**41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 098**
**ரூ.135/-**

### முன்னோடியான முன்மாதிரி முயற்சி

மேலே எடுத்துக்காட்டியதுபோல, “தமிழக வண்ணார்: வரலாறும் வழக்காறும்” என்ற இந்நூல் இலக்கியம், கல்வெட்டு, பழமொழி, தோற்றக் கதை, பழமரபுக் கதை, தொன்மம் முதலான வழக்காறுகள் ஆகியவற்றைக் கொண்டு, ஒருதலை சார்பற்று, முன் ஊகங்களைக் கை கொள்ளாது வண்ணார் வரலாற்றை ஆராய்ந்துள்ளது. சான்றுகளைப் பயன்படுத்தும் முறையிலும், பொருள் கொள்ளும் முறையிலும் தருக்கவியல் பாங்கு உள்ளங் கொள்ளத் தக்கது. வண்ணார் சாதி வரலாற்றைப் புகழ்பூத்த வரலாறாகவோ அல்லது நிரந்தர சாதிப் படிநிலை வரிசை பற்றிய முன்கற்பிதங்கள் அடிப்படை யிலான வரலாறாகவோ படைக்காமல், சான்றுகள் அடிப்படையிலான அசைவியக்கமுடைய வரலாறாக ஆ.சிவசுப்பிரமணியன் படைத்துள்ளார். இந்த முறை பிற சாதிகள் வரலாற்றையும் ஆராய ஒரு முன்மாதிரியாக உள்ளது. சாதிகள் வரலாறு சமூக வரலாற்றின் ஒரு பகுதியாக மட்டுமல்லாமல், அறிவியல், தொழில்நுட்ப, பண்பாட்டு வரலாறுகளின் பகுதியாகவும் உள்ளதை இந்நூல் திறம்பட எடுத்துக்காட்டுகிறது. ஆகவே சாதிகள் வரலாற்றைப் புறக்கணித்தல், சமகால சாதி உணர்நிலை கொண்டு வரலாறு வரைதல் ஆகிய இரண்டுமே தவறான நிலைப்பாடுகள். இவை சமூக மாற்றப் போராட்டங்களில் தாக்கம் செலுத்தும் அளவுக்கு வலு மிகுந்தவை. ●

# ஓய்ந்துவிட்ட விரல்களின் உரையாடல்

ஜி.சரவணன்

சாமான்ய மக்களின் வாழ்வியலை சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் தன் வாழ்நாளெல்லாம் ஓயாது கலைப்படைப்பாக்கம் செய்துகொண்டிருந்த சிற்பி தட்சிணாமூர்த்தி அவர்கள் தன் 74வது வயதில் தன் கலைப்பரிமாணத்தை முடிவுறுத்திக்கொண்டார்.

தொடக்ககாலத்திலிருந்து சிற்பி தனபால், ஓவியர் ஆதிமூலம் போன்ற கலைஆளுமைகளுடன் நெருக்கமாகச் சேர்ந்தியங்கிய சிற்பி தட்சிணாமூர்த்தி அவர்கள் சென்னை ஓவியக் கல்லூரியில் பயின்று பின்னாளில் அங்கேயே பணியில் சேர்ந்து சுடுமண் சிற்பத்துறைத் தலைவராகப் பணிமுடித்து ஓய்வு பெற்றவர். 2000 ஆம் ஆண்டு வாக்கில் சந்ரு மாஸ்டரைச் சந்திக்கச் செல்கையில் இவர் கிரானைட்களில் சிற்பம் வடித்துக்கொண்டிருப்பதை பலமுறை கண்டிருக்கிறேன். பார்க்கிற போதெல்லாம் வெள்ளை நிற ஜிப்பாவில் எளிமையாகத் தோன்றும் அவர் சந்ரு மாஸ்டரைப்போல யாருடனும் அதிகமாக உரையாடிப் பார்த்ததில்லை. மாறாக அவரது விரல்கள் கற்களோடும் கற்சிற்பங்களோடும் சதாவும் உரையாடிக்கொண்டிருப்பதைக் காணநேர்ந்திருக்கிறது. அப்போதெல்லாம் கல்லூரியில் தினசரி ஏதேனுமொரு சிற்பத்தை அவர் வடிவமைத்து முடித்துவிடுவார் என்று கேள்விப்பட்டதுண்டு.

தொடக்க காலத்தில் நாட்டார் கலைமரபின் வடிவங்களையும் எளிய மனிதர்களின் உடல்மொழிகளையும் நவீனத்துவக் கலைப்படைப்புகளாக உருவாக்கம் செய்வதில் தீவிரமாகச் செயல்பட்டபோது நவீன பாணி ஓவியங்கள் மட்டுமே வரைந்துவந்தவர் 70கள் காலகட்டத்தில்தான் களிமண் சிற்பங்களை உருவாக்கத் தொடங்கியிருக்கிறார். அப்போது கைகளால் சிற்பங்களை வடிவமைத்தவர், பின்னாட்களில் இயந்திரங்களின் உதவியால் ஏராளமான களிமண் மற்றும் கிரானைட் சிற்பங்களை வடிவித்தவர். தன் வாழ்நாள் வரையிலும் தன் படைப் புருவாக்கத்தை தொடர்ந்துகொண்டே இருந்திருக்கிறார். அவரது மாணவர்களில் ஒருவரான க.நடராஜன் அவரைப் பற்றிய சித்திரத்தை,

> "வேகம், லாவகம், சோராதிருத்தல், ஊக்கப் படுத்துதல், மாணவர்களின் மீதான பரிவு, கொஞ்சம் கருணை, எளிமை, சாமானியருக்கான



பி.ச.குப்புசாமி, ஜெயகாந்தன், ஓவியர் ஆதிமூலம், சிற்பி தட்சிணாமூர்த்தி



சிற்பி தட்சிணாமூர்த்தி

தோற்றம், பகிர்ந்து கொள்ளுதல், இயங்கிக் கொண்டே இருத்தல், இவைதான் தட்சிணா மூர்த்தி" என்று பதிவு செய்கிறார். (தமிழ் இந்து 25-9-2016)

இவரது பெரும்பாலான ஓவியங்களும் சிற்பங்களும் எளியவகையிலான பெண்களை மையப்படுத்துவதாகவே அமையப்பெற்றுள்ளது. ஆப்பிரிக்கப் பழங்குடிப் பாணி கலைவடிவங்களை ஆழமாக உள்வாங்கியதன் பின்னணியிலேயே தென்னிந்திய கலைவடிவங்களை அதனுடன் ஒத்திசைவு செய்யும் கலை வெளிப்பாட்டுத் தன்மையே இவரது படைப்பாக்கத்தின் தனித்த சிறப்புகளில் ஒன்று. ஓவியர் பிக்காஸோவைத் தன் மகத்தான முன்னோடியாக தகவமைத்துக்கொண்ட இவரது ஓவியங்களும் சிற்பங்களும் பெரிதும் முப்பரிமாண வகைப்பாட்டில் அமையப்பெற்றவை. இவரது படைப்புகளின் தனித்த சிறப்புக்கு இவர் கைக்கொண்ட கியூபிசக் கோட்பாடுப் பின்புலமும் காரணமாக அமைந்தது என பலராலும் இனங்காணப்படுகிறது.

மத்திய மாநில அரசுகளின் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளமையும் இவரது கலைப்படைப்புகள் லண்டன், சுவிட்சர்லாந்து, ஹங்கேரி போன்ற நாடுகளில் நடைபெற்ற கண்காட்சிகளில் இடம்பெற்றமையும் இவரது படைப்பாளுமையைச் சான்று பகர்கின்றன.

இவரது மாணவர்களில் ஒருவரான ஓவியர் மருது தன் நினைவுகளாகக் குறிப்பிடும் நிகழ்வுகளிலிருந்து தட்சிணாமூர்த்தியின் ஆளுமைமிக்கக் கலைச் செயல்பாட்டின் செழுமையை உணர்ந்துகொள்ளமுடியும்.

"கல்லூரியில் படிக்கிற காலத்திலிருந்து இன்று வரை அவருடைய கடின உழைப்பும், சோர்வே இல்லாத தன்மையும் கொண்ட வாழ்வுமுறை அவரை அறிந்தவர் அனைவரும் அறிந்தது. அவருடைய இயங்குநிலையின் முன்பு பம்பரமும் தோற்கும். நானும் உத்வேகத்துடன் இருக்க அருகில் இருக்கும் அவரையே எப்போதும் மனதில் கொள்வேன். கடின உழைப்பிலேயே உயர்ந்தவர். எளிமையாகவும் அன்று கண்டது போல் இன்றும் எங்களின் அன்பிற்கு இனியவர். ஒருமுறை நீலாங்கரையிலிருந்து நண்பர் சாரங்கனோடு அடையாறில் இருக்கிற என்னைப் பார்க்க வந்திருந்த ஓவியர் ஆதிமூலம் அங்கிருந்து கிளம்பிச் சென்று "தச்சிணாவைப் பார்க்க வேண்டும் என்று" கூறியதுடன் நகைச்சுவையாக தன் நண்பர் தட்சிணாவைப் பற்றி "நான் இங்கு சிறிது தாமதித்தால் தட்சிணா இங்கே வந்து விடுவார்" என்று கூறியது இன்றும் நெகிழ்வை ஏற்படுத்துகிறது. (தடாகம்.காம்)

மேன்மையும் உன்னதங்களும் நிரம்பிய கலையுருவாக்கங்களால் நவீனத்தமிழ்க்கலையை செம்மைச் சிறப்பு செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவரான சிற்பி தட்சிணாமூர்த்தி அவர்களின் கலைஆளுமை நம் காலப் பெருமிதங்களில் ஒன்று. அவரது படைப்பாக்கங்களை மேலும் மேலும் கொண்டாடும் விதமாக அவரது நினைவைப் போற்றுவதே அவருக்கு தமிழ்ச்சமூகம் செலுத்தும் மதிப்பாய்ந்த அஞ்சலியாக அமையும்.

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸின்

# சங்க இலக்கிய அரிய பதிப்பு

1930இல் கலாநிலயம் என்னும் வார இதழில் கே. இராமரத்நம் ஐயரால் எழுதப்பெற்ற குறுந்தொகை உரை முதன்முதலாக அழகிய, செவ்விய வடிவில் புத்தகமாக வெளிவந்துள்ளது.

உலகப் புகழ்பெற்ற புதுதில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் இரா. அறவேந்தன் அரிய ஆய்வுரை எழுதி, ஆராய்ச்சிக்குத் தேவைப்படும் பல பின்னிணைப்புகளை இணைத்துப் பதிப்பித்துள்ளார்.




## குறுந்தொகை

ஆய்வுரையும் பதிப்பும் இரா. அறவேந்தன்

பக்கம்: 440

**விலை : ₹ 275/-**

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.com

# நூல்கள் அறிமுகம்




**லாகிரி**

நரன்

*வெளியீடு: 115, மாஸ் ரெசிடன்சி அபார்ட்மென்ட்ஸ்*

*S 3, இரண்டாவது தளம், கோடம்பாக்கம்*

*சென்னை - 24*

*தொலைபேசி: 8939409893*

*ரூ.75.00*

**கவிஞர் நரனின் முன்றாவது கவிதைத் தொகுப்பு நூல். வாழ்வை அதன் கொண்டாட்டங்களோடும் குரூரங்களோடும் நேர்மையோடு பேசும் கவிதைகளடங்கிய இந்நூலை சால்ட் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.**

சிசு கர்ப்பவதி பெண்ணொருத்தி
வேலை வேண்டி நிற்கிறாள்
வயிற்றிலிருக்கும் சிசுவும் வேலைக்கு வந்துசேர்கிறது
அவள் பெரிய தட்டுமுட்டுச்
சாமான்களைக் கழுவிவைக்கிறாள்
வீட்டின் எஜமானி இனி வாங்க உத்தேசித்திருக்கும்
சிறிய பாத்திரங்களையெல்லாம்
சிசு கழுவிவைக்கிறது
தாய்க்குப் பழையதை உண்ணக்
கொடுக்கும் எஜமானி
சிசுவிற்கு இனிவரும் ஆண்டின்
அறுவடை தானியத்தை
அவித்து மசித்துக்கொடுக்க உத்தேசிப்பாள்.
சிசுவிற்கு எண்ணத் தெரியாதாகையால்
அவள் தாயிடமே பிரித்துக்கொள்ளச் சொல்லி
சம்பளத்தை கையளிக்கிறாள்...

**சாகித்ய அகாடெமி யுவபுரஸ்கார் விருது, கலை இலக்கியப் பெருமன்ற விருது, கனடா இலக்கியத் தோட்ட விருது போன்ற பல விருதுகளைப் பெற்ற கதிர்பாரதியின் முதல் கவிதைத் தொகுப்பு தற்போது மறுபதிப்பாக ஓவியர் மணிவண்ணனின் நேர்த்தியான அட்டை வடிவமைப்பில் சால்ட் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.**

இரவு தளும்பிக்கொண்டு
இருக்கிற குளத்தில்
நெளிந்துகொண்டு
இருக்கிற பௌர்ணமியை
கொத்தும் கொக்கு
றெக்கை விரிக்க
நிலவு பறக்கிறது




**மெசியாவுக்கு மூன்று மச்சங்கள்**

கதிர்பாரதி

*வெளியீடு: 115, மாஸ் ரெசிடன்சி அபார்ட்மென்ட்ஸ்*

*S 3, இரண்டாவது தளம், கோடம்பாக்கம்*

*சென்னை - 24*

*தொலைபேசி: 8939409893*

*ரூ.75.00*



# மூன்று கவிதைத் தொகுதிகள்

பாவண்ணன்

**சமீபத்தில் கதிர்பாரதி, லாவண்யா,** செல்வராஜ் ஜெகதீசன் ஆகியோரின் கவிதைத்தொகுதிகளை அடுத்தடுத்து படிக்க நேர்ந்தது.

மூவருமே கவிதையுலகில் இயங்கி வருபவர்கள். இதற்கு முற்பட்ட தொகுதிகள் வழியாக வாசகர்களிடையே நம்பிக்கையூட்டும் கவிஞர் களாக தம்மை நிலைநிறுத்திக் கொண்டவர்கள்.

மூவருடைய கவிதை முயற்சிகளும் புதுமை நாட்டமும் வளர்ச்சியும் நிறைந்தவையாக உள்ளன.

கற்பனை அழகும் எளிமையும் பொருந்திய இவர்களுடைய கவிதை வரிகள் வாசிப்பு அனுபவத்தை மேம்படுத்துவதாக உள்ளன.

காற்றின் வீச்சில் உதிரும் இலை களிடையே எதிர்பாராமல் ஒரு மலரும் சேர்ந்து அலைந்தலைந்து விழுவதுபோல சாதாரணமாக ஒன்றையடுத்து ஒன்றாக வரிகள் விழும்போதே சட்டென்று நம்மை வசீகரிக்கிற ஒரு வரி அற்புதமாக விழுவதை இம்மூவரின் கவிதைகளிலும் நிகழ்கிறது. அந்த வரி நம்மை வேறொரு

உலகத்தை நோக்கி நகர்த்திச் சென்றுவிடுகிறது. வாழ்வின் மிக எளிய கணமொன்றில் கிட்டும் மகத்தான தரிசனமே கவிதை வாசிப்பில் கிட்டும் பேரனுபவம்.

'ஆனந்தியின் பொருட்டு தாழப்பறக்கும் தட்டான்கள்' கதிர்பாரதியின் இரண்டாவது தொகுதி. அவர் கவிதைகளைப் படிக்கும்போது நம்மை வசீகரிக்கும் முதல் அம்சம் அவற்றின் கட்டமைப்புதான். முற்றிலும் இறுக்கமானவை என்றோ அல்லது முற்றிலும் தளர் வானவை என்றோ ஒருகணமும் தோன்றுவதில்லை. தேவையான அளவில் மட்டுமே இறுக்கத்தையும் தளர்வையும் கொண்டு தன்னளவில் பொருத்தமான தாகவும் வசீகரமானதாகவும் ஒவ்வொரு கவிதையும் அமைந்துவிடுகின்றது. மொழியின் தளத்திலும் உணர்வின் தளத்திலும் இந்த வசீகரம் ஒருபோதும் கூடிவிடாமலும் குறைந்துவிடாமலும் கச்சிதமாக ஒன்றோடு ஒன்று இயைந்து ஒளிர்கின்றன. இதுவே கதிர்பாரதியின் கவிதைகளின் தென்படும் முக்கியமான சிறப்பம்சம். மற்ற கவிஞர்களிடமிருந்து இவரை வேறு படுத்திக் காட்டுவதும் இந்த அம்சமே.

கதிர்பாரதியின் கவிதைகள் புதிய வகையான குறியீடுகளை உருவாக்க விழைகின்றன. எழுதி எழுதிப் பழகிப் போய்விட்ட காற்று, வெப்பம், மலர், மழை, பறவை போன்ற குறியீடுகளைக் கூட முற்றிலும் வேறொரு தளத்தில் முன்வைக்க விரும்புகின்றன.




**ஒரு ஊரில் ஒரு கழுகு வசித்துவருகிறது**
**தன் கூடு தாங்கும் மரத்தைக்கூட கொத்தி**
**வேரடி மண்ணோடு சாய்த்தும் வருகிறது**
**கோழிக்குஞ்சின் மாமிசத்துக்கு**
**தன் கூர் அலகைப் பழக்கிவரும் அது,**
**புறாக்கள் களைப்புறும் மாடங்களில்**
**மைனாக்கள் உலவுவது தகாது எனச் சீறிவிட்டு**
**கோயில் விமானத்தில் போய் உட்கார்ந்துகொண்டு**
**தன்னிரு இறக்கைகளைக் கோதிக்கொள்கிறது**
**பதற்றமே சிட்டுக்குருவிக்கு அழகு என்றும் சொல்லி**
**மகிழ்ச்சியின் வானில் சுற்றித்திரியும்**
**சிட்டுக்குருவிகளைப் பதற்றத்துக்குள்ளாக்கவே**
**கத்தியின் நகலான**
**தன் நகங்களைப் பயன்படுத்தி வருகிறது**
**அதில் பதறிப் போய்த்தான்**
**ஒரு சிட்டுக்குருவி தண்டவாளத்தில் விழுந்தது**
**அப்போது**
**கழுகின் நகம் பளபளத்துக்கொண்டது.**

இப்படி ஒரு கவிதை இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. அதிகாரத்தில் விளைவுகளை ஒரு காட்சித் தொகுப்பாக முன்வைக்கும் இக்கவிதை தொகுப்பின் முக்கியமான கவிதைகளின் ஒன்றெனச் சொல்லலாம். தன் அதிகாரத்தின் கீழ் தன் வசிப்பிடமான மரம், தன்னைச் சுற்றியுள்ள வானம், மண், மண்ணுக்கும் விண்ணுக்கு மிடையே பறந்து திரியும் புறாக்கள், மைனாக்கள், குருவிகள் என எல்லாவகையான பறவைகளையும் ஒவ்வொன்றாகக் கொண்டுவந்து ஆட்சியை விரிவாக்கிக் கொள்கிறது கழுகு. முழு அதிகாரமும் வசப்பட்ட பிறகு, கழுகுக்கு நகங்களோ அலகுகளோ தேவைப்பட வில்லை. தன் தோற்றம் அல்லது இருப்பின் வழியாகவே தன் அதிகாரத்தை நிலைநிறுத்தித் தக்கவைத்துக் கொள்கிறது. பார்வை ஒன்று மட்டுமே அதற்குப் போது மானதாக இருக்கிறது. கழுகை அஞ்சும் சிட்டுக்குருவிகள் தண்டவாளத்தில் விழுந்து சாகும் காட்சி மனத்தைக் கனக்கவைக்கிறது. வானம் விரிந்த வெளி. அவ்வெளியில் கழுகுக்கு ஓர் இடம், சிட்டுக்குருவிக்கும் ஓர் இடம் என்னும் இயல்பான வாழ்க்கைமுறை ஒரு முடிவை நோக்கி வந்துவிட்டது என்பதை அறிவிக்கும் கணமாக அந்த மரணம் அமைந்துவிடுகிறது. வானத்தையும் மண்ணையும் வசப்படுத்த நினைக்கும் கழுகின் பேராசைக்கு இன்று சிட்டுக்குருவிகள் பலியாகின்றன. நாளை இந்த அதிகாரப்பரப்பு இன்னும் விரிவாகலாம். அப்போது சிட்டுக்குருவியைவிட இன்னும் சிறியதும் சுதந்திரத்தை விரும்புவதுமான வண்ணத்துப்பூச்சிகளும் மறையக்கூடும். உயிர்த்திருப்பதையே ஒரு துயரமான அனுபவமாகவும் மரணத்துக்கான காத்திருத்தலாகவும் மாற்றிவிடுகிறது அதிகாரம். அது எவ்வளவு பெரிய அவலம்.

கழுகின் அதிகாரத்தைச் சித்தரிக்கும் கதிர்பாரதி 'அங்கிங்கெனாதபடி ஓடும் அணில்' என்னும் கவிதையில்

அணிலின் சுதந்திரத்தைப் பற்றியும் சித்தரிக்கிறார். பூங்காவில் அங்கிங்கெனாதபடி எங்கும் தாவிக் குதித்தோடுகிறது அந்த அணில். சரசரவென வாதாம் மர உச்சிக்கு ஏறுகிறது. அங்கிருந்து குதித்து சிதறிக் கிடக்கும் வாதாம் விதைகளைக் கொறிக்கிறது. அருகில் விளையாடும் சிறுமியைக் குறுகுறுவெனப் பார்க்கிறது. பிறகு அந்தச் சிறுமியைப் போலவே தானும் தாவிப் பார்க்கிறது. வாழைமரத்தில் ஏறி வாழைப்பூவை முகர்ந்து பார்க்கிறது. நெருங்கி உட்கார்ந்திருக்கும் காதலர்களைப் பார்க்கிறது. மரத்தடியில் மல்லாந்து உறங்கும் மனிதர்களையும் பார்க்கிறது. உதிர்ந்து கிடக்கும் மலர்களையும் பார்க்கிறது. எல்லா இடங்களிலும் நின்றுநின்று பார்த்துவிட்டுக் கடந்துபோகும் அணிலைச் சித்தரிக்கும் போக்கில் ஒற்றைக்கணத்தில் புற உலகத்திலிருந்து நம் அக உலகத்துக்குள் அந்த அணில் தாவி விழுந்துவிடுகிறது. நாம் ஒவ்வொருவரும் அணிலாகிவிடுகிறோம். நம் வாழ்க்கை அணில் வாழ்க்கையாகிவிடுகிறது. அணில் வாழ்க்கை என்பதால் தான் அது கழுகால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கையாகவும் சுதந்திரமான வாழ்க்கையாகவும் இருக்கிறது.

தனிமையின் துயரைச் சித்தரிக்கும் கதிர்பாரதியின் கவிதை பாரதியாரின் 'ஓடி விளையாடு பாப்பா' என்னும் வரிக்கு எதிர்முனையில் இருக்கிறது.

**மாநகர வாழ்வின்**
**கண்டிஷன்ஸ் அப்ளைகளுக்குப் பிறந்த மகனொருவன்**
**சிறகு முளைத்த பந்தை**
**யாருமற்ற தன் வீட்டின் அறைச்சுவரில்**
**அடித்து அடித்து விளையாடுகிறான்.**
**அந்தப் பந்து**
**அவனுக்கும் தனிமைக்குமாகப்**
**போய்த் திரும்பி**
**திரும்பிப் போய்**
**ஓய்கிற வேளையில்**
**வந்தே விட்டது**
**மற்றும் ஓர் இரவு**

குழந்தைகள் கூட்டம்கூட்டமாக விளையாடி மகிழ்ந்ததெல்லாம் இன்று இறந்தகாலமாகிவிட்டது. பள்ளியையும் படிப்பறையையும் மறந்து தோப்புகளிலும் குளக்கரையிலும் ஆற்றங்கரையிலும் கோவில் மண்டபங்களிலும் விளையாடிக் களிப்பில் ஆழ்ந்ததெல்லாம் ஒரு காலம். படிப்புக்கென ஒரு நேரத்தை வகுத்துக்கொண்டு எஞ்சிய நேரத்தையெல்லாம் ஆடிக் கழித்து மகிழ்ந்ததெல்லாம் வேறொரு காலம். சுதந்திரமான மானாக துள்ளித் திரிந்த காலம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. இன்று எல்லா இடங்களிலும் தனிமை பரவியிருக்கிறது. யாரும் யாருடனும் இல்லாத அவலம். மாநகரத்திலோ அந்த அவலம் இன்னும் அதிகம். எண்ணிக்கையின் அடிப்படையில் மக்கள் தொகை மிகுதியான நகரில் யாரும் யாருடனும் இல்லாத தனிமையே மாபெரும் துயரம். பாதுகாப்புக்காக பூட்டப்பட்ட வீடுகளில் தனிமையில் தனக்குத்தானே விளையாடிப் பொழுதைக் கழிக்கும் குழந்தைகளை நினைக்கவே பாவமாக இருக்கிறது. முதுமைத்தனிமையை மட்டுமே இதுவரைப் பேசி வந்த உலகம் குழந்தைத்தனிமையை இப்போது பேச ஆரம்பித்திருக்கிறது. பொழுதைப் போக்குவதற்காக ஓர் அறையில் அல்லது ஒரு கூடத்தில் தனிமையில் தனக்குத் தானே சதுரங்கம் ஆடிக்கொள்ளும் முதியவர்களைப் போல, இப்போது அடுக்ககக்குழந்தைகள் பூட்டப்பட்ட அறைக்குள் தனிமையில் ஆடிப் பொழுதைப் போக்குகின்றன. குழந்தை அடிக்கும் பந்தை மறுமுனையில் ஓர் ஆளாக நின்று வாங்கித் திருப்பி அனுப்புகின்றன சுவர்கள். வீடுகளைப் பிரித்துத் தனிமைப்படுத்தும் சுவர்கள், தனிமையில் ஆடும் குழந்தைக்கு உயிரில்லாத் துணையாக மறுமுனையில் நின்று ஆடுகின்றன. மாநகரம் முழுதும் கோடிக்கணக்கான சுவர்கள். கோடிக் கணக்கான குழந்தைகள். ஒவ்வொரு சுவருக்குப் பின்னாலும் ஒவ்வொரு குழந்தை ஆடிக்கொண்டிருக்கிறது. சுவரைவிட்டு வெளியே வந்தால், ஒவ்வொரு குழந்தைக்கும் பல குழந்தைகளின் துணை கிடைக்கக்கூடும். ஆனால் பாதுகாப்புச்சுவர்களை விட்டுக் கடந்துவரத் தெரியாத பரிதாபத்துக்குரிய குழந்தைகள் அவர்கள். பாதுகாப்பு என்னும் அம்சமே வாழ்வின் மிகப்பெரிய ஆனந்தத்தை குழந்தைகளிடமிருந்து பறித்துவிட்டதென்னும் உண்மையை உணராத மாநகரம் இன்னும் இன்னும் என சுவர்களைக் கட்டியெழுப்பியபடி இருக்கிறது. கண்டிஷன்ஸ் அப்ளை விதிகளைக் கொண்ட விண்ணப்பங்களில் கையெழுத்திட்டு கடன் பெறும் மாநகரவாசிகளுக்காக அடுக்ககங்கள் உருவானபடியே உள்ளன.

'உன்னையொன்று கேட்பேன்' என்னும் கவிதை மானுட மனத்தைத் தகவமைப்பதில் ஊடக பிம்பத்துக்கு இருக்கும் ஆற்றலைச் சுட்டிக் காட்டுகிறது. திரைப் படத்தைப் பற்றி எதுவுமே அறியாத ஒரு கிராமத்துக்குள் தன்னை ஒரு திரைப்படம் எடுப்பவனாக அறிமுகப் படுத்திக்கொண்டு நுழையும் ஒருவனைப்பற்றிய அயல் நாட்டுப் படமொன்றை இக்கணத்தில் நினைத்துக் கொள்ளத் தோன்றுகிறது. சுருள் இல்லாத படப் பெட்டியை ஓடவிட்டு, அந்தக் கிராமத்தில் உள்ள ஒவ்வொருவரையும் அப்பெட்டியின் முன்னால் நிறுத்திவைத்து தம்மைப்பற்றிப் பேசச் சொல்வான் அந்த இளைஞன். அவனுடைய பொய்மையைப்பற்றி எதுவுமே அறியாத கிராமத்தினர் கடவுளின் முன்னால் நிற்க நேர்ந்ததைப்போல நினைத்துக்கொண்டு கண்ணீர் மல்க ஒவ்வொருவரும் தன் மனத்தைத் திறந்து பேசத் தொடங்குவார்கள். மின்ஊடகத்தின் வலிமை கற்பனைக்கு எட்டாததாக உள்ளது. ஊடகத்துடன் மானுடன் உருவாக்கிக்கொள்ள விழையும் உறவு வியப்பூட்டக் கூடியது. அந்த உறவுப்பின்னலின் சிக்கலை கதிர் பாரதியின் இந்தக் கவிதை வாசகர்களுக்கு உணர வைக்கிறது என்றே சொல்லலாம். உன்னையொன்று

கேட்பேன் என்பது ஒரு பாடல். அப்பாடலுக்கு வாயசைத்து நடிக்கிறாள் ஒரு நடிகை. அந்த நடிகையின் முகவசீகரம் பார்வையாளனை அந்த வரிக்குப் பதில் சொல்லத் தூண்டுகிறது என்பதுதான் கவனிக்கவேண்டிய முக்கியமான அம்சம். சக மனிதர்களின் கேள்விகளையும் உறவையும் ஒதுக்கித் தள்ளிவிட்டுச் செல்கிறவர்களாகவே பல நேரங்களில் நாம் இருக்கிறோம். அதே சமயத்தில் ஒரு பிம்பம் முன்வைக்கும் பாவனைக் கேள்விக்கு மனமுருக, உயிருருக பதில்களை நம் ஆழ்மனம் மறுநொடியே முன்வைத்துச் செல்வதில் வேகம் காட்டுகிறோம். ஆச்சரியமான இந்த முரண் மிகப்பெரிய சமூக ஆய்வுக்குரியது.

'அலறி ஓடும் மவ்னம்' கவிதை அதிர்ச்சியும் துயரும் கலந்த ஒரு சித்தரிப்பு.

இருபது நிமிடங்கள் நகர்வதற்கு முன்பு
தூக்கிலிட்டுக்கொண்டவளின் பொருட்டு
அறையை அறைந்தறைந்து கலங்குகிறது
அலறும் செல்பேசி.
நேற்றைய ஊடலை நேர்செய்வதற்கான
காதலன் முத்தம் தேங்கி நிற்கிற
அந்த செல்பேசிக்குள் சாபமென நுழைகிறது
அவன் அனுப்பிய அந்தரங்கக் குறுஞ்செய்தி
இனிப்புப்பண்டங்களின் மீது ஊர்கிற எறும்புகள்
தற்கொலையின் கசப்பைச் சுமந்து தள்ளாடுகின்றன
திரும்ப இயலாத அகாலத்துக்குள்
சிக்கிக்கொண்டு திணறுகிற அந்த அறையை
காற்று திறக்க அலறிக்கொண்டு ஓடுகிறது
விக்கித்து நின்ற மவ்னம்

கதிர்பாரதியின் கூறுமுறையில் உள்ள கருணையில்லாத விலகல் தொனி இக்கவிதையை செதுக்கி வைத்த சிற்பமாக்கிவிடுகிறது. தூக்கில் தொங்கி மரணமடைந்துவிட்டவளிடமிருந்து நேரிடையாகத் தொடங்கிவிடுகிறது கவிதை. செல்பேசி அலறுகிறது. எடுக்க ஆளில்லை. ஒருமுனையில் உயிரற்ற உடலாக சொற்களை உதறிக் கடந்து சென்றுவிட்ட ஒருத்தி. மறுமுனையில் சொற்களையும் முத்தங்களையும் ஆறுதல்களையும் கொட்டுவதற்குத் தயாராக உள்ள ஒருவன். அவனுடைய மன்றாடல்களாக அலறுகிறது செல்பேசி. திறந்துவைக்கப்பட்ட இனிப்புப்பண்டம் அழுத்தமான ஒரு படிமம். உண்டு மகிழவென வாங்கிவந்த இனிப்பு தின்னப்படாமலேயே எறும்புகளுக்கு உணவாகிவிடுகிறது. கலந்து மகிழவென தொடங்கிய வாழ்க்கை வாழப்படாமலேயே மரணத்தில் முடிந்துபோகிறது. அதைப்பற்றி அதிகம் பேசிவிடக் கூடாது என்பதில் கதிர்பாரதி காட்டும் எச்சரிக்கையுணர்வு மிக முக்கியமானது. அந்தத் தருணத்தை மிக விரைவாகக் கடக்க நினைப்பவர்போல அடுத்த வரிக்குச் சென்றுவிடுகிறார். இறந்து தொங்கும் உடல், அலறித் துடிக்கும் செல்பேசி, எறும்புகள் உண்ணும் இனிப்பு என ஒவ்வொன்றாகக் காட்டி நகரும் கவிதை இறுதியில் அரூபநிலையில் அங்கு தேங்கியிருக்கும் மௌனத்தின் நிலையைக் காட்டி நிறைவெய்துகிறது. ஓர் உயிருள்ள ஆகிருதியாக மௌனம் அக்காட்சியைக் கண்டு அதிர்ச்சியில் மூழ்கிவிடுகிறது. துன்பம் கொள்கிறது. துயரத்தின் பாரத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல் துடிக்கிறது. இறுதியாக காற்றின் கருணையால் திறந்த கதவின் வழியாக வெளியேறிவிடுகிறது. அந்த மௌனம் ஏன் அலறியடித்துக்கொண்டு ஓடவேண்டும் என ஒருகணம் நினைத்துப் பார்க்கும்போது கவிதையின் ஆழம் நமக்குப் புலப்படுகிறது. அந்த மௌனம் அந்த அறையில் எப்போதும் இருந்து வந்திருக்கிறது. அந்தக் காதலர்கள் சிரித்து மகிழ்ந்ததையும் முத்தமிட்டுக் கொண்டதையும் பேசிக் களித்ததையும் ஒரு சாட்சியாக எப்போதும் பார்த்து வந்திருக்கிறது. இயல்பில்லாத முறையில் நிகழ்ந்துவிட்ட மரணத்தை அதனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. எதையும் தடுக்க முடியாமல் ஒரு சாட்சியாக நின்று பார்க்க நேர்ந்த துக்கத்தின் வேதனையிலிருந்தும் அதனால் தப்பிக்க முடியவில்லை. அந்த அலறலுக்கான காரணம் அதுதான். ஒருபுறம் செல்பேசியின் அலறல். மறுபுறம் அனைத்துக்கும் சாட்சியான மௌனத்தின் அலறல். ஓர் அலறலில் தொடங்கும் கவிதை இன்னொரு அலறலில் முடிவடைகிறது. வாசிப்பின் முடிவில் துயரத்தை நோக்கித் தள்ளும் அனுபவமே இதை கவிதையாக்குகிறது.

தொகுதி முழுதும் இப்படிப்பட்ட நுண் சித்தரிப்புகளைக் கொண்ட பல கவிதைகள் உள்ளன. கதிர்பாரதி வரிகளில் விவரித்திருக்கும் உலகுக்கு இணையாக இன்னொரு உலகத்தை வாசகனுக்குள் உருவாக்கும் ஆற்றல் கதிர்பாரதியின் கவிதைகளுக்கு இருக்கின்றன. ஒருவகையில் கதிர்பாரதியின் கவிதைமொழி மாயாஜால வித்தைக்காரனின் கையில் இருக்கும் அழகான வண்ணத் துணியை ஒத்திருக்கிறது. ஒருமுறை மடித்துவிட்டுப் பிரிக்கும்போது அது இதழ்கள் விரிந்த மலராகத் தோற்றமளிக்கிறது. இன்னொருமுறை அழகான குடையெனத் தோற்றமளிக்கிறது. அடுத்தமுறை சிறகுகள் விரித்துப் பறக்கக் காத்திருக்கும் பறவையெனத் தோற்றமளிக்கிறது. கணம்தோறும் மாறிமாறித் தோற்றமளிக்கும் காட்சிகள் வாசகனின் மனவுலகில் விரிந்துவிரிந்து கற்பனைகளைத் தூண்டியபடி இருக்கின்றன. இந்தக் கற்பனைகளே கதிர்பாரதியின் கவிதைகள் வழங்கும் செல்வம் அல்லது கொடை.

நீர்க்கோல வாழ்வை நச்சி, இரவைப் பருகும் பறவை ஆகிய தொகுதிகளைத் தொடர்ந்து அறிதலின் தீ என்னும் தலைப்பில் லாவண்யா சுந்தரராஜனின் மூன்றாவது தொகுதி வெளிவந்திருக்கிறது. நான் கவனித்த வகையில் தொடர்ச்சியாக சீராகவும் சிறப்பாகவும் எழுதி வரும் கவிஞர்களில் ஒருவர் லாவண்யா சுந்தரராஜன்.

முந்தைய தொகுதிகளில் காணப்பட்ட கவிதைகளின் தொடர்ச்சியாக இல்லாமல், முற்றிலும் புதிய திசையில் புதிய வடிவத்தோடு பயணம் செய்பவையாக காணப் படுகின்றன இக்கவிதைகள். கவிதை முயற்சியில் லாவண்யாவுக்கு இருக்கும் ஆழ்ந்த ஈடுபாட்டையே இது சுட்டிக்காட்டுகிறது.

தொகுப்பின் முக்கியமான கவிதைகளில் ஒன்று நீர்ப்பாறை. நீர்ப்பாறை என்னும் சொல்லிணைவில் வசீகரம் நிறைந்திருக்கிறது. நீரில் இருக்கும் பாறையா அல்லது நீராக இருக்கும் பாறையா என்றொரு பொருள் மயக்கம் அச்சொல்லை மனசுக்கு நெருக்கமுள்ளதாக மாற்றுகிறது.

**ஆதியில் அவள் பாறையென்றிருந்தாள்**
**நீலக்கடல் அலைந்து அலைந்து நித்தம் அவளை**
**கெஞ்சிக்கொண்டிருந்தது**
**சிறிதும் இரக்கமில்லை கடல்மீது**
**பெருமிதம் கொண்டிருந்தாள்**
**கவலையற்ற கடல்**
**மெல்ல தின்னத் தொடங்கியது பாறையை**
**மேனி மெலிந்தாள்**
**கரடுமுரடுகள் குறைந்தன**
**கொடியிடையாள்**
**கடலாலே அழகியானோம்**
**என்றே மகிழ்ந்திருந்தாள்**




**மெல்ல**
**கூழாங்கல்லாகி**
**தன்னைத் தொலைத்திருந்தாள்**
**கடலடியில்**

ஒரு பெண்ணின் மொத்த வாழ்நாள் அனுபவத்தையும் பாறை தேய்ந்து கூழாங்கல்லாகும் உருமாற்றத்துடன் இணைத்துப் பார்க்கத் தூண்டுகிறது கவிதை. தன்னைச் சுற்றி நிகழ்வன அனைத்தும் நன்மைக்கே என்ற எண்ணத்தில் மகிழ்ந்திருக்கும் பாறை என்றோ ஒருநாள் தான் ஒரு கூழாங்கல்லாக சிறுத்துப் போயிருப்பதை அறிந்துகொள்கிறது. அறிந்துகொள்ளும் அனுபவமே 'அறிதலின் தீ'.

'வெறுமனே நோக்குதல்' என்னும் கவிதையில் சித்தரிக்கப்பட்டிருக்கும் ஒரு காட்சி கவித்துவம் நிறைந்ததாக இருக்கிறது. ஒரு யானையும் ஒரு நாரையும் மட்டுமே இடம்பெற்றிருக்கும் இக்காட்சிச்சித்திரத்தைப் படித்ததுமே, அக்காட்சி மனத்தை நிறைத்துவிடுகிறது. மிகக்குறைந்த வண்ணக்கலவையால் தீட்டப்பட்ட மிகச்சிறந்த ஓவியமெனத் தோற்றமளிக்கிறது கவிதை. 'பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன பவளக்கூர்வாய்' என்று சுட்டிய சத்திமுத்தப் புலவரைப்போல அகப்பை வாய் நாரை என்று குறிப்பிடுகிறார் லாவண்யா சுந்தர ராஜன்.

**சிறுகுன்றை எப்போதும்**
**சுமந்து திரியும்**
**கருஎருது எச்சிலொழுக**
**அமர்ந்திருந்தது யானையென**
**அகப்பை வாயைக்**
**கொண்ட நாரை**
**குச்சிக்காலால் தவம் செய்து**
**நெருங்கிவிட முயன்றாலும்**
**தன் முன்னிருக்கும்**
**சிறு உருவைப்பற்றி**
**எந்தவித சலனமுமற்றிருக்கும்**
**பிரம்மாண்டத்தை ஏறிட்டுப்**
**பார்ப்பதைத் தவிர**
**வேறென்ன செய்யமுடியும்**
**அச்சிறு நாரையால்**

முதுகுத்திமிலுடன் ஓரிடத்தில் அமர்ந்திருக்கிறது ஓர் எருது. அதன் அருகில் நெருங்கிச் சென்று அண்ணாந்து பார்க்கிறது ஒரு நாரை. நாரையின் இருப்பை எருது உணர்ந்துகொண்டதா இல்லையா என்பது உறுதியாகத் தெரியவில்லை. எருதுவிடம் நாரை என்ன எதிர்பார்க்கிறது என்பதும் தெரியவில்லை. ஆனால் எருதுவின் இருப்பைக் கண்டதும் நாரையின் உள்ளத்தில் ஏதோ ஓர் இனம்புரியாத மகிழ்ச்சி பொங்குகிறது. எருதுவின் தோற்றத்தை ஒரு விஸ்வ ரூபமாக உணரும் நாரை, அதை ஏறிட்டுப் பார்ப்பதன்

வழியாகவே தன் மனத்தை மகிழ்ச்சியால் நிரப்பிக் கொள்ள முயற்சி செய்கிறது.

ஒரு வெட்டவெளி. வெட்டவெளியில் தன் மகிழ்ச்சியைக் கண்டடைந்து திளைக்கும் எருது, எருதுவின் இருப்பில் தன் மகிழ்ச்சியைக் கண்டடையும் நாரை என மூன்று புள்ளிகள் நமக்கு இக்கவிதை வழியாகக் கிடைக்கின்றன. மகிழ்ச்சியின் பாதையென இப்புள்ளிகள் வழியாக நம்மால் ஒரு கோட்டை இழுத்துக்கொள்ள முடியும். நாரையைப் பார்த்து மகிழக்கூடிய இன்னொரு உயிர், அதைப் பார்த்து மகிழக்கூடிய மற்றொரு உயிர் என நம் கற்பனையில் அந்தக் கோட்டை இன்னும் நீட்டித்துக்கொண்டே செல்லலாம். அதற்கான சாத்தியங்களோடு உள்ளது கவிதை. எனினும் கவிதையின் இறுதியில் லாவண்யா கொடுத்திருக்கும் சமர்ப்பணக்குறிப்பு, கவிதையின் விரிவைத் தடுத்துவிடுவதுபோல உள்ளது.

மௌன ஊற்று என்னும் கவிதையில் வசீகரமான ஒரு காட்சி சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

**மௌனத்தை ஊற்று நீராக்கி**
**நிறைத்திருந்த கிணறு**
**விடாது பொழியும் நிலவை**
**சலசலத்து பிரதிபலிக்கிறது**
**கழுத்திறுகப் பிணைக்கப்பட்டிருந்த**
**காயம் பட்ட குடம்**
**தன் விருப்பத்தோடோ இல்லாமலோ**
**முகர்ந்தெடுத்த நீரில்**
**கூட வந்த துளி நிலவைச்**
**சலனமின்றி எடுத்துச் சென்றது.**

ஒரே கணத்தில் மூன்று இடங்களில் தெரியும் நிலவின் இருப்பைக் கண்டடையும் மகிழ்ச்சி இந்தக் கவிதையில் பொங்கி வழிகிறது. வானத்தில் ஒரு நிலா. கிணற்றுக்குள் ஒரு நிலா. குடத்துக்குள் ஒரு நிலா. குடத்திலிருக்கும் தண்ணீரைக் கைநிறைய அள்ளி யெடுத்தால், அதிலும் ஒரு நிலா தெரியக்கூடும். அந்த நிலாவைக் குனிந்து பார்க்கும் கண்களிலும் ஒரு நிலா தெரியக்கூடும். நிலா எங்கெங்கும் நீக்கமற நிறைந்து விடுகிறது.

ஒரு புனைகதையின் அழகோடு உள்ள சிறுமி வளர்க்கும் வெயில் கவிதை லாவண்யா சுந்தர ராஜனுக்குப் பெருமை சேர்க்கும் கவிதை. ஒருவேளை, எதிர்காலத்தில் அவர் இக்கவிதையின் வழியாகவே நினைக்கப்படவும் கூடும். கவிதையில் ஒரு சிறுமி இடம் பெற்றிருக்கிறாள். வீட்டுக்குள்ளேயே விளையாடி மகிழ்கிறவள் அவள். ஒருநாள் ஜன்னலோரமாக விளையாடிக்கொண்டிருக்கும்போது அங்கே வெயில் வந்து படர்கிறது. அதன் வசீகரத்தில் மனம் பறிகொடுத்து விடுகிறாள் சிறுமி. அகல்விளக்கை இரு கைகளுக்கு இடையில் வைத்து காற்றில் சுடர் அணைந்துவிடாமல் எச்சரிக்கையுணர்வோடு எடுத்துச் செல்வதுபோல வெயிலை கைக்குள் மறைத்துப் பொத்தி எடுத்துக் கொள்கிறாள் சிறுமி. ஏதாவது ஒரு இடத்தில் அதை வைத்துப் பாதுகாக்கவேண்டுமே என மறைவிடம் தேடி வீடு முழுதும் சுற்றிச்சுற்றி வருகிறாள். அவள் கைக்குள் மறைந்திருந்தாலும் விரலிடுக்கின் வழியாகக் கசியும் வெளிச்சத்தால் அந்த வீடே ஒளி பொருந்தியதாக மாறுகிறது. பொம்மைக்குள் ஒளித்துவைக்கலாமா, புத்தகப்பைக்குள் ஒளித்துவைக்கலாமா என ஒவ்வொன்றாக நினைத்து நினைத்து, அடுத்த கணமே அது பொருத்த மல்ல எனத் தவிர்த்துவிடுகிறாள். ஆடைகள் வைக்கு மிடம், அலங்காரப்பொருட்கள் இருக்குமிடம், குளியலறை என எந்த இடமுமே அவளுக்குப் பொருத்த மானதாகத் தோன்றவில்லை. கடைசியில் ஒரு வழியாக அடுக்களை அடுப்புக்குள் கொண்டு சென்று வைக்கிறாள். ஜன்னலில் தொடங்கும் கவிதை அடுக்களையில் வந்து முடிகிறது. அடுக்களையை, பாதுகாப்பான ஒன்றாகத் தேர்ந்தெடுத்த சிறுமியின் செய்கைக்குப் பின்னணியாக இருந்த விசை என்ன என்பது புரியாத புதிர். தன்னைப் போலவே வெயிலுக்கும் அதுவே பாதுகாப்பான இடமென அவள் ஏன் தேர்ந்தெடுத்தாள் என்பது அடுத்த புதிர்.

முதுகுப்பாரம் என்னும் இன்னொரு கவிதையிலும் அடுக்களை இடம்பெறுகிறது.

**சொந்த அடுக்களையற்றவள்**
**முதுகில் அடுப்பைக் கட்டிக்கொண்டு**
**பாதையற்று அலைகிறாள்**
**காலம்காலமாய்**

அடுப்பின் பாரத்திலிருந்து பெண்ணை விடுவிப்பது என்பதே இச்சமூகத்தின் மிகப்பெரிய சவால். பாதை என ஒன்று இருந்தாலாவது அல்லது தெரிந்தாலாவது அந்த இடத்துக்குச் சென்று அங்கே அவள் அந்தப் பாரத்தை இறக்கிவைத்துவிடலாம். செல்லும் திசை எது என்னும் தெளிவற்ற நிலையில் அவள் காலம் காலமாக அலைந்து கொண்டே இருக்கிறாள்.

துடைப்போவியம், மலைப்பெண் ஆகிய இரண்டு கவிதைகளும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களைப் போல வெளிப்பட்டுள்ளன. ஒரு கவிதையில், கார் கண்ணாடியில் படிந்த பனிப்புகையை விரலால் தொட்டுக் கிறுக்கிய வரிகளின் தொகுப்பைத் தள்ளி நின்று உற்றுப் பார்க்கும்போது அணில், பூனை, யானை, முயல் என ஒவ்வொரு உருவமாக நினைவூட்டியபடியே வந்து இறுதியில் 'அத்தனை உருவங்களும் என்னைப் போலவோ என் கவிதைகளைப் போலவோ அவ்வப் போது அர்த்தமும் அநர்த்தமும் கொண்டதாயிருக் கின்றன' என்ற எண்ணத்துடன் முற்றுப் பெறுகிறது. இரண்டாவது கவிதையில் தொலைவில் தெரியும் ஒரு மலைத்தொடரை விலகி நின்று பார்க்கப்பார்க்க சிங்கம், முயல், மான்கொம்பு, சுயம்புலிங்கம், சயனப்பெருமாள்

எனப் பற்பல உருவங்களை நினைவூட்டியபடியே வந்து இறுதியில் அந்தி கவியும் தருணத்தில் அனைத்துமே ஒரு பெண்ணாகத் தெரிகிறது. இரவு கவியக்கவிய அந்தக் கற்பனைப்பெண் புரண்டு படுக்கும் ஓசை கூட கேட்கக் கூடிய ஒன்றாக இருக்கிறது. கற்பனையின் ஊடாக நம்மால் செல்லமுடிந்த தொலைவின் சித்திரமாகவும் சாட்சியாகவும் இக்கவிதைகள் உள்ளன.

சற்றே தேவதச்சனின் சாயலைக் கொண்டதாக இருந்தாலும் சலனம் கவிதை இத்தொகுப்புக்கு ஓர் அழகைச் சேர்க்கிறது.

**விட்டுவிட்டு**
**சொட்டிக்கொண்டிருந்த குழாயை**
**இறுக மூடியபின்னர்**
**நின்று போயின**
**நீர்த்துளிகள்**
**என்னவோ செய்கிறது**
**சொட்டாத குழாயின் நிசப்தம்**

இந்தக் கவிதையின் திசைக்கு எதிர்த்திசையை தன் இயங்குதளமாகக் கொண்ட கவிதை உறங்காத வீடு. இங்கு இடைவிடாமல் ஒலித்தபடியே இருக்கும் சப்தங்கள் என்னவோ செய்கின்றன. ஒரு வீட்டுக்குள் மின்விசிறியில் சத்தம் கேட்கிறது. குளிரூட்டியின் இரைச்சல் கேட்கிறது. இன்னும் ஏதேதோ சத்தங்கள் கேட்கின்றன. எல்லாச் சத்தங்களையும் கேட்டபடி வீட்டுக்குள் உலவும் மனிதர்கள் சத்தம் போடுவதே இல்லை. அவர்களிடையே பேச்சே இல்லை. பேச்சே இல்லை என்பதால் அவர்களுடைய இருப்புக்கும் இன்மைக்கும் இடையில் வேறுபாடே இல்லாமல் போகிறது. உறங்காத வீடாக உறைந்துபோகிறது. இறுதியில் வீடு என்றால் என்ன என்கிற கேள்வி மட்டுமே எஞ்சி நிற்கிறது. வீடு என்பது மேசை, நாற்காலி, மின்விசிறி, குளிரூட்டி என அடுக்கி வைக்கப்படும் பொருட்களுக்கான இடமல்ல. அது உயிருள்ள மனிதர்களுக்கான இடம். ஒருவரை ஒருவர் தம் அன்பால் நிறைத்துக்கொள்பவர்களே மனிதர்கள். வீடு அப்படிப்பட்டவர்களால் மட்டுமே பொலிவுறுகிறது. அத்தகு வீடு உறங்கும்போதும் பொலிவுடன் காணப் படும். அப்படி அமையாத வீடு சப்தங்களால் நிறைந்து உறங்காத வீடாகவே எஞ்சியிருக்கும்.

ஒரு புறக்காட்சியில் மானுட வாழ்வின் சாரத்துக்கு இசைவான அம்சத்தைக் கண்டடைவதை ஒரு பேரனுபவம் என்றே சொல்லவேண்டும். கவிதைக்குள் அந்த அனுபவத்தைப் பொருத்தமான சொற்களால் கட்டியெழுப்பும்போது, அது மகத்தான அனுபவமாக உருமாறிவிடும். பிறகு, கச்சிதமாகச் செதுக்கியெடுக்கப் பட்ட ஒரு கோவில் சிற்பம்போல மொழிக்குள் அந்த அனுபவம் நிலைத்திருக்கத் தொடங்கிவிடும். எழுத்துப் பயணத்தில் இந்தத் தேடலின் விசையால் உந்தப்படாத கவிஞர்களே இல்லை. அந்தரங்கம் தொகுதியின் வழியாக தன்னை ஒரு கவிஞராக அடையாளப்படுத்திக் கொண்டவர் செல்வராஜ் ஜெகதீசன். சிவப்பு பச்சை மஞ்சள் வெள்ளை அவருடைய ஐந்தாவது தொகுதியாக வெளிவந்துள்ளது. அவருடைய தேடல் பயணம் இடைவிடாமல் தொடர்ந்தபடி இருப்பதை அறிய மகிழ்ச்சியாக இருக்கிறது.

**விட்டு விடுதலையாகி**
**வீழ்ந்து கிடந்த**
**சிட்டுக் குருவியின்**
**சிறகொன்றில்**
**தத்திக்கொண்டிருக்கிறது**
**ஒரு ஈ**

வீழ்ந்துகிடக்கும் சிறகையும் பறப்பதற்கு முன்பாக தத்திக்கொண்டிருக்கும் ஈயையும் இணைத்திருக்கும் காட்சி மிகச்சிறந்த படிமம். ஒருபுறம் மரணம். ஒருபுறம் உயிரின் சலனம். மரணங்களும் பிறப்புகளும் கண்ணி களாக மாறிமாறி இணைந்து நீளும் மானுட வாழ்க்கைச் சங்கிலியின் தோற்றம் ஒருகணம் அக்காட்சியில் மின்னி மறைகிறது. “ஓரில் நெய்தல் கறங்க ஓரில் ஈர்ந்தன் முழவின் பாணி ததும்ப...” என வியக்கும் பக்குடுக்கை நன்கணியாரின் வரிகள் மனத்தில் எழுகின்றன. சிறகு மரணத்தை மட்டும் குறிக்கும் சொல்லாக இல்லை. அதற்கும் மேலாக, நேற்றைய வரையிலான வாழ் வனுபவத்தின் அடையாளமாக இருக்கிறது. அந்த



அனுபவத்தின் மீது தத்தித்தத்தி நடை பழகுகிறது இன்றைய ஈ. இந்த ஈயின் சிறகுகளும் என்றோ ஒருநாள் உதிர்ந்துவிழக்கூடும். அன்று புதிதாக ஊரத் தொடங்கும் ஏதோ ஓர் எறும்பு அதன்மீது ஊர்ந்து செல்லக்கூடும். எண்ணங்கள் இப்படி விரிந்துவிரிந்து படிமம் மனத்துக்கு மிகவும் நெருக்கமாக மாறிவிடுகிறது. மாபெரும் படிமங்களே மாபெரும் கவிஞர்கள் ஒரு மொழிக்குத் தேடிவைத்துவிட்டுச் செல்லும் சொத்து.

செல்வராஜ் ஜெகதீசன் இந்தக் கவிதையை இன்னும் சில வரிகளோடு நீட்டிச் சொல்ல முனையும்போது, கவிதையின் வலிமை குன்றிவிடுகிறது.

**இப்படி ஒரு தொடக்கம்**
**எந்த ஒரு**
**நாளுக்கும்**
**கவிதைக்கும்**
**இல்லாமல் போகக்**
**கடவதாக**

என்னும் பிற்பகுதி வரிகள் எவ்விதத்திலும் மேற்சொன்ன முற்பகுதி வரிகளோடு பொருந்திப் போகவில்லை. அது மட்டுமல்ல, சிறுகச்சிறுகக் கட்டி யெழுப்பிய படிமத்தின் அழகைக் குலைப்பதாகவும் அமைந்துபோய்விடுகிறது.

கவிதையம்சம் பொருந்திய ஒரு காட்சியின் சித்தரிப்பைத் தொடர்ந்து கவிதைக்கு சிறிதும் பொருந்தாத சில வரிகளை ஏதோ ஒரு வேகத்தில் கட்டுப்பாடின்றி எழுதிவிடுகிறார் செல்வராஜ் ஜெகதீசன். அதிசயம் என்னும் கவிதை இன்னொரு எடுத்துக்காட்டு.

**நடந்துகொண்டிருந்தோம்**
**'என்ன அதிசயம் பார்'**
**என்றான் மகன்**
**அடுக்கக மாடியொன்றிலிருந்து**
**மூக்கு நுனியில்**
**விழுந்த நீர்த்துளியைக் காட்டி**

எளியதொரு அழகான சித்தரிப்பு. கபடற்ற குழந்தைமையின் பார்வையை முன்வைக்கும் சித்தரிப்பு. தரையில் மட்டுமே தண்ணீரைப் பார்த்துப் பழகிய குழந்தையின் மனம், வானத்திலிருந்து விழும் தண்ணீர்த் துளியை முதன்முதலாகப் பார்த்து அதிசயமென குதித்தாடி முகம் மலர்கிறது. அதிசயமெனக் கண்டடைந்து தேடித்தேடி சேகரித்துக்கொண்ட அறிதல்களே மெல்லமெல்ல அனுபவங்களாக மாற்றமடைகின்றன. சித்தரிப்பை வாசித்த கணத்திலேயே, ஒரு நடையில் ஒரு குழந்தை எதைஎதையெல்லாம் பார்த்து அதிசயப் படக்கூடும் என்று நம் மனம் அசைபோடத் தொடங்கி விடுகிறது. உண்மையில் நம் பால்யத்திலிருந்தே அந்தப் பட்டியலை நம் மனம் உருவாக்கிக்கொள்கிறது. இன்றைய அதிசயங்களிலிருந்து நேற்றைய அதிசயங்களை நோக்கி மனம் ஓர் உள்முகப்பயணத்தில் ஈடுபடுகிறது. அகத்தையும் புறத்தையும் இணைக்கிறது அந்தத் தருணம். ஆனால் செல்வராஜ் ஜெகதீசன் கவிதையை அத்துடன் நிறுத்தாமல் மேலும் தொடர்ந்து எழுதிச் செல்கிறார்.

**நமக்குத்தான்**
**அதிசயம் என்றால்**
**என்னென்னமோ வேண்டியிருக்கிறது**

என்ற வரிகளைப் படித்ததுமே பறக்கத் தொடங்கிய ஒரு பறவையை இழுத்துப் பிடித்து கழுத்தைச் சுற்றிக் கட்டிப் போட்டதுபோல இருக்கிறது. கவிதை ஒருபோதும் புலம்பல் அல்ல. அது கண்டடையும் களம். இப்படிப்பட்ட பிசகுகளைக் கடந்துதான் ஜெகதீசனின் தொகுப்பில் நல்ல கவிதைகளைத் தேடிக் கண்டடைய வேண்டியிருக்கிறது.

இன்னுமொரு முறை என்றொரு கவிதையில் செல்வராஜ் ஜெகதீசன் சித்தரிக்கும் காட்சி சுவாரசிய மானது. இத்தொகுப்பில் நல்ல கவிதைகளில் ஒன்றாக இதைச் சொல்லலாம். புதுமஞ்சள் தாலியோடு கணவனின் காதோரம் ஏதோ கிசுகிசுத்தபடி போய்க் கொண்டிருக்கும் ஒரு பெண்ணைப் பார்க்கிறான் கவிதையின் விவரணையாளன். அவன் ஏற்கனவே அந்தப் பெண்ணை தன் நண்பனின் காதலியாக அறிந்தவன். அவளுடைய பெயரின் முதலெழுத்தையும் தன் பெயரின் முதலெழுத்தையும் தீக்கம்பி கொண்டு தன் இடதுகை மணிக்கட்டில் எழுதிக் காதலித்தவன் அவன். எங்கோ திசைமாறி ஏதோ ஒரு பேருந்தில் நடத்துநராக பிழைப்பை இன்றும் ஓட்டிக்கொண் டிருக்கிறான் அவன். இருவருக்கும் இடையிலான காதல் வீட்டாருக்குத் தெரிந்து உதைபட்ட நாளில் இன்னு மொரு முறை அவ்வெழுத்துகளின் மேல் தீக்கம்பியால் அழுத்தி எழுதிக்கொண்டவன். நண்பனின் செய்கையைத் தடுக்க முடியாமல் மௌன சாட்சியாகப் பார்த்துக் கொண்டு நிற்கிறான் கவிதையின் விவரணையாளன். அப்பெண்ணைப் பார்த்த கணத்தில் விவரணை யாளனின் ஆழ்மனத்திலிருந்து எல்லா நினைவுகளும் பொங்கி எழுகின்றன. இன்னுமொரு முறை என்னும் வரியில் உள்ள அழுத்தம் மிகவும் முக்கியமானது. இந்தக் காதல் நிலைக்காது அல்லது தொடராது எனத் தெரிந்த பின்னரும் இன்னுமொரு முறை தீக்கம்பியால் எழுதிக்கொள்வதன் மூலம் அவன் எதைத் தெரிவிக்க விரும்புகிறான். தன் காதலியை தன்னிடமிருந்து பிரித்துச் சென்றாலும் தன் நெஞ்சிலுள்ள காதலைப் பிரித்தெடுக்க முடியாது என்கிறானா? ஒரு வடுபோல தன் காதலை தன் மனம் நிரந்தரமாக சுமந்தலையும் என்கிறானா? காதலின் அழிவின்மையைச் சுட்டும் அடையாளமா அது? இந்தச் சித்தரிப்பில் தீக்கம்பியால் எழுதிக் கொண்டது ஓர் ஆணாக இருக்கிறான். இன்னொரு சித்தரிப்பில் அது ஒரு பெண்ணாகவும் இருக்கலாம்.

பிரித்தெடுத்துச் சென்ற சக்திகளிடம் அந்த வடு ஒரு செய்தியை அமைதியாகச் சொன்னபடி இருக்கிறது என்பதைக் கவனிக்கவேண்டும். இந்த உலகம் ஏற்கனவே அறிந்த செய்திதான் அது. ஆயினும் அதே செய்தியை இன்னுமொரு முறை இந்த உலகுக்கு அழுத்தமாக சொல்கிறது அந்த வடு.

இன்னொரு நல்ல கவிதை ஒரு கொலை அல்லது மரணம். அதுவும் ஒரு சித்தரிப்பையே முன்வைக்கிறது. சட்டென்று கண்டடையப்பட்ட ஒரு காட்சியாக அது விரிகிறது.

ஒரு அதிகாலையில்
அரைமணிநேரம் பயணித்து
சர்வீஸுக்குக் கொடுத்த வண்டியின்
சஸ்பென்சன் பகுதியில்
செத்துப் போயிருந்தது ஒரு பூனை
சிதறிய ரத்தக்கறைகளோடு
ஒரு சிறிய தொகையில் பின்
சுத்தம் செய்யப்பட்டது
எப்போது எப்படி
என்றெதுவும் அறியாமல்
நிகழ்ந்த
ஒரு கொலை அல்லது
ஒரு மரணம்

ஒரு மரணத்துக்குப் பின்னால் இருக்கும் காரணங்கள் ஒருபோதும் வரையறுக்கப்பட முடியாதவை. அது விலங்குகளின் மரணமாக இருந்தாலும் சரி, மனித மரணமாக இருந்தாலும் சரி. தூங்குகையில் வாங்குகிற மூச்சு சுழிமாறிப் போகக்கூடிய சாத்தியப்பாடுகள் மிகுதி. மரணம் தீராத ஒரு புதிர். எளியதொரு காட்சியிலிருந்து கவிதை அந்தப் புதிரை நோக்கி சட்டெனத் தாவி விடுகிறது.

அம்மாவைப்பற்றிச் சொல்லும் 'நிற்கும் பிம்பம்' என்னும் கவிதையும் இப்படி ஒரு புதிர்த்தன்மையைக் கொண்டிருப்பதைப் பார்க்கமுடிகிறது. வாழ்நாள் முழுதும் உட்கார்ந்த நிலையிலும் படுத்த நிலையிலும் மட்டுமே பார்த்த தன் அம்மாவை, அவள் மரணத்துக்குப் பிறகு வந்த கனவுகளில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறாள். அதைப் பார்த்து பதற்றம் கொள்கிறான் ஒருவன். நின்ற கோலத்தில் அவள் என்ன சொல்ல வருகிறாள் என்னும் புதிருக்கு விடை தெரியாமல் தவிக்கிறான். இறுதியில் விடை வேண்டி அவளையே தஞ்சமடைகிறான்.

நவீன வாழ்வில் மறைந்திருக்கும் குரூரத்தைச் சித்தரிக்கிறது 'சாசனமாய் ஒரு கவிதை' என்னும் கவிதை. தன் மகனுக்குப் பிடிக்கக்கூடும் என ஒருநாள் எங்கிருந்தோ ஒரு நாய்க்குட்டியைத் தேடிக் கொண்டுவருகிறான் ஒருவன். அவனுக்கும் அந்தக் குட்டியை மிகவும் பிடித்து விடுகிறது. அந்தப் பையனோடு ஒட்டி உறவாடியபடி வளர்கிறது நாய்க்குட்டி. அவனுடன் சேர்ந்து அவன் தம்பியும் நாயுடன் விளையாடி மகிழ்கிறான். வீடு மாறும்போதும் அந்த நாயை தம்மோடு அழைத்துச் சென்று வளர்த்து வருகிறார்கள். ஏறத்தாழ பத்தாண்டு காலம் அவர்களோடு வாழ்கிறது அந்த நாய். நாய் முதுமையடைந்துவிடுகிறது. பிள்ளைகளும் வளர்ந்து விடுகிறார்கள். விளையாடுவதற்கு நாய் தேவைப்படாத உலகத்துக்குள் அவர்கள் தம்மைப் பொருத்திக்கொள்கிறார்கள். முதுமை பெற்று, வீட்டின் மூலையில் இடத்தை அடைத்தபடி சுருண்டு படுத்துக் கிடக்கிறது நாய். அதன் பயனின்மையை உணர்ந்த குடும்பத்தினர் அடுக்ககத்தின் ஆறாவது மாடிக் குடியிருப்பிலிருந்து குப்பைகளை வீசும் குழாய் வழியே அதைத் தள்ளி விடுகிறார்கள். ஒளியிழந்த கண்களில் ஏக்கமும் குழப்பமும் வெளிப்பட முதுமையடைந்த அந்த நாய் மறைந்துபோகிறது. பிரிந்துபோன நாயின் இருப்புக்குச் சாட்சியாக மனிதன் கவிதை எழுதிவைக்கிறான். குரூரத்தை ஒரு கவிதை வழியாகக் கடந்து செல்ல நினைக்கும் மானுட அற்பத்தனத்தை சித்திரமாக முன்வைக்கிறது கவிதை.

'சிவப்பு பச்சை மஞ்சள் வெள்ளை' என்னும் தலைப்புக் கவிதையும் ஒரு சித்தரிப்பின் வழியாக ஒரு புதிரைநோக்கித் தாவிச் செல்லும் கவிதை. நாற்புறச் சாலைச் சந்திப்பில் நின்றிருக்கும் சமிக்ஞைக் கம்பங்களில் மாறிமாறி ஒளிரும் சிவப்பு, பச்சை, மஞ்சள், வெள்ளை விளக்குகள் இடைவிடாது ஒளிர்ந்து ஓடிக்கொண்டே இருக்கும் வாகனங்களைக் கட்டுப்படுத்தி அனுப்பியபடி இருக்கின்றன. ஓடும் வாகனங்கள் ஒருபுறம். சலனமே இல்லாமல் நின்றிருக்கும் வண்ணவிளக்குகள் இன்னொரு புறம். வண்ண விளக்குகளை நவீன வாழ்க்கையில் கிடைத்த ஒரு வரமென்றே சொல்லவேண்டும். இருளடர்ந்த பாதைகள் வழியாக அச்சத்தோடு பயணம் செய்த பழைய காலம்போல இன்றைய பயணம் இல்லை. இன்றைய நவீனப் பயணம் வசதியாக இருக்கிறது. தடுமாற்றமின்றி தெளிவாக இருக்கிறது. அதே சமயத்தில் பழகிய தடமென்பதால் சலிப்பாகவும் இருக்கிறது என்பது உண்மை. வண்ண விளக்குகள் பல கோணங்களில் எண்ணங்களை இழுத்துச் செல்கின்றன. எண்ணங்களையும் கற்பனைகளையும் விரிவடையச் செய்யும் சக்தி கொண்டதே நல்ல கவிதை.

கடற்கரையில் அலைகள் ஒதுக்கும் வண்ண மயமான கிளிஞ்சல்களுக்காக கரையோரமாக நடந்து கொண்டே இருக்கும் சிறுமியைப்போல, தினசரி வாழ்க்கையில் கவித்துவக் கணங்களைத் தேடித்தேடி காலமெல்லாம் அலைகிறவனாக இருக்கிறான் கவிஞன். பல தருணங்களில் ஏமாற்றமே எஞ்சினாலும் ஒரு சில தருணங்களில் அவன் கண்கள் வசீகரமான கிளிஞ்சல்களைக் கண்டடைகின்றன. அவன் அலைதலுக்கு அவையே பொருள் தருகின்றன. அத்தகு அபூர்வமான சில தருணங்களை செல்வராஜ் ஜெகதீசனுடைய இத்தொகுதியில் பார்க்கமுடிகிறது.

●



# காரைக்குடியில் ஜீவா

சேதுபதி

'ஜீவா எனும் மனிதர் இரத்தமும் சதையுமாய் நடமாடிய இடம் தமிழகம் என்றால், அவர்க்கான கலை, இலக்கிய, அரசியல் களமாகவும், விருப்பிற்குரிய தலைமைக்கேந்திரமாகவும் திகழ்ந்தது காரைக்குடி. பிறந்தது நாஞ்சில் நாட்டில் என்றாலும் சிறந்தது செட்டிநாட்டில் எனும்படிக்குப் பல்வேறு அனுபவங்களைப் பெற்றதும் அரிய பணிகள் பல ஆற்றியதும் இந்த சிவகங்கைச் சீமையில் தான்.

நாஞ்சில் நாட்டுப் பூதப்பாண்டியில் தொடங்கி, சென்னை மாநகரத்து அரசுப் பொதுமருத்துவமனையில் முடிவுற்றது ஜீவாவின் வாழ்க்கைப் பயணம். இடைப்பட்ட காலத்தில் அவர் பெரும்பகுதி தங்கியிருந்து தமிழ் வளர்த்த பெருமைக்குரியது சிவகங்கைச்சீமை. அதிலும் செட்டிநாட்டின் முக்கிய நகரமான காரைக்குடியிலும் காரைக்குடி சார்ந்த ஊர்களிலும் அவர் செய்த தொண்டுகள், பேசிய பேச்சுகள், மக்களோடு கலந்து பழகிய நிகழ்வுகள் வரலாற்றுச் சிறப்புடையவை.

**காரைக்குடியில் ஜீவா**

தேசபக்தியும், தெய்வபக்தியும் கலந்தெழுந்த தமிழகச் சூழலில் அரசியல் விழிப்புணர்வுக்கும் அடித்தளமிட்ட நகர்களுள் ஒன்று காரைக்குடி. இந்நகர், கலை, இலக்கிய, அரசியல், ஆன்மிகத் தலைநகராகத் திகழுதற்குப் பல காரணங்கள் உண்டு.

சமயநிலையில், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், கோயிலூர் ஆதீனம் மற்றும்

பாதரக்குடி உள்ளிட்ட நகரத்தார் மடங்கள் செட்டி நாட்டுப் பகுதியைச் சிறப்புக்குள்ளாக்கின. பின்னர், இராம கிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் சிறப்புகளை நினைவுபடுத்தி, விவேகானந்த புத்தகசாலையும், ஹிந்துமதாபிமான சங்கமும் (1917) இராமகிருஷ்ண கலாசாலையும்(1918) தோற்றம் பெற்றன.

தமிழகத்தின் தலைசிறந்த பேரறிஞர்கள் எல்லாரும் சிறப்புடன் செட்டிநாட்டிற்கு வரவேற்கப்பெற்றனர். செல்வவளமும் கொடை மனமும் கொண்ட தனவந்தர்கள் தமிழையும், தமிழறிஞர்களையும் பேணிக் காப்பதைப் பெரும்பேறு எனக் கருதினர். அதன் அடிப்படையில், கடையத்தில் இருந்து மகாகவி பாரதியார் வரவழைக்கப் பெற்றார். தொடர்ந்து வ.உ.சி., சுப்பிரமணியசிவா, வ.வே.சு.ஐயர், ஞானியார் சுவாமிகள், விபுலானந்த சுவாமிகள், வீர.சுப்பையா சுவாமிகள், ந.மு.வேங்கடசாமி நாட்டார், திரு.வி.க. உள்ளிட்ட பல்வேறு அறிஞர்கள் வருகை தந்து காரைக்குடியை, வரலாற்றுச் சிறப்புமிக்க கலைநகராக்கினர்.

இவர்களுள், காரைக்குடியின் தேசிய எழுச்சிக்கு வித்திட்டவர் சுப்பிரமணிய சிவா என்பது கம்பனடிப் பொடி சா.கணேசனின் கருத்து. பின்னர், மகாத்மாகாந்தி, சர்தார் வல்லபபாய் படேல், தந்தை பெரியார் உள்ளிட்ட தேசியத் தலைவர்கள் பலரும் வருகை புரிந்தனர். இந்தப் பெருமைக்கெல்லாம் காரணர் களாகக் களம் இறங்கியவர்கள் பலராவர். அவர்களுள் சொ.முருகப்பா, கானாடுகாத்தான் வயி.சு. சண்முகஞ் செட்டியார், ராய.சொ., காந்தி மெய்யப்பர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களது முயற்சியால், 'தனவைசிய ஊழியர் சங்கம்' (1919) தோற்றுவிக்கப் பெற்றது. அதற்கென, 'தனவைசிய ஊழியன்' (1820) வார இதழும் தோற்றம் கொண்டது. இதன் ஆசிரியராக, சொ.முருகப்பா பணியாற்றினார். பின்னர். 'குமரன்' (1923) மாத இதழும் அவரால் தொடங்கப் பெற்றது. பி.ஸ்ரீ. ஆசிரியராக இருந்து அதனைச் சிறப்புறக் கொணர்ந்தார். காங்கிரஸ் கூட்டம், ஜீவகாருண்யப் பிரச்சாரம், சுயமரியாதை இயக்கக்கூட்டம், தமிழிசை இயக்கம் எனப் பல்வேறு களங்களில், பணிகளை எடுத்துக் கொண்டு வளர்ந்த செட்டிநாட்டுப் பகுதியில் கம்பனுக் கென்றொரு கழகமும் தோற்றம் பெற்றது, 1939-இல்.

இந்தக் காரைக்குடிதான் ஜீவாவையும் தன்வயப் படுத்தி மகிழ்ந்தது.

வ.வே.சு.ஐயரால் உருவாக்கப்பட்ட சேரன்மாதேவி குருகுலம் மூடப்பட்ட பிறகு, காரைக்குடியை அடுத்த சிராவயலில் வந்து குடிபுகுகிறார் ஜீவா. காந்திபெயரில் ஆசிரமம் ஒன்று உருவாகிறது. அங்கேதான், காந்தி, வ.உ.சி. பெரியார், ராய.சொ., சா.கணேசன் உள்ளிட்ட பலரும் வந்து ஜீவாவுடன் கருத்துரையாடி மகிழ் கிறார்கள். தனித்தமிழ் இயக்கத்திலும் பெருமுனைப்புக் கொண்டதும் இந்தக் காலத்தில்தான்.

காந்தியைத் தலைவராகக் கருதிக் களம்புகுந்த சொரிமுத்து, சிராவயலில் காந்தியாகவே வாழ்ந்தார். நூல் நூற்றல், நூல் பல கற்றல், கற்பித்தல் என்கிற நிலையில் வளர்கிறது அவர்தம் வாழ்வு. முறைப்படி தமிழ் கற்று, முழுமையாகத் தன்னைத் தமிழுக்கு அர்ப்பணித்துக் கொண்டு உயிர் இன்பன் ஆகிறார். மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கத்தால் ஈர்ப்புண்டு, தன் பெயரொடு தன் பள்ளியில் வதிந்த, தன்னோடு பணி செய்த பலரது பெயர்களையும் தமிழ்ப்பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

தொடக்கத்தில், சமயநெறிகளை ஓரளவு ஏற்ற ஜீவா, சமயமானது சாதியக்கட்டுமானங்களை இறுக்கிப் பிடித்து வளர்க்கிற கோட்டையாகத் திகழ்வது கண்டு நாத்திகம் சார்ந்தார். சுயமரியாதை இயக்கத்ினரோடு பயணம் செய்தார். சீர்திருத்தக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்வதும் செயல்வடிவில் நடைமுறைப்படுத்துவதும் அவரது இன்றியமையாக் குறிக்கோள்களாயின. அதனால் பல்வேறு தாக்குதல்களுக்கும் தண்டனை களுக்கும் உள்ளானார். எனினும் எவரையும் அவர் எதிர்த்துத் தாக்கியதாகவோ, அவர்களை இன்சொல் கூறி இழிவுபடுத்தியதாகவோ எந்தத் தகவலும் இல்லை என்பது அவர்தம் மேன்மையைச் சொல்லாமல் சொல்லி நிற்கின்றன என்றே கொள்ளலாம்.

அதே சமயம் ஏற்பில்லாத எந்தக் கருத்தாயினும் அதனைத் துணிந்து எதிர்க்கிறவராக ஜீவா திகழ்ந்திருக் கிறார் என்பதற்குக் காந்தி- ஜீவா, வ.உ.சி.-ஜீவா போன்ற சந்திப்புகள் உறுதிப்படுத்துகின்றன. ஏற்றதொரு கருத் தென்றால் எதுகுறித்தும் எவர் பற்றியும் கவலைப்படாது துணிந்து எடுத்துரைப்பதில் சிறந்து விளங்கியிருக்கிறார் என்பதற்கு, திரு.வி.க. தலைமையில் அவர் பேசிய உரை சிறந்த சான்றாகிறது.

இதுபோல், அவர் சிவகங்கைச் சீமையில் பேசிய பொழிவுகள் எத்தனை எத்தனையோ?

இவ்வாறாக, பள்ளி ஆசிரியராகப் பணிதொடங்கி, காந்தியப்பண்புகளைக் கற்றுக்கொடுத்த ஜீவா, காலச்சூழலுக்கேற்ப சீர்திருத்தப் பணிகளைத் தந்தை பெரியாருடன் இணைந்து ஆற்றிவரும் வேளையில். சிராவயல் ஆசிரமம் மூடப்பட்டு, நாச்சியார்புரம் உண்மைவிளக்க நிலையம் திறக்கப்பட்டது. ஊர்கள் தோறும் கைவிளக்கேந்தி, அறிவொளி புகட்டி வந்தார் ஜீவா. சிவகங்கை மாவட்டத்தில் ஒடுக்கப்பட்டோர் வாழ்வில் முதன்முதலாகக் கல்வியொளி ஏற்றி வைத்த தலைவர் ஆக ஜீவா ஒளிர்ந்தார்.

பின்னர் கோட்டையூருக்குப் பள்ளி இடம்பெயர, அரசியல் உலகில் முதல் தடம் பதித்த ஜீவா. தடையை மீறிப் போராடியதற்காகச் சிறைபுகுந்தார். காந்திய வாதியாகவும் சுயமரியாதைக்காரராகவும் சிறைபுகுந்த ஜீவா, கம்யூனிஸ்ட்டாக வெளியே வந்தார்.

தமிழகமெங்கும் அவர் பணி பரந்து விரிய. எழுத்து, பேச்சு, இயக்கம், வாழ்வு அனைத்திலும் மக்கள்



24.03.1956 அன்று காரைக்குடி கம்பன் திருநாளில் திரு. க.சந்தானம் அவர்கள் தலைமையில் 'செம்மையின் ஆணி' என்ற தலைப்பில் ஜீவா பேசுகிறார்.

நலம்பேணும் பொதுவுடைமைவாதியாகவே ஜீவா திகழ்ந்தார்; தேசியத் தலைவராகவும் மிளிர்ந்தார்.

### காரைக்குடியில் ஜீவாவின் கம்ப முழக்கம்

எங்கு போனாலும் ஜீவா அடிக்கடி வந்து தங்கும் ஊர்களில் காரைக்குடி முக்கிய இடத்தைப் பெற்று விடுகிறது. கலை, இலக்கிய, அரசியல் கூட்டங்களில் பங்கேற்க காரைக்குடிக்குப் பலமுறை வந்திருக்கிறார் ஜீவா. அப்போதுதான் காரைக்குடி கம்பன் திருநாள் நிகழ்வில் பங்கேற்று வரலாற்றுச் சிறப்புமிக்க பேருரை நிகழ்த்தியிருக்கிறார்.

1938ல் ரசிகமணி டி.கே.சி.யைச் சந்தித்ததும், 1939ல் தேரழுந்தூரில் நடைபெற்ற கம்பர்விழாவில் பங்கேற்றதும் காரணங்களாக, கம்பன் சமாதி அமைந்த நாட்டரசன்கோட்டைக்கு அருகில் உள்ள நகரமான காரைக்குடியில் சா.க. அவர்களால், கம்பன் கழகம் தோற்றுவிக்கப்பெற்றது.

இந்த அமைப்பில்தான் தமிழகத்தின் பல்வேறு அறிஞர்களும் வந்து பங்கேற்றுப் பேசியிருக்கிறார்கள்; இன்னும் பேசி வருகிறார்கள்; தோழர் ஜீவாவும் நின்று கம்ப முழக்கம் செய்தார். காற்றினும் கடிய வேகத்தோடு மக்களிடைப் பரவி, பெருங்கூட்டத்தை அரங்கிற்குக் கொண்டு வந்து சேர்த்தது ஜீவா பேசும் செய்தி.

தோழர் ஜீவா, கம்பன் அரங்கில் நின்று முழங்குதற்குக் காரணமான சூழல் மிகவும் சுவாரசிய மானது. அதன் பின்புலத்தைப் பின்வருமாறு விவரித்து உரைக்கிறார் தோழர் தா.பாண்டியன்.

### காரைக்குடிக் கம்பன் கழகத்தின் தனித்தன்மை

"காரைக்குடியில் நடந்துவந்த கம்பன் விழா, இங்கிலாந்தில். உலகப்புகழ் பெற்ற நாடக ஆசியரினும், கவிஞனுமான சேக்ஸ்பியருக்கு ஆண்டுதோறும் அவர் பிறந்த ஊரான ஸ்ட்ரா போர்டு - அன் - அன் என்ற ஊரில் விழா நடந்து வருவதைப் போன்று, அதே தரத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு காரைக்குடியில் நடப்பதாகக் கருதப்பட்டது. கம்பன் விழாவில் ஒருவர் கலந்து கொண்டால், பேசினால், அவருக்குத் தமிழறிந்த மனிதன் என்ற முத்திரை வந்து சேர்ந்துவிடும். மதுரை தமிழ்ச்சங்கத்தில் கவிதைகள் அரங்கேறியது மாதிரி, கம்பன் விழா மேடை கருதப்பட்டது. இந்த இலக்கியப் புலமை மிக்க ஆர்வலர்கள் மத்தியில் நம்மவர்களும் இருக்க வேண்டும் என்ற ஆவல், வேட்கை எங்களுக்கு எழுந்ததும் ஒரு காரணம்."

### ஜீவ முழக்கம் சாத்தியமான வரலாறு

காரைக்குடியைச் சேர்ந்த சித.பழனியப்பன், எஸ்.நாராயணன், கூத்தகுடி சண்முகம் ஆகியோர், கம்பன் அடிப்பொடி சா.கணேசனிடம், ஜீவாவைப் பேச அழைக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றனர். பொதுவாக, இராமன்மீது பக்தி கொண்டவர்கள், ராஜாஜி, இரசிகமணி டி.கே.சி., அ.சீனிவாசராகவன், போன்ற மரபார்ந்த பேச்சாளர்கள் பேசிய அரங்கில், ஒரு கம்யூனிஸ்ட் தலைவர் பேசுவது எவ்வாறிருக்கும் என்று தயக்கம்.

ஆயினும் அந்த நிகழ்வில் தொ.மு.சி.ரகுநாதன் சிற்றம்பலக் கவிராயராகப் பல்லாண்டுகள் கவி பாடியிருக்கிறார். அவரும் ஜீவா வந்து பங்கேற்பது குறித்து உற்சாகமான அக்கறை செலுத்தவில்லை. காரணம் கட்சிக் கட்டுப்பாடு.

"முதலில் கட்சியில் அனுமதிப்பார்களா? என்பதைக் கேட்டுப் பாருங்கள். ஏற்கெனவே, பாரதி பற்றிப் பேசி வருவதற்கே, 'பட்டம்மாள் பாட, ஜீவா ஆடுகிறார்' எனச் சில புரட்சிவீரர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கம்பராமாயணம் என்றவுடன், ராமன் எந்த வர்க்கம், ராவணன் ஏகாதிபத்தியப் பிரதிநிதியா? எனப் பிளக்கும் வாதங்களில் இறங்கி முடிவு எடுப்பதற்குள் இங்கே யுத்தகாண்டமே முடிந்துவிடும்" என்றார் தொ.மு.சி.

அதுமட்டுமன்றி, அக்கால கலை, இலக்கிய அரசியல் போக்குகள் கம்பனை வேறுவிதமாக அணுக வைத்திருந்தன. அறிஞர் அண்ணா எழுதிய 'கம்பரசம்' பரபரப்பாகப் பேசப்பட்டது. 'ஆரியதிராவிடப் போராட்டமே கம்பராமாயணம்' என்றும், 'அது ஆபாசக்களஞ்சியம்' என்றும் கருதப்படுகிற நிலை வளர்ந்தது. கல்வி நிறுவனங்களில் கம்பனைக் கற்பிப்பவர்கள்கூட, கிண்டல் செய்தபடியே நடத்துகிற நிலை. கூடவே, ஆத்திக நாத்திகவாதத்திற்கு மத்தியில் கம்பன் சிக்கிக் கொண்டிருந்தான்.

"ஒரு பக்கம் ராமபக்தி பஜனையாக கம்பனை வியாக்கியானம் செய்தவர்கள் நின்றனர். மறுபக்கம் வேறு ஒரு இயக்கத்தார் தங்களது இன்றைய அரசியல் நிலைகட்கு ஏற்ப, பல நூறு ஆண்டுகட்கு முன் தமிழைச் செழிக்கச்செய்த, காப்பியம் தந்த கவிஞனைக் கழுவிலேற்றப் பார்த்தார்கள். கம்பனிலும் அரசியல் மனிதநேயம் இருக்கிறது. நெறி முறைகள் காட்டப் படுகிறது. அன்றைய சமுதாயச் சிந்தனைகளையும் தெரிந்துகொள்ள முடிகிறது. இதைச் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லக்கூடிய ஒருவரைச் சொல்ல வைக்க வேண்டும் என்ற எங்களது வேட்கை நியாயமானது என்பதை இப்போது பலரும் ஒப்புக்கொள்ளக் கூடும். ஆகக் கடைசியாக, கம்பன் விழாவில் பேச ஜீவாவுக்கு அழைப்புப் போயிற்று. தேடிப் பார்த்து, ராமனைத் தொடாத ஒரு பொருளாகப் பார்த்து, 'கம்பன் கண்ட தமிழகம்' எனக் கொடுத்திருந்தனர். சோதனை முயற்சிதானே." என்கிறார் தா.பாண்டியன்.

இந்த இடத்தில் கம்பன் கழக நிகழ்ச்சி நடை முறையையும் கவனத்தில் கொள்ளவேண்டியது இன்றியமையாதது.

### காலத்தை வென்ற கம்பீர முழக்கம்

காலமும், கருத்தும், நேரமும், அதனை நடத்தும் நேர்மையும் கம்பனடிப்பொடி. சா.க.வின் தனிமுத்திரை.

"நேர்மை, நேரந்தவறாமை இரண்டும் அவருக்குப் பக்க பலம். இதில் எல்லாம் கண்டிப்பும் கராருமாய் இருப்பார். வள்ளல் அழகப்பச்செட்டியாராக இருந் தாலும் சரி, கவியரசு கண்ணதாசனாகவே இருந்தாலும் சரி, உரிய நேரத்தில் கம்பன் விழா மேடைக்கு வர வில்லை என்றால், காத்திருக்க மாட்டார். தாட்சண்யம் காட்டாமல், "கம்பன் வாழ்க!"என்று முழங்கி, உரிய நேரத்தில் ஆரம்பித்துவிடுவார். இதற்குப் பயந்தே, எல்லோரும் உரிய நேரத்தில் மேடை ஏறிவிடுவார்கள்" என்ற இராஜேஸ்வரி நடராஜனின் அனுபவ வாக்கு இதற்கு அணி சேர்க்கும்.

'தாமதமே எனது மதம்' என்று தைரியமாகச் சொல்லும் கண்ணதாசன் கூட, கம்பன் மேடைக்குக் கட்டுப்பட்டு உரிய காலத்தில் வந்துவிடுவார். அந்த அரங்கில் இருந்து அவரே பாடிய ஒரு பாடல் அதற்குச் சான்றாகும்.

**கடிகாரம் பார்த்தேதான் காரியங்கள் செய்வதெனப்**
**பிடிவாதம் பிடிக்கின்ற பேரவையின் தலைவர்களே**
**கடிகாரம் என்பகைவன் கணேசர் பயத்தினிலே**
**காலத்தை நானறிந்து கடுகியிங்கே ஓடிவந்தேன்**

என்பது அவர் பட்ட பாட்டின் அடையாளப்பாட்டு.

தொடங்குதற்கு மட்டுமன்று; பேச்சை நிறைவு படுத்துவதற்கும் அத்தகைய நேரக்கட்டுப்பாடு உண்டு. எப்பேர்ப்பட்ட பேச்சாளராயினும் ஒதுக்கப்பெற்ற பொழுதுக்குள் பேசிமுடித்தே தீர வேண்டும். காலம் காட்ட பேச்சுமேடையின் மீது எச்சரிக்கை விளக்கு பொருத்தப்பெற்றிருக்கும். அச்சிவப்புநிற விளக்கு எரியும் போது நிறுத்தியே தீர வேண்டும். இது காரைக்குடிக் கம்பன் கழக வாடிக்கை.

'இந்த மேடையில் தான் ஜீவா நின்று பேசப் போகிறார்; கம்பன் கண்ட தமிழகத்தைத் தன் கம்பீரக் குரலில் காட்டப் போகிறார். ஒரு கம்யூனிஸ்டு கம்பன் விழாவில் பேசுகிறாராம்' என்பது கிளப்பிய பரபரப்பால், அரங்கம் நிரம்பி வழிந்தது. சாலைகளிலும், கைப்பிடிச்சுவர் களைத் தாண்டியும் கூட்டம் திரண்டு இருந்தது.

### நடந்தது கதையன்று, வரலாறு

ஜீவா பேசுவதற்கு முன், தமக்கு அடுத்துப் பேச விருந்த, சுப்பிரமணியபிள்ளையிடம் அவருக்கு ஒதுக்கப் பட்ட நேரத்தில், பத்து நிமிடத்தைத் தாம் எடுத்துக்

கொள்வதாக, ஜீவா சொன்னார். சுப்பிரமணிய பிள்ளையும் ஜீவாவின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார்.

ஜீவா பேசத்தொடங்கினார். கம்பன் கண்ட தமிழகம் காட்சிகளாய் விரியத்தொடங்கியது. காலம் மறந்து அவை செவிகளே கண்களாய்க் கண்டு மகிழ்ந்தது.

முப்பந்தைந்து நிமிடம் முடிந்தது. சா.கணேசன் சுவிட்சை அழுத்த, சிவப்பு விளக்கும் எரிந்தது. இருப்பினும், ஜீவா பேசினார்... நாற்பது நிமிடமும் முடிந்தது. ஜீவாவின் பேச்சு முடிந்தபாடில்லை. சுப்பிரமணிய பிள்ளை கடன்கொடுத்த பத்து நிமிடமும் முடிந்தது. சிவப்புவிளக்கையும் காலத்தையும் கடந்து எழுபது நிமிடம் தானே சிவப்பாய்ச் சிலிர்த்தெழுந்து முழங்கியது அந்தப் பொதுவுடைமைச்சிங்கம். இவ்வளவு நேரம் கம்பன் கழகத்தில் பேசியது ஜீவா ஒருவர்தாம்.

ஜீவா பேசி முடித்ததும், தலைமை வகித்தவர் அ.சரவண முதலியார். (இவர் அ.ச.ஞானசம்பந்தனின் தந்தையார்) அவர் சொன்னார்: "நான் சென்னையி லிருந்து புறப்படும்போது அழைப்பிதழைப் பார்த்து, கம்யூனிஸ்ட் கட்சியில் ஜீவானந்தம் என்று ஒருவர் இருக்கிறார். அவர் இலக்கியம் பற்றி என்ன பேசப் போகிறார்? இவர் வேறு ஜீவானந்தமாக இருக்கும் என்று எண்ணினேன். ஆனால், இங்கு வந்த பின்புதான் கம்யூனிஸ்ட் ஜீவானந்தம் என்பதை அறிந்தேன். அவரைப் பார்த்த பின்பும் இலக்கியத்தைப்பற்றிப் புதிதாக இவர் என்ன பேசிவிடப் போகிறார்? என்ற எனது எண்ணம் மாறிவிடவில்லை. இவர் பேசுவதற்கு முன் எனக்கு இருந்த எண்ணம் வேறு. இவர் பேசிய பிறகு எனக்கு இருந்த எண்ணம் வேறு. இவர் சொற் பொழிவைக் கேட்டபின்பு நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். கம்யூனிஸ்டுகள் ஜீவாவைப் போன்று தமிழைப் பயன்படுத்தினால் தமிழ் நிச்சயம் வளரும்."

ஜீவாவுக்குப் பின், 'மேதையும் பேதையும்' என்ற தலைப்பில் பேச வந்த சுப்பிரமணியபிள்ளை, "ஜீவா பேசுவதற்கு முன், நான் பேசுவதற்குண்டான நேரத்தில், பத்து நிமிடத்தைத் தாம் பயன்படுத்திக் கொள்வதாக என்னிடம் கேட்டார். அதற்கு நானும் அனுமதித்தேன். பத்து நிமிடத்தையும் எடுத்துக்கொள்ள என்னிடம் அனுமதி கேட்ட ஜீவா, என்னுடைய மொத்த நேரத் தையும் எடுத்துக் கொண்டுவிட்டார். இனிப்பேசுவதற்கு எனக்கு நேரமில்லை. இருப்பினும், ஒரு கருத்தை மட்டும் சொல்லிவிட்டு, இங்கிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன். ஜீவானந்தத்தின் இன்றைய பேச்சைக் கேட்டவர்கள் எல்லோரும் மேதைகள். இன்றைய பேச்சைக் கேட்காதவர்கள் எல்லோரும் பேதைகள்" என்று குறிப்பிட்டுவிட்டு, சுப்பிரமணிய பிள்ளை தமது பேச்சை முடித்துக் கொண்டார்.

மரபுக்கு மாறாக, அன்றைக்கு மட்டும் நன்றியுரை வழங்கினார் சா.கணேசன். 'ஆண்டுதோறும் கம்பன் விழாவுக்கு ஜீவா வர வேண்டும்' என்று அழைப்பும் விடுத்தார். 'அழைத்தால் வருவேன்' என ஜீவா சொல்ல, 'மேளதாளத்துடன் வரவேற்போம்' என சா.கணேசன் சொல்ல, கம்பன் கழகத்தில் நிரந்தரப் புலவராக அங்கம் பெற்றுவிட்டார் ஜீவா. இதற்குப் பிறகு, தி.மு.க. ஏடு ஒன்று 'ஜீவா படத்தைக் கேலிச் சித்திரமாகத் தீட்டி, கை, கால், நெற்றி, நெஞ்சு பூராவிலும் திருநீறு பூசி இரு கைகளிலும், சப்பளாக் கட்டை பிடித்து, ராமா, ராமா, கோவிந்தா எனக் கூத்தாடுவது மாதிரிப் போட்டு இருந்தது. கட்சிக்குள்ளும் சிலர் இதை வெட்டி வேலை என்று கருதினர். பேசினர்... ஆனால், பின்னர் என்ன நடந்தது என்பதை நாடறியும். அதனைத்தொடர்ந்து அவர்தம் இறுதிக்காலம் வரைக்கும் கம்பன் கழக நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமல் இருந்ததே இல்லை" என்று எழுதுகிறார் தா.பாண்டியன்.

இவ்வாறு தோழர் ஜீவா அவர்கள் 1954ல் தொடங்கிய கம்பன் கழக நிகழ்வுப் பங்கேற்பு, அவர் அமரராகும் வரை, 1962 வரை தொடர்கிறது. தனியுரை, ஆய்வுரை இவற்றோடு பட்டிமண்டபங்களிலும் பங்கேற்று வாதிடுகிறார் ஜீவா.

### காரைக்குடி கம்பன் திருநாளில் ஜீவா பங்கேற்ற ஆண்டுகள்

*1955 தொடங்கி, 1956 முதல், 1962 வரை, (அதாவது, 1956, 1957, 1958, 1959, 1962 வரை) 1961* ஆண்டு நீங்கலாக, ஐந்து ஆண்டுகள் கம்பன் திருநாளில் பங்கேற்று, ஒன்பது தலைப்புகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறார் ஜீவா.

அத்துடன், அவர் பட்டிமண்டபங்களிலும் பங்கேற்றுச் சொற்போர் நிகழ்த்தியிருக்கிறார். பங்கேற் போர் பெயர்ப்பட்டியல் இல்லாத, 1957 ஆண்டு போக, 1958, 1959, 1960, 1962 ஆகிய ஆண்டுகளில் காரைக் குடியில் நிகழ்வுற்ற நான்கு பட்டிமண்டபங்களில் தோழர் ஜீவா பங்கேற்று வாதிட்டிருக்கிறார். அதன் விவரம் பின்னிணைப்பில் காணலாம்.

காரைக்குடி மீனாட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஜீவா உரையாற்றிய நிழற்படம் முதன்முதலாக எனது 'காரைக்குடியில் ஜீவா' நூல் வழி உலகு காண்கிறது.

### நாட்டரசன் கோட்டையில் ஜீவா

கம்பன் பள்ளிப்படை கோயில் கொண்ட நாட்டரசன் கோட்டையில்தான் கம்பன் திருநாள் விழா நிறைவுபெறும். கம்பன் தன் காவியத்தை அரங்கேற்றிய நாளைக் கணக்கிட்டு, அது பங்குனி அத்தத் திருநாள் என வருவதால், ஆண்டுதோறும் பங்குனி அத்தத் திருநாளன்று, நாட்டரசன்கோட்டை, கம்பன் சமாதிக்கோயிலில், அருட்கவி ஐந்து பாடி, மலர் வணக்கம் செலுத்திய பின்னர், அறிஞர்பெருமக்கள் உரையாற்றுவர். அந்த விழாவிலும் தோழர் ஜீவா உரை நிகழ்த்தி இருக்கிறார்.

*07.04.1955* அன்று கோவைகிழார் திரு. சி.எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் தலைமையில் கம்பனும் பாரதியும் என்ற தலைப்பில் முதல் உரை யாற்றினார் ஜீவா.

அதனைத்தொடர்ந்து, *11.04.1960* அன்று தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் தலைமையில், தம்பியர் உலகம் என்ற பொதுப் பொருண்மையின்கீழ், 'இராவணன் தம்பி' என்ற உரையினையும், *22.03.1962* அன்று ராய.சொ. தலைமையில் 'கானாடு' என்ற பொருண்மையில் 'பேரறிவாளன்' என்ற தலைப்பிலும் ஜீவா உரையாற்றியிருக்கிறார்.

அவற்றுள் சில கம்யூனிஸ்ட் கட்சி வெளியீடாகவும், ஜனசக்திக் குறிப்புகளாகவும், தாமரை இதழ்க் கட்டுரை களாகவும் அச்சேறியுள்ளன. இன்னும் சில குறிப்புகளை நேரில் கேட்டவர்கள் நினைவுகூர்கிறார்கள். நினைவுக் குறிப்புகள் என்பதால் அவற்றுள் சில புனைவுகளும் அதீதப்பாங்கும், காலம்- இடம் பற்றிய பிழைபாடுகளும் நேர்ந்துவிட்டிருக்கின்றன. அந்த அளவிற்கு மக்கள் மத்தியில் ஜீவாவின் உரைவளம் உயிர்ப்பெய்தியிருக்கிறது என்பதை இவையாவும் உணர்த்துகின்றன என்றே கருதலாம்.

**பாரதியப் பதாகை ஏந்தி...**

பாரதி வாழ்ந்த காலத்தில் ஜீவா பிறந்திருந்த போதிலும், அவரைப் பார்க்க முடியாத ஏக்கம் நிறைய கொண்டிருக்கிறார். எனினும் அவரை, அவர்தம் எழுத்துக்களின் வாயிலாக உள்வாங்கிக் கொண்டு, ஜீவா, பாரதியாகவே வாழ்ந்திருக்கிறார்; மீண்டும் ஒருமுறை பாரதியை வாழ்வித்திருக்கிறார்.

பாரதி வந்து பேசிய காரைக்குடி இந்துமதாபிமான சங்கத்தில் பாரதி குறித்துப் பாரதியேபோல் உரைகளும் நிகழ்த்தியிருக்கிறார்.

பாரதி பட்டியலிட்ட புலவர்களின் வரிசையைத் தமக்குரிய பாடத்திட்டமாகக் கொண்டு தேடித்தேடிப் பயின்றார். தன்னொத்தவர்களுக்குப் பயிற்றுவித்தார். இலக்கியத்தைப் பொருத்தவரையில் அவர் இறுதி வரைக்கும் எல்லாருக்கும் கற்றுத்தருகிற பேராசானாகவே திகழ்ந்தார்.

பட்டிதொட்டியெங்கும் பாரதியை, கம்பனை, இளங்கோவடிகளை, தாகூரை, ஷேக்ஸ்பியரை, தாந்தேயை, மாயகோவ்ஸ்கியை, லெனினை, மார்க்ஸை, சொற்களின் வாயிலாகக் கொண்டுபோய் நிறுத்திப் பாமர மக்களையும் படிப்பித்த பல்கலைக் கழகம் அவர்.

பாரதி மறைவுக்குப் பிறகு தோன்றிய காரைக்குடி கம்பன் கழகத்தில் ஜீவா ஆற்றிய முதல் உரை, அவ்வரலாற்றில் முதன்மை உரையானதைப் பலரும் பலகோணங்களில் பதிவு செய்திருப்பதைப் பார்க்க முடிகிறது.

அதைத் தொடர்ந்து எல்லா இடங்களிலும் கம்பனைச் சிறப்புறப் பதிவு செய்திருக்கிறார். கம்பன் குறித்த அவர்தம் பார்வை தனித்துவமிக்கப் பார்வை.

திராவிட இயக்கச் சிந்தனையாளர்களோடு இணைந்து சீர்திருத்தப்பணிகள் ஆற்றிய ஜீவா, பாரதம்இராமன்நூல் ஆரியர் கோட்டை என்று கருதிய ஜீவா, அவ்வண்ணமே பிள்ளைகளுக்குச் சொல்லியும் கொடுத்தவர், அக்கோட்டைக்குள் புகுந்து அதனை மக்கள் கோட்டையாக மாற்றியிருக்கிறார் என்பது வரலாறு.

கட்சிக்கு உள்ளும் புறத்தும் எத்தனை எதிர்ப்பு வந்தபோதிலும் அவற்றை, ஜனநாயகத்தன்மையோடு ஏற்று, அதற்கான பதில்களை அடுத்தடுத்த பணிகளால் தந்து வென்றவர், தமிழாகி நின்றவர் ஜீவா.

எல்லாரையும்போல, வழிபாட்டுநிலையில் பார்க்காமல், வழிகாட்டும் பான்மையிலேயே அவர் எல்லாப் படைப்பாளிகளையும் பார்த்தார். பாரதியை, வள்ளுவரை, கம்பனை, இளங்கோவை, வள்ளலாரை, சங்கரதாஸ் சுவாமிகளை, சங்கப்புலவர்களை, தொல்காப்பியரைப் பார்த்தார். ஏற்றமிகு கருத்துக்களைக் கொண்டாடினார். மாற்றவேண்டிய கருத்துக்களை மனந்திறந்து விமர்சித்தார். பண்டிதர்களின், பேராசிரியர் களின் பார்வைகளிலும் விசாலத்தன்மையை உருவாக்கிக் கொடுத்தது ஜீவாவின் தனித்தன்மைமிக்க தமிழ்.

அதனை, கி.வா.ஜ. மிகச்சிறப்பாக உறுதி செய்கிறார். ராய.சொ. தமக்கேயுரிய பாணியில் சொல்லிக் காட்டுகிறார். குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுகிறார்.

எஸ்.இராமகிருஷ்ணன், தா.பாண்டியன் போன் றோரை இலக்கிய இயக்கங்களாகச் செயல்பட வைத்த ஜீவா, கலை, இலக்கியத்திற்கென்றே தனி அமைப்பைத் தொடங்கக் காரணமானதும் இந்தக் காரைக்குடிதான். அதன்பின்னரே, பெரும்பாலும், அனைத்துக் கட்சிகளும் இலக்கியப் பிரிவை ஏற்படுத்திக் கொண்டன என்று கருதலாம்.

ஆயினும், மக்கள் இலக்கியத்திற்கு வழிவகுத்ததும், மற்ற இலக்கியங்களை மக்கள் மத்தியில் கொண்டு செலுத்தியதும் அவர் இருந்து இயக்கிய, கலை இலக்கியப் பெருமன்றமே என்பதில் இருவேறு கருத்திற்கு இடமில்லை.

இன்றளவும், எழுத்தால், பேச்சால், இயக்கத்தால், அவரை ஒத்திருக்க விரும்புகிறவர்கள் இருக்கிறார்கள், இன்னும் வருகிறார்கள், வளர்கிறார்கள் என்பதற்கு அவர்தம் வாழ்வு ஒரு முதன்மைச் சான்று.

சிவகங்கைச் சீமையில் பள்ளி ஆசிரியராகப் பணிதொடர்ந்த ஜீவா,

காந்தியத் தொண்டராக, சீர்திருத்தப் பணியாளராக, தனித்தமிழ் இயக்கப்பற்றாளராக, தேசிய இயக்கவாதியாக, பொதுவுடைமையாளராக, சிறந்த

| எண். | நாள் | நிகழ்வு | இடம் | தலைப்பு | தலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | 19-03-1954 | உரை | மீ.உ.பெ. பாட சாலை, காரைக்குடி | கம்பன் கண்ட தமிழகம் | அ.மு.சரவணமுதலியார் |
| 2. | 07-04-1955 | உரை | நாட்டரசன் கோட்டை கம்பன் சமாதி | கம்பனும் பாரதியும் | சி.எம்.இராமச்சந்திரன் செட்டியார் |
| 3. | 02-04-1956 | 'கோசல மண்டபம்' | மீ.உ.பெ. பாட சாலை, காரைக்குடி | செம்மையின் ஆணி | - |
| 4. | 14-03-1957 | பேரவை | மேலது | கம்பனில் அரசியல் | - |
| 5. | 02-04-1958 | 'அவல உலகம்' | மேலது | தயரதன் | அ.ச.ஞானசம்பந்தன் |
| 6. | 24-03-1959 | 'இன்பப் பேரவை | மேலது | வாழ்க்கை நலம் | அ.சீனிவாசராகவன் |
| 7. | 11-04-1960 | 'தம்பியர் உலகம்' | நா.கோட்டை கம்பன் சமாதி | இராவணன் தம்பி | தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் |
| 8. | 20-03-1962 | 'கடல் நாடு' | காரைக்குடி | - | ப.ஜீவானந்தன் |
| 9. | 22-03-1962 | 'கானாடு' | நா.கோட்டை கம்பன் சமாதி | பேரறிவாளன் | ராய.சொக்கலிங்கன் |

(அனைத்து நிகழ்ச்சிகளும் பிற்பகல் 4.15 மணிக்கு நடைபெற்றது)

சொற்பொழிவாளராக, பட்டிமண்டபப் பேச்சாளராக, பாடலாசிரியராக, கதாசிரியராக, இதழாளராக,

இவையாவற்றினும் மேன்மைகொண்ட மனிதராகப் பரிணாமம் பெற்ற பண்பாளராக நம்மிடை வாழ்ந்து நம்மையும் வாழ்வித்திருக்கிறார் என்பது காலம் நமக்குத் தந்த கருணைக் கொடை.

அந்த வகையில் அவரை அவ்வண்ணம் ஆக்கிக் கொள்ளத் தன்னுள் இடமளித்துத் தாங்கிய புண்ணி யத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது காரைக்குடி.

அங்கு அவருக்கென்று நினைவில்லமோ, சிலையோ அமைப்பதைவிடவும், அவர் இருந்து பள்ளிகள் நடத்திய சிராவயலில், நாச்சியார்புரத்தில், மருதங்குடி, கம்பனூர் ஆகிய கிராமங்களில் அவர் நினைவைப் போற்றும் வண்ணம் ஏதேனும் செய்வது நல்லது.

காரைக்குடி மக்களோடு இணைந்து கலை இலக்கியப் பெருமன்றம் களமிறங்கினால் காலகாலத்திற்கும் நிலைக்கும் வண்ணம், அந்தக் காவிய நாயகனை மீண்டும் நினைவுபடுத்த ஏதுவாகும் என்பது நம்பிக்கை.

### துணைநின்ற நூல்கள்


- அரசு.வீ, (ப.ஆ) ப.ஜீவானந்தம் ஆக்கங்கள், இரு தொகுதிகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப.2007.
- கண்ணதாசன் கவிஞர், கண்ணதாசன் கவிதைகள், 6ஆவது தொகுதி, வானதிபதிப்பகம், சென்னை, 4ஆம் பதிப்பு, 1990.
- சேதுபதி.சொ.,முனைவர், காலத்தின் சாட்சியம் கம்பன் அடிப்பொடி, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு.ப.2014.
- சேதுபதி., காரைக்குடியில் ஜீவா, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப.2016.
- சோமலெ., செட்டிநாடும் செந்தமிழும், வானதி பதிப்பகம், சென்னை, 2ஆம் பதிப்பு, 1999.
- பழனியப்பன்.பழ, கம்பன்அடிகுடி, (தொ.ஆ), கம்பன் அடிப்பொடி கலைக்களஞ்சியம், உமா பதிப்பகம், சென்னை, மு.ப.2009.
- பாண்டியன்.தா., ஜீவாவும் நானும், விஜயா பதிப்பகம், கோவை, மு.ப.2002.
- பொன்னீலன், ஜீவா என்றொரு மானுடன், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2ஆம் பதிப்பு, 2003.
- பொன்னீலன், தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழகத்தின் ஆன்மிக வழிகாட்டி, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப. 2002.
- பொன்னீலன், ஜீவாவின் பன்முகம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப.,2007.
- பொன்னீலன், ஒரு ஜீவநதி, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப.2003.
- ஜீவபாரதி.கே., (தொ.ஆ), தேசத்தின் சொத்து ஜீவா, ராஜேஸ்வரி புத்தகநிலையம், சென்னை, மு.ப.2001.
- ஜீவபாரதி.கே., (தொ.ஆ), சட்டப்பேரவையில் ஜீவா, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, மு.ப.2012.
- ஜீவபாரதி.கே., (தொ.ஆ), ஜீவன் பிரிந்தபோதும் சிலையாக எழுந்தபோதும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, மு.ப.2012.
- ............உறவினர் நண்பர்களின் பார்வையில் ஜீவா, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு.ப.2007.
- ............நாடக சினிமாத்துறைக்கு வழிகாட்டி ஜீவா, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு.ப.2007.
- ............சோஷலிச யதார்த்தவாதம் பற்றி ஜீவா, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு.ப.2007.
- ............ஜீவா நினைவின் அலைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு.ப.2007.



***நன்றி: திரு.கம்பன் அடிகுடி பழ.பழனியப்பன், செயலாளர், கம்பன் கழகம், காரைக்குடி மற்றும் புகைப்படக்கலைஞர் திரு. சுப்பிரமணியன், சுந்தரம் ஸ்டுடியோ, காரைக்குடி.***



நியூ செஞ்சுரியின் சிறுநூல் வரிசையில்
புதிய வெளியீடுகள்
நியூ செஞ்சுரியின் சிறுநூல் வரிசை
சாதி எதிர்ப்பும் இடம்பெயர்க்கப்பட்ட பூர்வீகவாதமும்
விலை : ₹ 25/-
மீனாதண்டா
தமிழில்: சா. தேவதாஸ்
நியூ செஞ்சுரியின் சிறுநூல் வரிசை
தோழர் பீட்டர் மூராய்லின் மதநீக்கம்
விலை : ₹ 20/-
ஆ. சிவசுப்பிரமணியன்
நியூ செஞ்சுரியின் சிறுநூல் வரிசை
விலை : ₹ 30/-
பின்மார்க்சியவாதிகள்
ஒரு மார்க்சிய விமர்சனம்
ஜேம்ஸ் பெட்ராஸ்
தமிழில்: எஸ்.வி. உதயகுமார்
நியூ செஞ்சுரியின் சிறுநூல் வரிசை
கலை மெய்மை அரசியல்
விலை : ₹ 20/-
ஹெரால்ட் பின்ட்டர்
யமுனா ராஜேந்திரன்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098
044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in|www.ncbhpublisher.com

# நூல்கள் அறிமுகம்




**செருக்க வரவுக்காரனின் சூரி**
பாப்லோ அறிவுக்குயில்
*வெளியீடு: சாந்தி பப்ளிகேசன்ஸ்*
*18, தெற்கு மாடவீதி,*
*திருவல்லிக்கேணி, சென்னை - 600 005*
*ரூ.180/-*

இந்தியா டுடே, சுபமங்களா, கனவு, கவிதாசரண், புதிய கோடாங்கி உள்ளிட்ட பல்வேறு இதழ்களில் வெளிவந்த சிறுகதைகளின் தொகுப்பு. 15 கதைகள் கொண்ட இத்தொகுப்பில் எளிய மனிதர்களின் வலிகளும் வாழ்க்கைப்பாடுகளும் அதனதன் வாதைகளோடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இக்கதைகள் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வை அவர்கள் எதிர்கொள்ளும் துயரை மிக நுட்பமாக கனமும் இறுக்கமுமான மௌனத்தின் சாட்சியமாக பேசுபவை. தலித்திய பார்வை என்ற வட்டத்துக்குள் இருந்து வெளியேறி பொதுத்தளத்தில் அதிர்வை ஏற்படுத்துபவை. புதிய அனுபவவெளிக்கு இட்டுச்செல்லும் இச்சிறுகதைத் தொகுப்பை சாந்தி பப்ளிகேசன்ஸ் வெளியிட்டுள்ளது.




**செங்குருதியில் உறங்கும் இசை**
சிவகுமார் முத்தையா
*வெளியீடு: சாந்தி பப்ளிகேஷன்ஸ்*
*18, தெற்கு மாடவீதி,*
*திருவல்லிக்கேணி, சென்னை - 600 005*
*ரூ.190/-*

கணையாழி, தீராநதி, பேசும் புதிய சக்தி உள்ளிட்ட இதழ்களில் வெளிவந்த சிறுகதைகளின் தொகுப்பு. கணையாழியின் 'ஜெயகாந்தன் விருது' பெற்றவரான இந்நூலாசிரியர் தஞ்சை மண் சார்ந்த மக்களின் வாழ்வை அவர்களின் மொழியிலேயே கதைகளாக்கியுள்ளார். தஞ்சை வட்டார மக்களும் அவர்களின் நினைவடுக்குகளும், வாழ்க்கைப்பாடுகளும், ஒடுக்குமுறையும் வெவ்வேறு வடிவங்களில் இந்நூலில் காணக்கிடைக்கின்றன.

தஞ்சை மண்ணின் மொழிவளமும் தேர்ந்த வடிவநேர்த்தியும் கனமான கதையமைப்பும் கொண்ட இத்தொகுப்பை சாந்தி பப்ளிகேசன்ஸ் வெளியிட்டுள்ளது.

# வீழ்ச்சி கல்விச்சூழல், ஆசிரியர் இயக்கம் குறித்தான வரலாற்று புதினம்

## இசைக்கும்மணி



'வீழ்ச்சி என்பது எழுச்சிக்கான பதுங்குநிலை' என்பதை நம்பிக்கையுடனான வேதனை உணர்வில் ஆசிரியர் இயக்க எழுச்சி வரலாற்றை வெகு இயல்பான நடையில், ஒரு அருமையான புதினமாக படைத்தளித்துள்ளார் பன்முக எழுத்தாளரான ஆசிரியர் சுகுமாரன்.

ஆசிரியர் இயக்கச் செயல்பாடுகளை, அதன் வளர்ச்சிப் போக்கினை, அதன்வழி ஆசிரியர் சமூகத்திற்குப் பெற்றுத் தரப்பட்டுள்ள பொருளாதாரப் பலன்களை எல்லாம் கதைப்போக்கில் சொல்லிச் செல்கிறார். அந்த பலன்களை பெறுவதற்காக ஆசிரியர் சமூகம் இழந்திட்டவைகளை, பலியிட்டுள்ள உயிர்களை, உடைமைகளை, உறவுகளைப் பற்றியும் எடுத்துரைக்கின்றார்.

இயக்க மேன்மைக்காக மேற்கொண்ட கூட்டு இயக்கச் செயல்பாடுகளை, அவற்றின் தாக்கங்களை, இயக்கவியல் சார்ந்த அதன் வீழ்ச்சியினை, அதன் பின்னணியில் இருந்த எழுச்சி உணர்வின் நம்பிக்கையை வெறும் இயக்க வரலாற்றுப் பதிவாக அல்லாமல், புதின இலக்கிய வடிவத்தின் வழியாக மிக மிக எளிமையான வார்த்தைப் பிரயோகங்களால் வெளிப்படுத்தியிருக்கும் நேர்த்தியை இப்புதினத்தைப் படித்திடும் அனைவரும் பாராட்டத் தவறமாட்டார்கள்.

தனது முப்பதாண்டுகால ஆசிரியப் பணியின் ஊடாக, தன்னை ஒரு சமூக மனிதனாகவும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். லட்சக்கணக்கான ஆசிரியப் பணியாளர்களின் முன்னத்தி ஏர் ஆகி, தன்னலமற்றவராக தன்னை முன்னிறுத்திக் கொண்டு உள்ளார்.

குடும்ப உறவுகளை, நட்பு வட்டத்தை, சக ஆசிரியத் தோழமையை சீரான பழக்கவழக்கங்களால் தக்கவைத்துக் கொண்டும், அதே சமயத்தில் ஆசிரியர் இயக்கப் போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று, இயக்க வளர்ச்சிக்கான உந்து சக்தியாகவும் திகழ்ந்திருக்கிறார்.

ஆசிரியர் இயக்க மேம்பாட்டுக்காக உடன் நின்று, அவ்வப்போதைய சூழல் தாக்கத்தின் சிறுமைகளால் வேதனைப்பட்டு, மனம் தளர்ந்த தனது நிலைப்பாட்டை தங்கதுரை என்ற கதாபாத்திரம் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆசிரியர் பணி சூழ்ந்த கல்வி உலகத்தை, தனியார்மய நிர்வாகத்தை, அரசு அதிகார அராஜகங்களை அவைகளின் தாக்கத்தால் ஏற்பட்ட உயர்வு தாழ்வுகளை, பெருமை சிறுமைகளை வெகு சிறப்பான முறையில் புதினமாக முன்வைத்திருக் கிறார்.

இயக்கச் செயல்பாடுகளிலும், அமைப்பு ரீதியான தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபாடு கொண்டுள்ள அனைவருக்குமான கற்பிதத்தை முன்னிலைப்படுத்துவதாகவும் இந்தப் பதிவுகள் அமைந்திருக்கின்றன.

ஜனநாயகத்தின் தூண்களாக விளங்கி வருகின்ற இராணுவம், காவல்துறையினரின் நலன்களை, தேசப் பாதுகாப்பு நிலைமையைக் கருத்தில் கொண்டு, அரசு ஆட்சி அமைப்பு தானாகவே முன்வந்து நிறைவேற்றித் தருகிறது. ஆனால் அரசு ஆட்சி நிர்வாகத்திற்கு உறுதுணையாகவுள்ள அரசு ஊழியர்கள், அமைச்சுப்பணியாளர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோருடைய நலன்களை எல்லாம் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் கூட்டாகப் போராடிப் பெறு வதே நடைமுறையாக உள்ளது.

நீதித்துறை வழக்கறிஞர்களும், பத்திரிகை ஊடகவியலாளர்களும், திரைப்படத்துறையினரும் கூட கூட்டு நடிவடிக்கைகளை மேற்கொண்டே தங்களுடைய உரிமைகளை நலன்களை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆக கூட்டு இயக்கச் செயல்பாடுகளின் காலமாகத் திகழும் இன்றைய சூழலின் அத்தியாவசியத் தன்மைக்கு 'வீழ்ச்சி' புதினத்தின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஆசிரியர்- அரசு ஊழியர் கூட்டு இயக்கச் செயல்பாட்டு வடிவப் போராட்ட முறைப் படிப்பினைகள் ஒரு முன் மாதிரியானதாக அமைந்திருக்கிறது.

தங்கதுரை கதாபாத்திரத்தின் மூலமாக சுகுமாரன் குறிப்பிடுவதைப்போல, லட்சக்கணக்கான ஆயிரக்கணக்கானவர்களைக் கொண்ட இயக்கச் செயல்பாட்டில், அதன் போராட்டங்களில் பங்கேற் பவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் தான் என்பதே இயக்கத்தின் வீழ்ச்சி நிலையை உணர்த்துகிறது. அதிலும் அந்த போராட்டங்களில் பங்கேற்காத பலர் அந்தப் போராட்டத்தின் பலன்களைப் பெற முண்டியடித்து முன்நிற்பதும் வேதனையளிக்கிறது என்பதெல்லாம், எல்லா இயக்கச் செயல்பாடுகளின் நிலைப்பாடாகவே இருந்து வருகிறது.

அதுபோல, "போராட்டம் இல்லாமல் எந்த ஒரு இயக்கமும் செயல்பட முடியாது. ஒவ்வொரு போராட்டமும் நமக்கு ஒரு படிப்பினையாகிறது. போராட்டங்களிலிருந்து கற்றுக்கொள்வதுதான் முன்னேற்றத்துக்கான அறிகுறியாக இருக்கிறது" என்பது போன்ற கருத்துக்களும் தெளிவான உண்மையாயிருக்கிறது.

'வெற்றி பெறுவதல்ல பங்கேற்பதே முக்கிய' என்பதுதான் ஒலிம்பிக் போட்டிகளின் தாரக மந்திர மாக அனுசரிக்கப்படுகிறது. அதைப்போன்று, பல போராட்டங்களின் பங்கேற்புச் செயல்பாட்டின் நீட்சியே இயக்க வளர்ச்சியின் வெற்றியாக அமைந்து விடுகிறது என்பதை உணரவேண்டியதாக இருக்கிறது.

எட்டு மணிநேர உழைப்பு, எட்டுமணிநேர ஓய்வு, எட்டுமணிநேர உறக்கம் என்ற தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகள் எல்லாம் நூற்றாண்டு கால மேதினப் போராட்டங்களால் கிடைக்கப் பெற்றதுவே!

மாஸ்டர் இராமுண்ணி தலைமையிலான ஆசிரியர் இயக்கப் போராட்டத்தின் விளைவுகளே, ஆசிரியர்களுக்கு பல சலுகைகளை உரிமைகளை பெற்றுத் தந்திருக்கிறது. அதன் தொடர்ச்சியான பல கூட்டுச் செயல்பாட்டுப் போராட்டங்களே ஆசிரியப் பெருமக்களுக்கு ஒரு மதிப்பான நிம்மதி யான வாழ்க்கையை அமைத்துத் தந்திருக்கிறது.

கடந்த காலங்களில் அவ்வாறு போராடிப் பெற்ற அந்த உரிமைகளை இழந்திடும் நிலைமையை ஒருபோதும் சகித்துக்கொள்ள முடியாது என்றே புதினத்தின் நாயகர்களாக தங்கதுரையும் மார்ட்டினும் வெகுண்டெழுந்து ஆவேசப்படுகிறார்கள்.

'எதுவும் நிலையானதல்ல; மாற்றங்களுக்கு உட்பட்டதுதான். கட்டுண்டோம். காத்திருப் போம், காலம் மாற்றத்தினை கொண்டு வந்திடும்' என்ற நம்பிக்கை உணர்வை விதைத்திடும் பதிவு களே 'வீழ்ச்சி' புதினத்தின் வெளிப்பாடாகி நமக்கு உணர்த்தப்படுகிறது.

போராட்டங்களின் மூலம் வெறும் பொருளாதாரப் பலன்களைப் பெற்றுத் தருவது என்ற ஒற்றை நோக்கத்தின் பாற்பட்டதான ஒரு சேவை அமைப்பாக இயக்கம் செயல்படுவதுதான் அதன் வீழ்ச்சிக்குக் காரணம்.

சமூகப் பிரச்சினைகள் மற்றும் மக்கள் வாழ் வாதாரப் பிரச்சினைகள் என்பன பற்றியெல்லாம் கவனப்படுத்திடாமல் அதற்கான இயக்கங்களை மேற்கொள்ளவேண்டிய அரசியல் சமூக உணர் வினை ஊட்டிடாமல் இருப்பதும் ஆன குறை பாடுகள் எல்லாம் கதைமாந்தர்களால் எடுத்துரைக்கப் படுகிறது.

கல்விக்கண் திறந்த காமராசர் ஆட்சிக் காலத்தில் ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர் - இருபது மாண வர்கள் என்கிற முறைமை இருந்து வந்தது. இதனால்

ஆசிரியர்கள் நன்றாகப் பாடம் சொல்லிக் கொடுத்தனர். அரசுப்பள்ளிகளில் தரமான கல்வி கிடைத்தது.

ஐம்பது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என 1986ம் ஆண்டு கல்விக் கொள்கைப்படி அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அரசுப் பள்ளிகளில் குழந்தை களைப் படிக்க வைக்க பெற்றோர்கள் தயங்கினர். கிராமப்புறப் பள்ளிகளில் ஆசிரியர் இல்லாத நிலை என மக்கள் வெகுண்டெழுந்தனர், அரசுப் பள்ளி களே இல்லாமல் போய்விடும் அபாயநிலை உருவானது.

தரமான கல்வியைக் காசு கொடுத்து வாங்கு வதில் தவறில்லை. கட்டணம் வசூலிக்கப்படும் தனியார் பள்ளிகளில் கல்வி உயர்வாக இருக்கிறது. அரசுப்பள்ளிகளில் கல்வி இலவசமாகத் தரப்படு வதால் கல்வித்தரம் குறைந்திருக்கிறது என்றெல்லாம் கருத்துருவாக்கங்கள் ஊடகங்கள் மூலம் பரப்பு உரைக்கப்பட்டன.

பொதுத் தொண்டாக இருந்த கல்வியை புது வியாபாரமாக மாற்றுவதற்குதான் புதிய கல்விக் கொள்கையா என மக்கள் கல்வி சிந்தனையாளர் களான பேராசிரியர்கள் கோ.கேசவன், அ.மார்க்ஸ், கல்யாணி, மாடசாமி போன்றவர்கள் அதன் கேடுகளைப் பற்றி பேசினார்கள். இவற்றையெல்லாம் ஆசிரிய இயக்கங்கள் கவனப்படுத்திடவில்லை என்பதை தங்கதுரை வாயிலாக ஆசிரியர் இடித் துரைக்கிறார்.

2016ம் வருடத்திய புதிய கல்விக் கொள்கைக்கான வரைவு ஆவணம் வெளியிடப்பட்டுள்ளது, முப்பது ஆண்டுகளுக்கு முந்தைய அதே நடைமுறைக் காரணங்களே இதிலும் முன்வைக்கப்பட்டுள்ளன. கல்வி மேம்பாட்டுக்கான எந்த ஒரு பரிந்துரை களும் காணப்படவில்லை என இப்போதும் கல்வியாளர்களான பேராசிரியர் மணி, வசந்தி தேவி, பிரின்ஸ் கஜேந்திர பாபு, ஆயிஷா நடராஜன் போன்றவர்களே எதிர்ப்புக்குரல் கொடுக்கும் நிலைமையே உள்ளது.

பள்ளிப்படிப்புதான் ஒரு மனிதனை முழுமை யாக உருவாக்குகிறது. ஒரு குழந்தை மனிதனாக பரிணமிக்கத் தொடங்குவது தொடக்கப்பள்ளிப் படிப்பின் போதுதான். அவ்வாறான பெரும் பொறுப்பு ஆரம்பப்பள்ளி ஆசிரியரிடம் தான் இருக்கிறது. ஆகவேதான் அனைத்து ஆசிரியர் படிநிலையை விட ஆரம்பப்பள்ளி ஆசிரியர் படி நிலையே முதன்மையான சேவையாகப் பார்க்கப் படுகிறது என ஆசிரியப் பணியை சிறப்பித்துச் சொல்வதுண்டு.

“வேலைக்கு வந்த புதுசில் ஆசிரியர் வேலை குறித்தான இத்தகைய லட்சியக் கனவுகள் இருந்தன.




**வீழ்ச்சி**

**சுகுமாரன்**

**வெளியீடு: பாரதி புத்தகாலயம்**

**7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை,**

**சென்னை - 600 018**

**ரூ.210/-**

குழந்தைகளின் இதயத்தைத் தொடும் வாய்ப்பாக இருந்த ஆசிரியப்பணி குறித்து பெருமைப்பட்ட துண்டு. ஆனால் கல்விச் சூழலில் நிலவியிருந்த சிறுமைகள் எல்லாம் சோர்வடையச் செய்து விட்டன” என தனது செயல்பாட்டின் ஆற்றாமை வீழ்ச்சியை கதை நாயகன் தங்கதுரை வாயிலாக நயம்பட எடுத்துரைக்கின்றார் நூலாசிரியர் சுகுமாரன்.

கல்வியானது நல்ல மனிதனை, சிறந்த தேசத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்; பண்பாட்டை உருவாக்குவதிலும், நீதியும் சமத்துவமும் வளர்ச்சியும் மனிதமும் கொண்ட மாற்று உலகைக் காட்டும் முயற்சியிலும் துணைநிற்க வேண்டும்.

உலக மயம், தாராளமயம் இந்த சிறப்புகளை யெல்லாம் அழித்துவிட்டன. கல்வியானது இன்றைய சந்தைக்குத் தேவையான மனித எந்திரத்தை தயார் செய்து தருவது என்றாகிவிட்டது. கல்வி வணிக மயமாக தங்குதடையில்லாமல் அனுமதிக்கப் பட்டதால், இந்திய கல்வி அதன் ஆத்மாவை தொலைத்துவிட்டு நிற்கிறது.

கல்வியின் விழுமியங்களையெல்லாம் இவ் வாறான சோக நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக் கிறதே என்கிற சமூகக் கவலை புதிய நாயகனான தங்கதுரையை விசனப்படுத்திய அவை சக ஆசிரியர் களை, ஆசிரியர் இயக்கத்தை அக்கறை கொள்ள வைக்கவில்லையே என்ற பின்னடைவு நிலையும், மீண்டும் எழுச்சி கொள்வதற்கான உத்வேக நம்பிக் கையையும் ‘வீழ்ச்சி’யின் படைப்பாக்கமாக்கப் பட்டிருக்கிறது. இந்த இலக்கு நோக்கிய பயணத்தில் இப்படைப்பானது வெற்றி பெற்றிருக்கிறது என்றே கூறவேண்டியிருக்கிறது.

●



# பண்டைக் கவிஞர்களின் அமைதியாக்கச் சிந்தனைகள்

முனைவர் இரா. வெங்கடேசன்

புலவர் பெருமக்கள் தம்மையும் தம் நாட்டையும் புகழ்ந்து பாடும் வகையில் பண்பால் ஒழுகுதலே அரச வாழ்க்கையின் நோக்கமாகக் கருதி பண்டைய தமிழ் அரசர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். புலவர் போற்றும் வகையில் தமிழ் மன்னர்கள் நாட்டை ஆண்ட வரலாற்றுக் குறிப்புகளைச் சங்க இலக்கியங்கள்வழி அறியமுடிகின்றன. பண்டைய மன்னனொருவர் புலவர் புகழ்ந்து பாடாத வகையில் தாம் ஆட்சி செய்ய விரும்பாது வஞ்சின மொழி உரைத்த செய்தியைப் பழம்பாடல் ஒன்று இவ்வாறு சுட்டுகின்றது.

**'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவ னாக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்**
**புலவர் பாடாது வரைகஎன் நிலவரை'**

பாண்டிய நெடுஞ்செழியன், பகை மன்னரோடு புரியும் போரில் தோல்வியுற்றால் 'மாங்குடி மருதன் என்னும் சான்றோனை முதல்வனாகக் கொண்ட புலவர்கள், தம் நிலப்பகுதியைப் புகழ்ந்து பாடாமல் நிறுத்திக் கொள்ளும் வகையில் நிலைமை கெடுவதாகுக' என்று வஞ்சினம் உரைத்ததாக அந்தப் பழம்பாடல் தெரிவிக்கிறது.

மன்னர் உரைத்ததாக உள்ள இந்தச் செய்தி, பண்டைக் காலப் புலவர்களின் கவிப் புலமையை வெளிப்படுத்தி நிற்கின்றது. சங்கப் புலமைச் சமூகத்தின் பேராளுமையையும் உணரச் செய்விக்கிறது. மன்னராட்சி முறையில் அரசின் சிறப்பை மக்களிடம் எடுத்துச் சொல்லும் வகையில் 'புலவர்கள் பெருமக்கள்' மட்டுமே ஊடகமாகச் செயல்பட்டிருப்பதும் இங்குக் கருத்தில் கொள்ளத்தக்கது.

குறுநில மன்னர் அதியன் ஒருநாள் மலைப் பக்கமாய் வலம் வந்துகொண்டிருக்கும் பொழுது மிக அரிய நெல்லிக்கனி ஒன்று அவருக்குக் கிடைக்கப் பெற்றது. கிடைத்தற்கரிய கனியாயிற்றே என்ன செய்யலாம் என்ற சிந்தனையில், அதியன் அருகில் இருந்தவர்களிடம் ஆலோசனை கேட்கிறார். அவர்கள் 'இக் கனியை உண்பார் நெடுநாள் வாழ்வர்; அதனால் மன்னா நீ உண்ண வேண்டும்!' என்கின்றனர். அப்பொழுது அதியனுக்கு ஒரு சிந்தனை தோன்றி யிருக்கிறது. 'கனியைத் தாம் உண்ணுவதைக் காட்டிலும் பெரும்புலமை பெற்ற ஔவையார் உண்ணுதல் சிறப்பு' என்பதே அச்சிந்தனை. பின்னர் கனியை உண்ணாமல் மன்னர் அரண்மனைக்குக் கொண்டுவருகிறார். கனியின் சிறப்பை முதலில் சொன்னால் ஔவையார் உண்ணாமல்

மறுப்பார் எனக் கருதிய அதியன் சிறப்பைக் கூறாமல் உண்ணச் செய்கிறார். உண்ட பின்னர் அக்கனியின் சிறப்பை அதியன் ஔவையிடம் எடுத்துக் கூறுகிறார்.

அறிஞரை மதித்துப் போற்றிய அதியனின் இச்செய்கை ஔவையை அதிசயிக்க வைத்திருக்கிறது. இந்தச் செய்தியைச் சுட்டும் ஔவையார் பாட்டு புறநானூற்றில் (91) இடம்பெற்றுள்ளது. நாட்டை ஆளும் மன்னரைக் காட்டிலும் புலமையில் மிகுந்த புலவர்களே திறம் வாய்ந்தவர்கள் என்று பண்டைய அரசர்கள் கருதியுள்ளனர் என்பதை அதியனின் செயலிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

ஒருநாள் புலவரொருவர் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனிடம் பரிசில் கேட்டுச் செல்கிறார். புலவர் வறுமையின் உச்சநிலையில் இருக்கிறார். வறுமைதீர உடனடியாகப் பரிசில் வேண்டப்படுகின்றது. மன்னர் பரிசில் கொடுக்க காலம் தாழ்த்துகிறார். மன்னரின் இச்செயலைக் கண்டு புலவர் கோபமுற்று அவருக்கு அறிவுறுத்தும் பொருட்டு

**இடுமுள் படப்பை மறி மேய்ந்து ஒழிந்த**
**குறு நறு முஞ்ஞைக் கொடுங் கண் முற்றடகு**
**புன் புல வரகின் சொன்றியடு, பெறூஉம்,**
**சீறூர் மன்னர் ஆயினும் எம் வயின்**
**பாடு அறிந்து ஒழுகும் பண்பினோரே**

(புறம். 197: 10 –14).

என்று இகழ்ந்து பாடுகிறார். நீ பெரிய வேந்தனாக இருந்தும் என்ன பயன். வறுமையில் வந்து பரிசில் கேட்போருக்குக் காலமறிந்து உதவும் பண்பில்லாத உன்னைவிட 'வேலியில் படர்ந்த ஆடுமேய்ந்து எஞ்சிய முன்னையடகும் (முஞ்ஞைக் கீரை) நிலத்தில் விளைந்த எளிய வரகுச் சோறுமாகிய உணவைத் தருகின்ற சிற்றூர் வேந்தனே மதிக்கத்தக்கவன், துன்பம் அறிந்து உதவும் பண்பினன்' என்கிறார் அப்புலவர். அறம் தவறி அரசரை அஞ்சாமல் கடிந்து பாடிய புலவர்களும் பண்டைக் காலத்தில் இருந்துள்ளனர் என்பதை இப்புறநானூற்றுப் பாடல்வழி தெரிந்துகொள்ள முடிகிறது.

சோழ மன்னர்களாகிய நெடுங்கிள்ளிக்கும் நலங் கிள்ளிக்கும் இடையில் போர்கள் பல தொடர்ச்சியாக நிகழ்ந்து வந்துள்ளன. நலங்கிள்ளியின் போர்த்திறம் மிக்க படைபலத்தால் நெடுங்கிள்ளியே ஒவ்வொரு முறையும் தோல்வியுற்று வந்துள்ளார். தோல்விகள் பல கண்டிருந்த நெடுங்கிள்ளி வெற்றிபெறும் நோக்கில் மீண்டும் ஒருமுறை நலங்கிள்ளிமீது படையெடுக்கக் கருதி ஆவூர்க்கு அருகிலிருந்த கோட்டை ஒன்றைக் கைப்பற்றிக் கொண்டு, உள்ளே புகுந்து கதவை அடைத்துக் கொள்கிறார். தன்னூரிலேயே, தன்னருகிலேயே ஒர் ஊரில் அரணுக்குள் அடைந்துகிடக்கும் நெடுங் கிள்ளியை எதிர்த்துப் போரிட வேண்டும் என்று நலங்கிள்ளி முடிவுசெய்து படையுடன் சென்று ஆவூர் கோட்டையை முற்றுகையிட்டுக்கொள்கிறார். அப் பொழுது புலவர் ஒருவரும் அரசருடன் வந்திருக்கிறார்.

படையின் முற்றுகையால் ஆவூரின் இயல்பு நிலை முற்றாக முடங்கியிருந்தது. மக்கள் பெரிதும் துன்புற்றிருந்தனர். அரசருடன் வந்திருந்த புலவர் உயிர் களெல்லாம் துன்புறுவதைக் காண்கிறார். படையின் முற்றுகையினாலேயே இயல்புநிலை இப்படிப் பாதித் திருக்கிறதே! போர் நடைபெறத் தொடங்கினால் உயிர்களெல்லாம் மேலும் துன்புற நேரிடுமே! என்ற சிந்தனை புலவர்க்கு ஏற்படுகின்றது. உடனே போரினை நிறுத்த எண்ணிப் புலவருக்கே உள்ள உரிமையால் அரணுக்குள் சென்று நெடுங்கிள்ளியைக் கண்டு,

> 'அரசே, களிறுகள் பிடிகளோடு கூட்டமாய்ச் சென்று நீர் நிலையில் நீராடவில்லை; நெய் யோடு கலந்து நெற்சோற்றைப் பெருங்கவளமாய்க் கொண்டு உண்ணவும் இல்லை; தம்மைக் கட்டியிருக்கும் பெருந் தூண்கள் தளருமாறு நிலத்தின்மேல் புரளும் கையுடன் நின்றநிலை நிற்கவும் ஆற்றாது சுழலுகின்றன; துன்பத்தை வெளிப்படுத்தும் வகையில் அவை இடி முழக்கம் போல் முழங்கவும் செய்கின்றன. பால் கிடைக் காமல் குழந்தைகள் அழுகின்றன. பெண்கள் பூக்களைச் சூடாமல் வெறுங்கூந்தலை முடிக் கின்றனர். குடிமக்கள் நீர் கிடைக்காத காரணத்தால் பெருங் குரலெடுத்துக் கூப்பிட்டு அழுகின்றனர். இவ்வகைத் துயரங்கள் உன் கண்ணெதிரில் தோன்றவும், உன் முயற்சியில்லாக் குறையாலும் மனத்தளர்ச்சியாலும் மட்டுமே என்பதை அறியாது, கோட்டைக்குள்ளிருத்தல் தகாத செயலாகும். நீ அறமுடையவன் என்றால் மதிலை முற்றியிருக்கும் நலங்கிள்ளியிடம் சென்று 'இவ்வூர்' உன்னுடையது எனக் கூறிவிட்டு மதிலைத் திறந்துவிடு; வீரமுடையவன் என்றால் போரின் பொருட்டு மதிலைத் திறந்துவிடு. இவற்றைச் செய்யாமல் அறத்தையும் அழித்து மறத்தையும் மறந்து கோட்டைக்குள் அடங்கி யிருக்கும் உன் செயல் ஆராய்ந்து பார்த்தால் வெட்கப்பட வேண்டிய தன்மையுடையது'

என்று கூறுகிறார்.

புலவர் கூறிய கருத்தைக் கேட்ட நெடுங்கிள்ளி, ஆவூர்க் கோட்டையை விட்டுவிட்டு, நலங்கிள்ளி தொடர்ந்து வருவதற்கு முன்னரே உறையூர் சென்று, அங்குள்ள ஒரு கோட்டைக்குள் புகுந்துகொண்டு முன்போல் அடைத்துக்கொள்கிறார். நலங்கிள்ளி தன் படையோடு ஆவூரைக் கைப்பற்றிக்கொண்ட பிறகு உறையூர் வருகிறார். நெடுங்கிள்ளியின் செய்கையைக் கண்டு கடும் சினம் கொண்டு போரிடக் கருதிக் கோட்டையை முற்றுகையிட்டுக் கொள்கிறார். அரசரின் அருகிலிருந்த புலவர், அரசர் இருவரையும்



சமாதானப்படுத்த முற்படுகிறார். முன்போலவே கோட்டைக்குள் சென்று நெடுங்கிள்ளியைக் காண்கிறார். அவரை நல்வழிப்படுத்திப் போரைத் தவிர்க்கும் நோக்கத்தில் புலவர் இக் கருத்தமைந்த பாடலைப் பாடுகிறார்.

> நெடுங்கிள்ளியே, இப்பொழுது உன்னோடு போர் செய்யக் கருதி அரணுக்குப் புறத்தே முற்றுகை செய்திருப்பவன் பனை மாலை சூடும் சேரர் குலத்தவன் இல்லை; வேப்ப மாலை சூடும் பாண்டியர் குடியில் பிறந்தவனும் இல்லை. உன்னுடைய மாலையும் ஆத்திப் பூவால் தொடுக்கப்பட்டது; அவனது மாலையும் ஆத்திப் பூவாலானதுதான். இருவருள் யார் ஒருவர் தோற்றாலும் தோற்பவர் சோழர் குடியினரே யாவர். இருவரும் போரில் வெற்றி பெறுவது என்பது உலக இயல்பும் அன்று. எனவே உன் செயல் உன் சோழர் குடிப்பெருமைக்கு உரிய தன்று; உன் செயல் பகையரசருக்கு மட்டுமே உவகை தரும் தன்மையது. ஒரு குடியில் பிறந்த இருவரும் பகைப்பது அழிவையே தரும். இதனால் போரைத் தவிர்த்து அமைதி காண முயல வேண்டும்.

புலவரின் கருத்தைக் கேட்ட மன்னர்கள் போரைத் தவிர்த்துவிட்டுச் சமாதானம் அடைகின்றனர். இக் கருத்தமைந்த இரு பாடல்களும் புறநானூற்றில் (44, 45) இடம்பெற்றுள்ளன. நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்னும் இரு சோழ அரசர்களுக்குள்ளும் நிலவியிருந்த நெடும்பகையை நீக்கிச் சமாதானப்படுத்திச் சோழ நாட்டில் அமைதி காணச்செய்தவர் புலவர் 'கோவூர் கிழார்' என்னும் சங்கப் புலவர் ஆவார். இவர் பாடிய பாடல்களாக நற்றிணையில் (393) ஒன்றும், குறுந்தொகையில் (65) ஒன்றும், புறநானூற்றில் பதினைந்தும் காணப்படுகின்றன. திருவள்ளுவ மாலையில் ஒரு பாடலும் இவர் பெயரில் உள்ளது.

கோவூர் கிழார் இன்னொரு அரிய செயலையும் செய்திருப்பதை சங்கப் பாடலொன்றின் வழி அறிய முடிகின்றது. நெடுங்கிள்ளி உறையூரில் இருந்த காலத்தில் நலங்கிள்ளியிடம் பரிசில் பெற்றுப் பழகிய இளந்தத்தனார் எனும் புலவர் நலங்கிள்ளியைப் போலவே நெடுங்கிள்ளியும் புலவரை ஆதரிப்பர் என்று கருதி அவனிடம் பரிசில் பெறச் சென்றுள்ளார். புலவர் வந்த உண்மைக் கருத்தை உணராது, நெடுங்கிள்ளி அவர் தன் பகைவரிடமிருந்து தன்னிடம் ஒற்றாட வந்த ஒற்றர் என ஐயம்கொண்டு புலவரைக் கொல்லத் துணிகிறார். இந்தச் செய்தியை அறிந்த கோவூர்கிழார் நெடுங்கிள்ளியிடம் சென்று,

> 'இரவலர், நன்கு பழுத்த பழங்களைக் கொண்ட மரத்தைத் தேர்ந்து செல்லும் பறவை போலக் கொடையாளரைத் தேடிச் செல்வர்; கடந்து செல்வதற்கரிய நீண்டவழி எனக் கருதாது பல வழிகளையும் கடந்து செல்வர்; குற்றமில்லாத தெளிந்த சொற்களால் தமக்கியன்றவாறு பாடல்கள் பாடிப் பரிசில் பெறுவர். பெறும் பரிசிலைத் தாமும் உண்டு சுற்றத்தாருக்கும் கொடுத்து மகிழ்வர். இத்தகைய இயல்புடைய பரிசிலர் உள்ளம் பிறருக்குத் தீமை புரிய அறியாது'

எனும் பொருளமைந்த பாடலைப் பாடுகிறார். பரிசில் பெற்று வாழும் தன்மையுடைய புலவர் பிறருக்குத் தீங்கு

செய்யும் எண்ணம் இல்லாதவர் என்ற அறநெறியை, புலவருக்குரிய இயல்பைத் தெரிவித்து, புலவர் இளந்தத்தனாரை நெடுங்கிள்ளி கொல்லா வகையில் பாதுகாத்துள்ளார் கோவூர் கிழார். புறநானூற்றில் உள்ள இப்பாடல்,

வள்ளியோர்ப் படர்ந்து, புள்ளின் போகி,
'நெடிய' என்னாது சுரம் பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடி,
பெற்றது மகிழ்ந்து, சுற்றம் அருத்தி,
ஓம்பாது உண்டு, கூம்பாது வீசி,
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீது அறிந்தன்றோ வின்றே! இன்றே;
(புறம். 47)

என வருகின்றது. நலங்கிள்ளி ஆதரித்துப் போற்றிய புலவர் இளந்தத்தனாரை நெடுங்கிள்ளி கொன்றிருப்பார் என்றால் இரு மன்னர்களுக்கு இடையே பகை தோன்றி, போர் நிகழ வாய்ப்பேற்பட்டிருக்கும். கோவூர்கிழார் தம் புலமைத் திறத்தால் புலவரைக் காத்துப் போர் எழாத சூழலை ஏற்படுத்தியுள்ளார். இவைகள் பண்டைக் காலப் புலவர்களின் அமைதியாக்கச் சிந்தனைகளாக கிடைக்கப்பெறுகின்றன.

கோவூர்கிழார் சோழ மன்னர் கிள்ளிவளவனுடனும் நெருங்கிப்பழகி வந்துள்ளார். கிள்ளிவளவனுக்கும் மலைய மான் எனும் அரசனுக்கும் பெரும் பகை இருந்தது. சிற்றரசனாக இருந்த மலையமானைப் பெரு வேந்தரான சோழமன்னர் கிள்ளிவளவனால் அடக்கியாள முடிய வில்லை. பகை முற்றியிருந்த கிள்ளிவளவன் ஒருநாள் மலையமானின் பிள்ளையைச் சிறை பிடித்துக் கொண்டு வந்து தனது பட்டத்து யானையின் காலில் இட்டுக் கொன்று, பகைவனது மரபின் வளர்ச்சியை அழிக்கக் கருதுகிறார். கோவூர்கிழார் இச்செய்தியை அறிந்து யானையை நடத்திக் குழந்தைகளைக் கொல்லத் திட்டமிட்டிருக்கும் பொது மன்றத்திற்கு விரைந்து வருகிறார். மலையமானின் பிள்ளைபடும் துன்ப நிலையைக் கண்டார்; தம்மை மறந்து, களிற்றின் கால் அருகில் சென்று, குழந்தையை எடுத்துத் தழுவிக் கொள்கிறார். சினமும் பகையும் மிகுந்திருந்த கிள்ளி வளவன் முகத்தோற்றத்தைக் கண்டு இவ்வாறு பாடுகிறார்:

நீயே புறவின் அல்லல் அன்றியும், பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;
இவரே, புலன் உழுது உண்மார் புன்கண் அஞ்சி,
தமது பகுத்து உண்ணும் தண் நிழல் வாழ்நர்;
களிறு கண்யு அழூஉம் அழாஅல் மறந்த
புன் தலைச் சிறாஅர்; மன்று மருண்டு நோக்கி,
விருந்தின் புன்கணோ உடையர்;
கேட்டனை ஆயின், நீ வேட்டது செய்ம்மே! (புறம். 46)

அதாவது, 'நீ புறாவின் துன்பம் மட்டுமின்றிப் பிற உயிர்களின் துன்பத்தையும் தீர்த்த சோழப் பரம்பரையில் வந்தவர். இச்சிறுவரோ, அறிவால் வாழும் புலவர்களின் வறுமை போக்கும் அளவில் தம் பொருளைப் பகுத்துண்ணும் மரபில் பிறந்தவர். இவர் கொல்லவரும் களிற்றைக் கண்டு அஞ்சி அழுவதை மறந்து சிரித்து விளையாடும் குழந்தையாவர். பலரும் கூடியுள்ள பொது மன்றத்தைக் கண்டு அச்சத்துடன் பார்த்து வருத்தம் அடையும் தன்மையர். நான் சொல்வதையெல்லாம் கேள், இல்லையானால் நீ விரும்பியதைச் செய்' என்று அரசனைப் பார்த்துப் பாடுகிறார் புலவர்.

புலவர் சொல்வதைக் கேட்ட கிள்ளிவளவன் சிறுவரை விடுதலை செய்து அவரிடம் ஒப்படைத் திருக்கிறார். புலவரும் அச்சிறுவரை அழைத்துப் போய் மலையமானிடம் சேர்த்திருக்கிறார். மலையமானின் பிள்ளையைக் கிள்ளிவளவன் கொன்றிருப்பாரே யானால் இருவருக்கும் தீராப் பகை ஏற்பட்டுப் போரும் நடைபெற வாய்ப்பேற்பட்டிருக்கும். தம் புலமைத் திறத்தால் பகையை நீக்கி போரைத் தவிர்த்துள்ளார் கோவூர்கிழார். எல்லை கடந்து பகை நாட்டிற்குள் புகுந்த ஓர் அரசரைப் புலமைத் திறத்தால் காத்திருக் கிறார் மற்றொரு பண்டைப் புலவரான உறையூர் ஏணிசேரி முடமோசியார்.

உறையூரை ஆண்டுகொண்டிருந்த மன்னர் கோப்பெருநற்கிள்ளி ஒருநாள் யானை மேலமர்ந்து, நாட்டைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகிறார். தன் நாட்டு எல்லைப் பகுதியை அவர் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தபோது, அவர் ஏறிவந்த யானை மதம் பிடித்து வேகமாக ஓடத் தொடங்கியது. இதனைக் கண்ட சோழப் படைவீரர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து, யானையை நிறுத்துவதற்காக ஓடுகின்றனர். ஆனால், யானையோ மேலும் மிரண்டு எல்லைப் பகுதியைத்தாண்டி ஓடுகிறது. சோழ நாட்டின் எல்லையைக் கடந்த யானை, சேர நாட்டெல்லைக்குள் பிளிறியபடியே ஓடியது. சோழப் படைவீரர்கள் யானை மீது அம்பு எறிந்தாவது, யானையை நிறுத்திவிட எண்ணி அம்பு, வில், வாள் கொண்டு யானையைப் பின்தொடர் கின்றனர். யானையானது, பகை அரசர் சேரமான் அந்துவஞ்சேரலின் நாட்டிற்குள் நுழைந்து அரண் மனையை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது.

அரண்மனை மாடத்தில் அந்துவன்சேரல் இரும் பொறை முடமோசியாருடன் பாடல் பாடக்கேட்டு மகிழ்ந்து உரையாடிக்கொண்டிருக்கிறார். புலவரின் கண்ணெதிரே இருந்த பெருந்தெருவில் மதம் கொண்ட யானையின்மீது சோழன் முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி விரைந்து வந்துகொண்டிருந்தார். அவரை மாடத்திலிருந்த முடமோசியார் காண்கிறார். சேர மன்னரும் காண்கிறார். புலவருக்குத் தன் நண்பனாகிய சோழ மன்னன் பகை நாட்டில் புகுந்தமையால் ஆபத்தின்றித் திரும்ப வேண்டுமே என்ற எண்ணம் தோன்றுகிறது. சேரனுக்கோ, 'நம் பகைவனாகிய இவன் இங்கு எப்படி வந்தான்? முன்னறிவிப்பின்றி நம்மீது

படையெடுத்து வருகின்றானோ? என்ற எண்ணம் தோன்றுகிறது. சேரனின் உள்ளத்தில் தோன்றிய எண்ணத்தை முகக் குறிப்பால் கண்டுகொண்ட முடமோசியார் இப் பாடலைப் பாடுகிறார்.

'இவன் யார்?' என்குவை ஆயின், இவனே
புலி நிறக் கவசம் பூம் பொறி சிதைய,
எய் கணை கிழித்த பகட்டு எழில் மார்பின்,
மறலி அன்ன களிற்று மிசையோனே;
களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்,
பல் மீன் நாப்பண் திங்கள் போலவும்,
சுறவினத்து அன்ன வாளோர் மொய்ப்ப,
மரீஇயோர் அறியாது, மைந்து பட்டன்றே;
நோய் இலன் ஆகிப் பெயர்கதில் அம்ம!
பழன மஞ்ஞை உகுத்த பீலி
கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும்,
கொழு மீன், விளைந்த கள்ளின்,
விழு நீர் வேலி நாடு கிழவோனே (புறம். 13)

'இவன் யார் என்று கேட்டால்? மிகச்சிறந்த வளங்கள் நிறைந்த சோழ நாட்டைச் சேர்ந்தவன். கொழுத்த மீன்கள் வாழும் நீர்நிலைகளையும், நெற் கதிர்களையுடைய வயல்வெளிகளையும் உடைய நாட்டை ஆள்கின்ற சோழ மன்னன் இவன்தான். நாட்டு வளம் போலவே படை வளமும் மிக்கவன். பகைவர் எய்தும் அம்பினை தன் மார்பில் தாங்கும் வலிமை மிக்கவன். இப்போது இவன் இங்குப் போரிட வர வில்லை, இவன் ஏறியுள்ள யானை மதம் பிடித்து ஓடி வருகின்றது. தன் பாகரும் அறியாதபடி மதங்கொண்ட இந்த யானையின் மீதுள்ள மன்னனைக் காப்பாற்றவே, இவனது படைவீரர்கள் பின்னால் ஓடி வருகின்றனர். உன்னோடு போரிட இங்கு வரவில்லை. யாருக்கும் தீங்கிழைக்கவும் வரவில்லை. மதம் பிடித்த யானையே அவனை இங்குக் கொண்டு வந்திருக்கிறது. எனவே, மிகச்சிறந்த வீரனான இச்சோழன் எத்தகைய துன்பமும் இல்லாமல் இங்கிருந்து செல்ல அனுமதிப்பாயாக'

புலவரின் அன்பைக் கண்ட சேர மன்னன் வியப்புற்றுச் சோழ மன்னரைச் சிறை பிடிக்கும் எண்ணத்தை கைவிடுகிறார். சோழ மன்னரும் துன்பம் ஏதுமின்றித் தன் நாட்டிற்குத் திரும்பிச் சென்று சேருகிறார். மன்னன் உடனிருந்தும் எதிரிநாட்டு மன்னனை வாழ்த்திப் பகை ஏற்படாத வகையில் நல்ல சூழலை ஏற்படுத்திய புலவரின் புலமைத் திறத்தைப் புறநானூற்றுப் பாடல்வழி அறிந்துகொள்ள முடிகின்றது.

குமண நாட்டை ஆண்டுவந்த 'குமணன்' எனும் மன்னரைத் தன் தம்பியாகிய இளங்குமணன் நாட்டை விட்டு விரட்டியடித்துவிட்டு ஆட்சி புரிந்து வருகிறார். நாட்டைவிட்டு விரட்டப்பட்ட குமணன் காட்டில் வாழ்ந்து வருகிறார். இளங்குமணன் அண்ணனாகிய குமணனின் தலையை வெட்டிக் கொண்டுவருபவருக்கு ஆயிரம் பொற்காசுகள் தருவதாக அறிவித்திருந்தார்.

இந்த நேரத்தில் குமணனின் கொடைச் சிறப்பை அறிந்திருந்த பெருந்தலைச் சாத்தனார் எனும் புலவர் பரிசில்பெறும் நோக்கத்துடன் காட்டில் சென்று குமணனைச் சந்திக்கிறார். குமணனிருந்த நிலையை அறிந்தும் தாம் வந்த செய்தியைப் புலவர் இவ்வாறு பாடுகிறார்:

ஆடு நனி மறந்த கோடு உயர் அடுப்பின்
ஆம்பி பூப்ப, தேம்பு பசி உழவா,
பாஅல் இன்மையின் தோலொடு திரங்கி,
இல்லி தூர்த்த பொல்லா வறு முலை
சுவைத் தொறு அழூஉம் தன் மகத்து முகம் நோக்கி,
நீரொடு நிறைந்த ஈர்இதழ் மழைக்கண் என்
மனையோள் எவ்வம் நோக்கி, நினைஇ,
நிற் படர்ந்திசினே - நல் போர்க் குமண! -
என் நிலை அறிந்தனை ஆயின், இந்நிலைத்
தொடுத்தும் கொள்ளாது அமையலென் - அடுக்கிய
பண் அமை நரம்பின் பச்சை நல் யாழ்,
மண் அமை முழவின், வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப் பிறந்தோயே (புறம். 164)

'உணவு சமைக்கும் அடுப்பில் காளான் பூத்துள்ளது. பசியால் வருந்தி வாடும் மனைவியிடம் தாய்ப்பால் இல்லாததால் குழந்தை பசியால் அழுகிறது. குழந்தையின் முகத்தைப் பார்த்து என் மனைவி அழுகின்றாள். என் மனைவியின் வருத்தத்தைப் பார்த்துக் கொண்டு என்னால் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. என் குடும்ப வருத்தத்தைத் தீர்க்கக்கூடிய அளவில் உதவிபுரியத்தக்க வள்ளல் நீயென நினைத்து உன்னிடம் வந்தேன். நீ, பாணரது வறுமையைப் போக்கும் வள்ளல் தன்மையைக் கொண்ட குடியில் பிறந்தவன். இப்பொழுது உதவி செய்யும் நிலையில் நீ இல்லை என்பதை நான் அறிவேன். ஆனால் உன்னை வளைத்து வலிந்தேனும் பரிசில் பெறாமல் செல்ல மாட்டேன்' என்கிறார் புலவர்.

வறுமையில் வாடுபவர்களுக்கு உதவி செய்து பழகிய குமணன், இளங்குமணன் அறிவித்த செய்தியைப் புலவரிடம் எடுத்துக்கூறி, தன் தலையைக் கொண்டு போய் அவனிடம் கொடுத்து ஆயிரம்பொன் பெறுமாறு சொல்லி வாளினைப் புலவர் கையில் கொடுக்கிறார். குமணன் செய்த செயலைக் கண்ட பெருந்தலைச் சாத்தனார் தம் வறுமையை மறந்து அவரைக் காப்பாற்ற என்ன செய்யலாம் என்ற சிந்தனையில் ஆழ்ந்து போகிறார். சிறிது நேரத்தில் 'அரசே! எனக்குப் பரிசிலாகக் கொடுத்த உனது தலையை நான் திரும்பி வரும்வரை காப்பாற்றியிருக்க வேண்டும், என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுச் சென்றுவிடுகிறார்.

குமணனிடமிருந்து விடைபெற்றுச் சென்ற புலவர், அருகிலிருந்த மாந்தை எனும் ஊரில் வாழ்ந்த சிற்பியைக் கண்டு, தம் கருத்தைத் தெரிவித்துக் குமணன் தலைபோல ஒன்றைச் செய்யச் சொல்லி, அதைப் பெற்றுக் கொண்டு இளங்குமணனைச் சந்திக்கச் செல்கிறார்.

குமணன் தலையை ஒருவர் கொண்டுவந்திருக்கிறார் என்ற செய்தி இளங்குமணனுக்குத் தெரிவிக்கப்பட்டது. தலையைப் பார்ப்பதற்கு ஆவலோடு வருகிறார் மன்னர். புலவர் கொண்டுவந்த பொய்த்தலையைப் பார்த்துச் சகோதர பாசத்தால் அழுது புலம்புகிறார் மன்னர். மன்னர் தன் தவறை மறந்து மனம் திருந்திய பின்னர் இந்தப் பாடலைப் பாடுகிறார் சாத்தனார்.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே!
துன் அருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்,
இன்மையின் இரப்போர்க்கு ஈஇயாமையின்,
தொன்மை மாக்களின் தொடர்பு அறியளரே;
தாள் தாழ் படு மணி இரட்டும், பூ நுதல்,
ஆடு இயல் யானை பாடுநர்க்கு அருகாக்
கேடு இல் நல் இசை வய மான் தோன்றலைப்
பாடி நின்றெனனாகக் கொன்னே
பாடு பெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என்
நாடு இழந்ததனினும் நனி இன்னாது என,
வாள் தந்தனனே, தலை எனக்கு ஈய,
தன்னின் சிறந்தது ரிது ஒன்று இன்மையின்;
ஆடு மலி உவகையொடு வருவல்,
ஓடாப் பூட்கை நின் கிழமையோற் கண்டே (புறம். 165)

'நிலையற்ற வாழ்க்கையில் தாம் நிலைக்க வேண்டும் என்று கருதியவர்கள் வறியவர்களுக்கு உதவும் அறச் செயல்கள் செய்து தம் புகழை உலகத்தில் நிலைநிறுத்தித் தன் உயிரைத் துறந்துள்ளனர். எளிதில் அணுகிப் பொருள் பெறாத வகையில் வாழ்ந்த செல்வர்கள் தம் புகழை உலகில் நிறுத்தாமல் மறைந்து போயுள்ளனர். தாளின்கண் தாழ்ந்த ஓசையையுடைய மணிகள் ஒன்றுக்கொன்று மாறி ஒலிக்கும், புள்ளியமைந்த நெற்றியையுடைய யானைகளைப் புலவர்களுக்குக் கொடுக்கும் அழிவற்ற நல்ல குணம் படைத்த தலைவனைப் பாடி நின்றேன். 'சிறப்புடைய ஒரு புலவன் பரிசில் கேட்டுவந்து பரிசில் கிடைக்காமல் வாடிச் செல்லுதல் என் நாட்டை இழப்பதைக் காட்டிலும் மிகவும் துன்பம் தருவதாகும்' என என்னிடம் கூறி, காட்டில் தருவதற்கு என்னிடம் என்னைத் தவிர வேறு பொருளில்லை என்பதால் தலையைப் பரிசாகத் தருவதற்கு என்னிடம் வாளைத் தந்தான். ஆண்மை சிறந்த உன் தமையனைக் கண்டு அவன் செய்த செயலை மகிழ்ந்து உன்னிடம் வந்தேன்.'

பெருந்தலைச் சாத்தனார் பாடக் கேட்ட இளங்குமணன் பகை மறந்து அண்ணன் குமணனைக் காட்டிலிருந்து அழைத்து வந்து முடிசூட்டி நாடாளச் செய்துள்ளார். உடன்பிறந்தார் இருவருக்கும் உள்ளிருந்த பகையைப் போக்கி ஒற்றுமை ஏற்படுத்தும் வகையில் புலவர் பாடிய புறநானூற்றுப் பாடல் வரலாற்றுச் சிறப்புமிக்கதாக உள்ளது. ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் உடன் பிறந்தார் இருவரும் போரிட்டுக் கொண்டால் நாடு அமைதியான நிலையில் இருக்காது; மக்களும் துன்பம் அடைவார்கள் என்பதைப் புலவர் உணர்ந்து, நாட்டின் அமைதிக்காகப் புலவர் மேற்கொண்ட முயற்சி காலத்திற்கும் வேண்டப்படும் ஒன்றாகும்.

கோவூர்கிழார் என்னும் பண்டைப் புலவர், ஓர் அரசர் குலத்திற்குள் (நெடுங்கிள்ளி - நலங்கிள்ளி) நிலவிய பகையை நீக்கிப் போர் நிகழாத வகையில் அமைதிச் சூழலை உருவாக்கியுள்ளார். பண்டைப் புலவரின் இந்த அமைதியாக்கச் சிந்தனை சமகாலச் சூழலுக்கு மிகவும் வேண்டப்படுவதாகும்.

பேரரசுக்கும் (சோழன் கிள்ளி வளவன்) சிற்றரசுக்கும் (மலையமான்) இடையில் நிலவிய பகையைப் போக்கிய அளவிலும் அமைதியாக்கச் சிந்தனையை அளித்துச் சென்றுள்ளார் கோவூர்கிழார் எனும் பண்டைப் புலவர்.

வேற்றுகுலத்து அரசர் ஒருவர் பகை நாட்டிற்குள் எல்லை தாண்டிச் சென்றால் போர் நிகழவே வாய்ப் புள்ளது. சங்கப் புலவர் உறையூர் ஏணிசேரி முடமோசியார், எல்லை தாண்டிப் பகை நாட்டிற்குள் சென்ற அரசரையும் (சோழன் முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளி) தம் புலமைத் திறத்தால் பத்திரமாக மீட்டனுப்பி பகை மன்னரையும் (சேரமான் அஞ்சுவள் சேறல் இரும் பொறை) மனங்கொள்ளச் செய்துள்ளார் என்பது புறநானூற்றுப் பாடலால் அறியவருகின்றது.

பெருந்தலைச் சாத்தனார் என்னும் சங்கப் புலவர் குமணன் - இளங்குமணன் ஆகிய சகோதரர்கள் இருவருக்கும் ஆட்சி உரிமையில் இருந்த பகையை நீக்கி நாட்டில் அமைதிச் சூழலை உருவாக்கியுள்ளார். உறவுகளுக்குள் நிலவிய பகையைப் போக்கிய அளவிலும் பண்டைக் கவிஞர்களின் அமைதியாக்கச் சிந்தனைகளைக் காணமுடிகின்றன. பரிசில் தர காலம் கடத்திய மன்னரை, மன்னரென்றும் கருதாமல் கண்டித்துப் பாடியதும், அரசர்களுக்குள் ஏற்பட்டிருந்த பகையை நீக்கிப் பாடியதும் பண்டைப் புலவர்களின் தனித்து நோக்கும் சிந்தனைகளாக உள்ளன. பண்டைக் காலப் புலவர்களின் இவ்வகைச் சிந்தனைகள் நம் காலத்துப் படைப்பாளர்களுக்கு மிகவும் தேவைப்படுவனவாகும் என்பதைப் படைப்புச்சூழல் உணரச்செய்கிறது.

## துணைநின்ற நூல்கள்


1. சாமிநாதையர் உ.வே. (ப.ஆ.). 1894. புறநானூறு மூலமும் பழைய உரையும், சென்னை: ஜூபிலி அச்சுக்கூடம்.
2. பரிமணம், அ.ம. & பாலசுப்பிரமணியன், கு. வெ. (ப. ஆ.); செயபால் (உ.ஆ.). 2011 (4ஆம் பதிப்பு). புறநானூறு மூலமும் உரையும் (தொகுதி1, 2) சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.